உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௭	பிரசோற்பத்தி, மார்கழி	மலர் ௯

உ

கல்வி நிலை

திரு. இ. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக் கல்லூரி, திருவையாறு.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

இவ்வைந்தெழுத்துத் தழுவுதொடர்மொழிப் பொருளை யாராய்வுழிக் கற்றலும் நிற்றலும் என உம்மைத்தொகையாகவும், கல்வியே நிலைமையினையுடையது என எழுவாய்த் தொடராகவும், கல்வியினது தன்மை (நிலைமை) என ஆறும் வேற்றுமைத் தொகையாகவும் பொருள் கோடல் ஏற்புடைத்தாம்.

கல்வி-கற்றல். கல், பகுதி; வி, தொழிற்பெயர்விகுதி. நிலை, நிற்றல். நில் பகுதி; ஐ தொழிற்பெயர்விகுதி. கல்வி என்பதற்கு அறியாமையைக் கல்லுவது எனப்பொருளாம். அறியாமையைக் கல்லின் அறிவுடைமை சித்திக்கப்பெறும் என்பது போந்த பொருளாம். அங்ஙனம், இயற்கையறிவோடு செயற்கையறிவாகிய கல்வியறிவுற்றஞான்று, இல்லறவழிபொழுகிநிற்றலும்,

(நிலை-நிற்றல்,) துறவறவழியொழுகி நிற்றலும் என நிலை யிருவகைப்படும். ஆகவே கற்றலும் நிற்றலும் எனவும்மைத் தொகையாக்கப்பட்டது.

கல்வியெனு மொழியானது நூலையும், அறிவையும், கற்றல் எனும் தொழிலையும் உணர்த்தும். இப்பொருள் கொள்ளுமிடங் களாகக்-"கல்வி கரையில" என்புழி நூலையும், "கேடில்விழுச் செல்வங் கல்வி" என்புழி யறிவையும், "இளமையிற்கல்" 'இளமையிற் கல்வி சிலையிலெழுத்' தென்புழிக் கற்றலையும் 'கல்வி' உணர்த்துதல் காண்க.

இக்கல்விக்கு ஒத்த பொருளுடைப் பெயர்களுமுண்டு. அவை-வித்தை, பயிற்சி, படிப்பு, கேட்டல் முதலியவையாம்.

இனி யிங்ஙனங் கல்வியெனுஞ் சொல்லுக்குப் பொருள் கொள்ளவே, இறைவனுலாக்கப்பட்ட மொழிகளோடு ஒற்றுமை யுடைத்தாம். எங்ஙனமெனில், அவ்வம்மொழிகளிலுள்ள நூல்களைக் கற்றலாலும், கற்றலால் நுண்ணறிவு பல்குதலாலும் என்க.

ஈண்டு மொழிகள் எத்துணையவெனவாராயவேண்டுவதும் இன்றியமையாமையின்பாலதாகின்றது. மொழியியல்பாவது யாதெனவாராய்வுழி சொல்லின் றன்மையெனப் பொருள்படும். "மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி, எழுத்தது முதல் சார் பெனவிரு வகைத்தே" எனவும், "எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற், பதமாமதுபகாப் பதம்பகுபதமென, விருபா லாகி யியலு மென்ப" எனவும் வருஞ்சூத்திரங்களான், எழுத்தின்விகாரத்தாற் பதமாகி பதங்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நின்று வாக்கியமாகிய பொருளை யறிவுறுப்பதே மொழியாகும்.

இனியொருவகையாக ஆய்குதும். மலர்தலையுலகத்துச் செவிப்புலனும் ஓசை எழுத்தோசை யெனவும், இசையோசை யெனவும் இருவகைப்படும். இவற்றுள் எழுத்தோசை விந்து முதற்காரணமாக அதினின்றும் விருத்தியாய்த் தோன்றிச் செவிப்புலனுவது. இசையோசை ஆகாய முதற்காரணமாக

அதன்கட்டோன்றிச் செவிப்புலனுவது. சத்ததன்மாத்திரையின் காரியமாகிய ஆகாயமே சத்தத்திற்கெல்லாங் காரணமாகலின் எழுத்தோசைக்குவேறுகாரணம்ஆமாறென்னெனின் அற்றன்று. ஆகாயம் எழுத்தோசையைப் புலப்படுத்துவதாகிய இசையோசைக்குக்காரணமாவதன்றி அதனுற் புலப்படுவதாகிய எழுத்தோசைக்குக் காரணமாகாதென்க. ஒளியும், உருவமும்போலப் புலப்படுப்பதும் புலப்படுவதுமாகிய இசையோசைக்கும் எழுத்தோசைக்கும் தம்முள் வேற்றுமை அனுபவத்தின் வெளிப்படத்தோன்றுதலானும் அவ்வுண்மை அறிக.

கடலோசை, சங்கோசை, முற்கு, வீளை முதலியன எழுத்தோசையின் வேறுதல் எல்லார்க்குமொப்ப முடிந்ததாகலானும் அவ்விரண்டன் காரணமும் வேறென்பது துணியப் படுமென்க. இன்னும், அங்காப்பு முதலிய அகமுயற்சியாற் புலப்படுவது எழுத்தோசையெனவும், அதனைப் புலப்படுப்பதாய் எடுத்தல் படுத்தல் நலிதல் முதலிய புறமுயற்சியாற் பிறப்பது இசை ஓசையெனவும் தம்முள்வேறுபாடு அறியவேண்டிக்கிடக்கின்றது.

இன்னும் இவ்வயிந்தவவோசை (விந்துவினின்றுந்தோன்றுமோசை) பவுதிகவோசைகளின் (பூதத்தினின்றுந் தோன்றுமோசை) இலக்கண வேறுபாடுகளும், எழுத்தோசைக்குக் காரணமான விந்துவென்னுஞ் சுத்தமாயையினது உண்மைக்குப்பிரமாணமும், ஆசிரியர் சிவஞானசுவாமிகள் சிவஞானபாடியத்துப் பிரமாணவியல் இரண்டாம்பாதத்து இரண்டாம் அதிகரணத்துத் தடைவிடைகளான் விளங்கக் கூறியிருத்தலின் ஆண்டுக்கண்டு முணரப்படும். "உந்தியிற் றேன்று முதான வளிப்பிறந்து, கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து-வந்தபின், நாசிநா வண்ண மிதழெயிறு மூக்கெனப், பேசு மெழுத்தின் பிறப்பு" நேமிநாதம். இதுவும் ஒருபுறமமைய, இனி உந்தியிற் சூக்குமமாயெழுந்தநாதம் நெஞ்சின்கட் பைசந்தியாய்க் கண்டத்தின்கண் மத்திமையாய்ப் பின்னர்த் தன்செவிக்குக் கேட்குஞ் சூக்கும வைகரியும், பிறர்செவிக்குக் கேட்குந்தூல வைகரியுமாய்ப் பல் வேறெழுத்துக்களாம். இவ்வெழுத்துக்கள் எல்லாமொழிகட்கும் சொல்வடிவாய் பொருளுணர்பொருட்டாய் நிற்கும்.

இனி ஆசிரியர்கள் சொல்லிலக்கணம் பலவாறு கூறுப. சேனவரையர், 'மொழிப்பொருட்காரணம் விழிப்பத் தோன்ற' என்னுமுரியியற் சூத்திரத்து வடநூன்மதம்பற்றி, பொருளொடு சொற்கியைபு இயற்கையாகலான் அவ்வியற்கையாகிய இயை பாற் சொற்பொருளுணர்த்துமென்ப, என்று கூறி, ஒருசாரார் பிறகாரணத்தானு முணர்த்துமென்ப எனப்பிறர்மதங் கூறிச் செல்வர். உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் 'உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே' என்னுஞ் சூத்திரத்து "சொல் எழுத்தினான் ஆக்கப்பட்டுத் திணையறிவுறுக்குமோசை" என்றும் ஒருவன் பொருட்டன்மையை யறிதற்குச் சொற்கருவியாய் நிற்கும் என்றும் கூறுவர். சிவஞானமுனிவர் சொல்லும் பொருளும் பேதாபேதம் எனக்கொள்வர். எங்ஙனமாயினும் எழுத்தோசையானியன்ற சொல் பொருளை யறிவுறுக்கும் என்பதும், அச்சொற் கூட்டமே மொழியென்பதும் நாமறியக் கிடக்கின்றன.

இனி எழுத்துச்சொல் வடிவான மொழி பேசுதற்குரியார் முப்பத்திரண்டு உறுப்பான் அளவிற்பட்டு அறிவொடுபுணர்ந்த ஆடூஉமகடூஉ வென்னும் மக்கள் என்பது மேல் விரித்துணர்த்து வாம். நிற்க, இப்பெற்றித்தாய மொழிகள் பண்டுதொட்ட நெறியை யாராயின் பதினெட்டென்பதும் பத்தொன்பதென் பதும் புலப்படுகின்றன.

திருமூலர் திருமந்திரத்து,

"பண்டித ராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறுங் கருத்தறி வாரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் சொன்ன வாறே" எனவும்,

நன்னூலில் "மூவறு மொழியுளும்" எனவும் "ஒன்பதிற்றிரண் டினிற் றமிழ்மொழி நிலத்தினும்" எனவும், வருவனவற்றால் பதினெட்டென்பது புலப்படாநிற்கும்.

திருமந்திரத்து,

"மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து

ஆரியமுந் தமிழுமுடனேசொலிக்
காரிகை யார்க்குங் கருணைசெய் தானே" எனவும்,

இலக்கணக் கொத்துரையில்

"பத்தோ டொன்பது பாடை நூல்களும்" எனவும்,

தொல்காப்பியத்து,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" எனவும்,

நன்னூலில் "பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானு மியைவன வடசொல்" எனவும்,

கூறுமாற்றான் வடசொற்புணர்க்க மொழி பத்தொன்பதென்பது பெறப்படும்.

ஒன்பதிற்றிரண்டினிற் றமிழொழி நிலமெனவே ஏனைப் பதினெழு மொழிகட்குஞ் சீரியதாய் அவைகட்குத் தாய்மொழியாய் நிற்பது தமிழ்மொழியொன்றுமே யாகலின் தமிழொடு படுத்து மொழி பதினெட்டென்றனர்.

மொழிகள் பதினெட்டாவன, தமிழ், சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கு, கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், குசலம் என்பன. ஆரியம் ஒன்று ஆகப் பத்தொன்பது. ஆரியத்தையிவற்றொடுபடுத்தெண்ணாது விடுத்த நோக்கமென்னெனின், வழக்கு (பேச்சு) மொழியாகாமையின் ஆரியத்தை எண்ணாவில்லைபோலும். வழக்கின்கண்ணும் நூல் வகையின் கண்ணும் அமைந்து ஏற்றமுடைத்தாய்க் காணப் படுவது தாய்மொழியாகிய நந்தமிழ் மொழியே யாம்.

வழக்கொழிந்த நிலைமையுடைத்தாயிருந்தும் ஒருவாற்றான், தமிழொடு ஒப்புமை யுடைத்தாய்க் காணப்பட்டு வருதலின் பத்தோடொன்பது என்று கொள்வாராயினர் போலும்.

ஈபுரு, இலத்தின், கிரேக்கு, முதலிய பல மொழிகள் இக் காலத்திறந்து பட்டனவாகக் காணப்படுகின்றன வன்றோ, அவற்றொடுபட்டதுவே ஆரியமும்.

தமிழ்மொழியே எம்மொழிக்கும் தாய்மொழியாம் என்பது அவ்வம்மொழிவல்லார் உண்மைநோக்கொடு வாரமின்றி யாய்வரேல் புலப்படும்.

ஆகவே மொழிகள் பலதிறப்படலால் கல்வியும் பலதிறப்படும் எனக்கொண்டு மேல்பொருள் பகுத்தற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

இக்காலத்திலோ மொழிகள் வரையறையின்றிப் பல்கியிருப்பவை யாவருமறிவர். சௌராட்டிரம் மகாராட்டிரம் இந்தி ஆங்கில முதலியவுமன்ன.

மொழிவகையால் கல்வி பலதிறப்படுமெனவே, அம்மொழிகடாம் பலவாதற் பொருட்டென்னை? அவைகளை யாக்கியோன் இறைவன்றானோ? எனவினவின் விடையுங் காணப்படும். ஒவ்வொரு தேயவியற்கைக்கும் காலநிலைக்கும் ஏற்பவே மொழிகள் ஆக்கப்பட்டனவாம். மொழி, வழக்கு, பேச்சு, பாடை முதலிய வொருபொருள்மொழியாவது ஒருவர் தம்முள்ளக் கருத்தைப் புலப்படுத்தற்கும் பிறர் தம்முள்ளக் கருத்தைத் தாமறிந்துகோடற்கும் பொருட்டாய கருவியாம். மேலும் பொருள் கூறப்பட்டது ஆண்டுக்காண்க.

திருமந்திர முதலிய திருமுறைகளை நோக்குழி மொழிகளனைத்தும் இறைவனால் ஆக்கப்பட்டனவேயாம் என்பது காணப்படுகின்றது. இவைகட்கொலிவடிவும் வரிவடிவும் பலவேறு வகையாகக் காணப்படுகின்றன. வரிவடிவு பிற்றை நாளிலாக்கிக் கொள்ளப்பட்டனவெனல் தெரிகின்றது. ஒலிவடிவு கால வேற்றுமையினும் மாறுபாடுற்றிலது. அக்கரம் எழுத்து. இம்மொழிகட்கு அழிவில்லாதது, எழுப்பப்படுவது எனப்பொருள் படுவதாலும், இவ்வெழுத்தாலாம் மொழிப்பொருள் இடுகுறி முதலியவாக வாளப்படுவதாலும் அழிவில்லாத பெருமையுடைய அண்ணலங் கடவுளால் செய்யப்பட்டது எனக் கூறுகின்றனர். (இஃது அவ்வளவு பொருத்த முடைத்தெனக்கொள்ளார் அறிவுடை மக்கள்) ஆயின் பின்வருஞ் செய்யுட்கள், மேற் கூறப்பட்டனவற்றிற்குச் சான்றாக நிற்கின்றன.

" இருமொழிக்குங் கண்ணுதலார் முதற் குரவர் " எனவும்
" வடமொழியுந் தென்றமிழு மானன் கண்டாய் " எனவும்
" தம்மல ரடியொன் றடியவர் பரவத் தமிழ்ச்சொலும்
[வடசொலுந் தாணிழற் சேர
அம்மலர்க் கொன்றை யணிந்தவெம் மடிகள் அச்சிறு
[பாக்கம தாட்சிகொண் டாரே ; எனவும்
வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை குடமுனிக்கு
[வலியுறுத்தார் எனவும்
" தென் றமிழ்க்கும் பழைய வடமொழிக்கும் பெரிய " எனவும்
வரும் செய்யுட்களேயாம். இவைகளால் எம்மொழிகளினுஞ்
சிறந்தன இவ்விரு மொழிகளேயெனல் தேற்றமாகின்றது.
இவற்றுளும் வழக்கொழிந்த ஆரியத்தினும் வழக்கொழியாத்
தமிழ்மொழியே சிறந்ததென முன்னருங் கூறப்பட்டுள்ளது.

இக்காலத்தில் (தற்காலத்தில்) அரசியற் கல்வியாக விருப்பது ஆங்கில மொழியேயாம். உலகியனடத்தற் பொருட்டாக விருத்தலால் அஃதுஞ் சிறந்ததாகவே காணப்படுகின்றது. இதுகாறுங் கூறப்பட்டன கல்விக்குள்ள புறக் கருவிகளாகும். இனிக்கூறப்படுவன அகக்கருவிகளாம்.

தற்காலத்துச்சிலர், காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சென்பதுபோலத் தத்தம் மொழிகளையும் அம்மொழிக் கல்வியையும் உயர்வுடையவென வுரைக்கின்றனர். அங்ஙன முரைத்தல் பொருந்தாது. இங்ஙனமாக்கூறுவார் அயல் நாட்டு மொழிவல்லுநரைச் கொணர்வித்து அவருளங்கொளத் தலை நாணச் செய்தல்தான் பெருமையுடைத்தாம் எனக் கலாம் விளைப்பர். இஃது பிறர்மதம். இம்மதமுடையார் பொன்னிறப் புறவின்குஞ்சு பொற்குஞ்சாயிருக்கும் என்பது அறியாரோ? அன்றி அவர் கோட்பாடு பற்றிக் காக்கைக் குஞ்சென்று கழறலும் வேண்டும்போலும். இவர் செயல்கள் மின்னல் கண்டு விதைத்து விளைய முயற்சிப்பார் செயலெனவிடுத்தலே நன் றென்று விடுக்குதும்.

அண்மைக்காலத்தில் உண்மைப்புகழ் நிறீஇக்காலஞ்சென்ற பருதிமாற் கலைஞன் (சூரியநாராயண சாத்திரி) எனும் பேரறிவாளன், நடுநிலை திறம்பா நல்லுளத்தொடு தம் தமிழ்மொழி வரலாற்றில் வடமொழிக்கலப்பு என்ற தலைப்பின்கீழ் எழுதுவன பின்வருவனவாம். அவைகாணின் யாதுங்கூற முற்படார்! வரைவனவாவன :—

"வடமொழி தமிழ்நாட்டில் வெகுநாள் காறும் இயங்கியும் அதற்குத் தமிழ்மொழியைத் தன்வழியிலே திருப்பிக்கொள்ளுதற்குற்ற ஆற்றலில்லாது போயிற்று. வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களையுணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்வகுப்பான் புகுந்தனர்.

அவர்களெல்லாம் ஆன்மநூற்பயிற்சிமிக்குடையராயும் கலையுணர்ச்சி சான்றவராயும் இருந்தமைபற்றித் தமிழரது திவ்விய தலங்கட்குப் புராணங்கள் வகுத்தனர். தமிழர்களிடத்தில்லாத, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நால்வகைச்சாதி முறையை மெல்லமெல்ல நாட்டிவிட்டனர்.

" முற்படைப் பதனில்வே றுகிய முறைமைபோல்
நால்வகைச் சாதியிந் நாட்டினீர் நாட்டினீர்" என்று

ஆரியரை நோக்கி முழங்குங் கபிலரகவலையுங்காண்க. இன்னும், அவர் தம்புந்தி நலங்காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர். தமிழரிடத்திருந்த பல அரிய விடயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர்அறியுமுன்னரே அவற்றைத் தாமறிந்தனர் போலவும் வடமொழியினின்றுமே தமிழிற்கு வந்தனபோலவுங் காட்டினர்.

தமிழருட் சாமானியசனங்கள் அவ்வாரியரது விருப்பத்திற் கேற்ப எவ்வள விணங்கியபோதிலும் புலவராயினர் அவர்களது திருத்தப்பாட்டிற்குப் பெரிதும் இணங்கினரல்லர். ஒழுக்கச் சீர்ப்பாடு ஏற்பட்டபோதிலும் பாடைத்திருத்தம் ஏற்படவில்லை. தமிழின் முப்பத்தோரெழுத்துக்களும் அவ்வாறே யின்றளவுமிருக்கின்றன, சிறிதும் வேறுபடவில்லை. தாங்கள் செல்லு

மிடங்கட்குத் தக்கபடி புதியபுதிய லிபிகள் ஏற்படுத்திக் கொள்ளுமியல்புடைய ஆரியர் தமிழ் நாட்டிற்கேற்றபடி தமிழ் லிபியையொட்டிக் கிரந்தம் எனும்பெயரிற் புதுவதோர் லிபி வகுத்தனர். தமிழரை வசீகரிக்குமாறு அவ்விலிபியிற் பல நூல்கள் வரைந்தனர். தமிழ்ப்புலவராவார் எதற்கும் அசையாது தங்கள் தமிழ்மொழியின் போக்கையே தழுவிச் செல்வாராயினர். இவ்வாறு தமிழருட் பண்டிதராயினர் வடமொழியைத் தமிழின்கண் விரவவொட்டாது விலக்கியும் பாமரராயினர் வடமொழிச் சொற்களுள் பலவற்றை மேற்கொண்டு வழங்கப்புகுந்தமையின் நாளாவட்டத்தில் வடசொற்கள் பல தமிழ்ப்பாடையின்கண்ணே வேரூன்றிவிட்டன. அவ்வாறுயின், இதுபோலவே வடமொழியின் கண்ணும் தமிழ்ச்சொற்கள் பலசென்று சேர்ந் திருத்தல் வேண்டுமேன்றே.''

ஈண்டு வரையப்புகுவதுந் தமிழ்மொழிக் கல்வியே யாம். இதற்கு முன்னர் இதன் பழமை, இடைப்பட்டகாலம், தற்போதையநிலை என்பனவற்றிற் சிலவறிந்தன கூறிச்செல்லுதும்.

''மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்று.............

ஆரிய முந்த மிழுமுட னேசொலிக்—காரிகை யார்க்குங் கருணைசெய் தானே (திருமந்திரம்.) என்ற செய்யுளால் தமிழ் மொழி படைப்புநாள்தொட்டு நின்று நிலவியதொரு பெருமொழியாம். தமிழ்மொழியில் அகத்தியனார் இயல் இசை நாடகமென முத்தமிழ் விரவிய இயனூல் வகுப்பதற்கு முன்னரும் நூல்களிருந்தனவாதல் தெரிகின்றது. 'முன்னூற்கும் மலய முனி தன்னூற்கும்' என்பது கொண்டும் அது உணரக்கிடக்கும்.

ஒருபொருளைக் குறித்தற்குக் கடவுளானும் அறிவுடையோரானும் இட்ட குறியாகிய பெயர் இடுகுறிப்பெயர் எனவும், "கடவுளால் ஆவி மெய்யென்றமைத்த பெயர்க்காரணம் உயிர்களான் முற்று முணர்தற்கருமையும்" எனவும், "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்று" எனவும் வரும் உரையளவை கண்டுந் துணிதல் கடனும்.

இங்ஙனம் படைப்புத்தொட் டொருபெற்றித்தாய நந்தமிழ் மொழி தமிழ்ப்பழங்குடி யரசினராகிய சேர சோழ பாண்டியர்

மூவராலும் புரக்கப்பட்டு முதலிடைகடைச் சங்கங்களில் நின்று நிலவியதென்பது சான்றோர் யார்க்கும் ஒப்ப முடிந்ததாகும். சிலர், மூவேந்தர்களாகிய பழங்குடிமக்கள் எங்கிருந்தோ வந்து குடியேறினவர்களென்று அவைகட்குச் சிலகாரணங்களையுஞ் செப்பி, பண்டு எனு மொழியிலிருந்து பாண்டியர் என வந்தது என்றும் பழையர் என அவர்கட்குப் பெயருண்மையே யிதற்குச் சான்றென்றும் கூறிச்செல்வர். அவர், சிலவாங்கிலவல்லவர் கற்பித்தெழுதுவனவற்றைப் பின்பற்றினராவர். முதலிடை கடைச் சங்கங்கட்குக் காலவரையறையினைத் திட்டமாகப் பகுக்கமுடியாது.

கடைச்சங்கத்திறுதிக்காலங் கூறுவதுமட்டில் யார்க்கும் ஒப்பத்தக்கதாகும். முற்காலத்து முதலாஞ்சங்கம் இரண்டாஞ் சங்கம் மூன்றாஞ்சங்கம் எனவே பெயர்புனைந்திருத்தல்வேண்டும். பிற்காலத்தார்தாம் முதலிடை கடையெனச் சங்கங்கட்குப் பெயர் வகுத்திருத்தல் வேண்டும்.

கடைச்சங்கம் என்றால் இறுதி (கடைசி)ச் சங்கமா அன்றி கடையா வுள்ளசங்கமா வெனவுஞ் சிலர் வினவாநிற்பர். ஆகவின் பிற்றைநாளில் சங்கங்கள் தோன்றற் கியைபுதானு முண்டாகலாகாதா? என வினவின் விடையுமின்றாய் முடியும். இறையனார் களவியலில் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெறிந்த குமரவேளும் அகத்தியனாரும் தொல்காப்பிய னாரும் முரஞ்சியூர் முடிநாகராயரும், இருந்தையூர்க் கிழாரும், முதலிய பெரியோர்களால் நடத்தப்பட்ட முதலிடைகடைச் சங்கங்களின் காலங்களே இதன் பழமையான காலம்.

மூன்றாஞ் சங்கத்தின் பின்னரும் பல்லவ சேர சோழ பாண்டியர் பரம்பரை முடிவானகாலம்வரையுமுள்ள காலமே இதன் இடைப்பட்டகாலம். அதன்பின்னர் தமிழ்நாடு பலநாட்டு மொழி மன்னர்களால் ஆளப்பட்டுச் சீர்குலைந்து வருகின்ற காலமே இதன் தற்போதைய நிலையாம். இதனாலேயே தமிழர் களுடைய வழக்கவொழுக்கங்களும் மாறத் தொடங்கிவிட்டன.

இங்ஙனமாகவந்த தமிழ்க்கல்வி பண்டு யாண்டு பயின்று வந்ததென வாராயவேண்டுவது மின்றியமையா தாகின்றது.

பயின்றுவந்த நிலம்:—"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" எனக் கூறுமிந்நான்கெல்லைக் கண்ணதே யாம், இஃதகப்பாட்டெல்லையாம். புறப்பாட்டெல்லை ஏனைப் பதினெழு நிலங்களும் இமயத்திற்கப்பாலும் இப்பாலுமான நிலங்களுமாம். சேர சோழ பாண்டியர்கள் பண்டைநாளில் இந்நிலப்பரப்பெல்லாந்தாமே யாண்டசெய்தி பழைய இலக்கிய வரலாறுகொண்டு அறியப்படுகின்றது.

இமயத்திற் கயற்கொடி நாட்டியும் விற்கொடி தீட்டியும் புலிக்கொடி பொறித்தும் ஆண்டார்கள் என்ற வரலாற்றானும் அவர்கட்கு அரசியல் மொழியாக நின்றுவிளங்கியது தமிழ் மொழியாகலானும் இங்ஙனம் எல்லைகூறப்பட்டதாம்.

"அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
யீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

எனச்சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் விளிப்பதால் இவ்வரயன் வடநாட்டரயர்கட்குச் சோறு வழங்கினானென்றவிடத்து அவர்களும் தமிழ்வழக் கறிஞர்களாகவே யிருந்திருக்கவேண்டும். இந்தியா முழுதும் தமிழ்மொழிக்கு அகப்புறப்பாட்டெல்லை யென்று கூறினால் வருமிழுக்கொன்றுமின்றாம்.

தற்காலத்தில் தமிழ்நாட்டை ஆங்கில வரசினரும் சிறு பான்மை பிரன்சு அரசினரும் ஆளுகின்றனர். அவர்கள் மொழிகளாகிய ஆங்கிலமும் பிரன்சும் அரசியல் மொழிகளாக விருப்பதால் அவை நம்நாட்டில் பரவாதவிடங்களுண்டா? இன்னும் சிலகாலத்துள் ஆங்கிலமே எல்லா மொழிகட்கும் தாய்மொழியாக ஆய்விடும்போல் காணப்படுகின்றது. ஆகவே நந்தமிழ் நாட்டையாண்ட, செங்கோல் செலுத்தின, அறத்திற் றிறம்பா அரயர்கள் மொழியாகிய தமிழ், யாண்டு யாண்டுப் பரவியிருக்கும்.

இத்தமிழ்மொழிக்குப் பைந்தமிழ், செந்தமிழ், தண்டமிழ், தீந்தமிழ், வண்டமிழ் எனப் பலவடை கொடுத்துப் பெயர்கள் வழங்கப்படுவதை நூல்களிற் காண்கின்றோம். பிற்காலத்தார் இங்ஙனமாகத் தமிழ்நாட்டிற் கெல்லேவகுத்திருப்பவும் செந் தமிழ் நாடெனவும் கொடுந்தமிழ் நாடெனவும் பகுப்பாராயின் அவர் திறத்தையும் ஆராய்வாம்.

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டென்ப" எனப் பாண்டி

நாடே தமிழ் நாடெனவும் "சோணுடு" தமிழ் நாடெனவும் கூறுவர். இந்நிலத்திற்கப்பாற் பட்டனவெல்லாம் கொடுந்தமிழ் நாடெனக் கூறுவர்.

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்" இவைகளே கொடுந்

தமிழ்நாடாகும். செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிருநா டென்றால் எங்ஙனங் கொடுந்தமிழ் நாடாகும். செந்தமிழ்சேர், என்றும் ஏதமில் என்றுங்கூறியிருப்பதே கொடுந்தமிழ் நாடில்லை யென்பது புலப்படுத்தாநிற்கும்.

செந்தமிழ்மொழிக்கு மறுதலையாகக் கொடுந்தமிழ்மொழி யிருக்கவேண்டுமென்ற ஆணையுண்டா? இன்றென்க. நிற்க. 'தமிழ்' எனுஞ்சொல்லைப் பற்றிய தடையொன்றுள்ளது ஆரிய மொழியாகிய திராவிடத்தின் றிரிபேயென இம் மொழிக்குப் பெயர்கொடுத்தார் ஆரியரா, தமிழரா, எனின் ஆரியரே சாற்றி வழங்கினர்கள்; சூத்திரமொழி யென்றும் பெயரிட்டு வழங்குவர்! இவைகள் சான்றாகமாட்டா? சங்கரரும் சௌந்தரியலகிரியில் (திராவிடசிசு) எனச் சம்பந்தரை விளிக் கின்றார். அவர்கள் தமிழ்மொழிக்கிட்ட பெயர்மாத்திரம் அன்று. இன்னுஞ் சிலமொழிகட்கும் பஞ்சதிராவிடம் எனப் பகர்

கின்றனர். திராவிடம், திரவிடம் திரமிடம், திரமிள், தமிள் தமிழ் என வுந்ததாம் என்பர். இவர்கள் கூற்று, கழுதை யானையாயிற் றென்பதனேடொக்கும்.

தமிழ் இனிமை எனப் பிங்கலங் கூறுகின்றது. ஆகவே தமிழ்எனும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். "தமிழ் தழுவிய சாயலவர்" என்றவிடத்து நச்சினர்க்கினியரும் இனிமை தழுவிய என உரையுரைத்துளார். "வண்டு தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே" என்பது மிது. தமிழு என்பது தமிழ் என மெய்யீருயிற் றென்பாருமுளர். இதுவே வலியுடைத்தாம். அகர, இகர உகரமாகிய மூன்றுயிர்களுமே ஏனையுயிர்களை யுண்டாக்குகின்றன. இவைகளின் வேறுபாடே (விகாரமே) ஏனையுயிர்களாம். மெய்கள் வன்மை மென்மை இடைமையென மூவகைப்படும். த், ம், ழ் எனக் கூறிய இவை ஒவ்வொன்றற்கு ஒவ்வொரு எழுத்தாகிய இவை அகர இகர உகரமாகிய கூற் றெடு புணர்ந்து தமிழு எனவாயின. இவைகளே மூல வெழுத்தின் காரணமாதலு மறியற்பாற்றும்.

இப்பெற்றித்தாய தமிழ்மொழியிலுள்ள நூல்களைக் கற்ற லால் வரும்பயனை முன்னர் ஆராய்வோம். விலங்கிற்கேற்ற மாய மனவுணர்வை விரிவுபடுத்தி உலகியற்பொருளைப் பொய் யெனவும் நிலையாமை யுடைத்தெனவும் இவ்வுலகினைப் படைத் தவனெருவனுளன் என வளவைகளானளந்து பரம்பொருளிது வெனவும் உணர்ந்துகோடலும், சென்ற பிறப்பினிலையும் இப் பிறப்பின் நிலையும் இனிவரப்போகும் பிறப்பினிலையும் ஆய்ந்து கோடலும், பிறவாநெறிபற்ற "பிறவா யாக்கைப் பெரியோன்" திருவடிவணங்குமுறை தெரிந்து கோடலும், இம்மைக்கண்புகழ் பொருள் பூசை பெறுதலும், மறுமைக்கண் வீடடைதலும் பிறவுமே பயன்களாம்.

கடலிடைப் புவியின்கண் மக்களாற் றேடப்படுவனவும் அடையப்படுவனவும் யாவை யெனத் துருவின் இவ்விரண்டே யாம். அவையே, கல்வியுடைமையும் பொருளுடைமையும், உயிர் நலமும் உடனலமுமாம்.

இவற்றுள் உயர்ந்தது எதுவென வாராயின் உயிர்நலத்திற்குக் காரணமான கல்விப்பொருளே சிறந்ததாம், உடனலத்திற்குக் காரணமான பொருளுடைமை சின்னாளில் அழிவதும் இம்மைக்கே யாவதுமாயிருத்தலின்.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து" என்பது குறள்.

இருவினைகளும் உயிர்புக்குழிப்புக்கு உறுவதுபோலக் கல்வியும் உயிர் செல்வுழிச் சென்றுதவுகின்றது. ஆகலான் மேலே அங்ஙனங் கொள்ளப்பட்டது.

இனி, "கல்வியிற் பெரியன் கம்பன்" என இயனூலாசிரியர் கூறும்வழக்கினை யாயவேண்டியிருக்கின்றது. கல்வியிற் பெரியன் வள்ளுவன், அகத்தியன், தொல்காப்பியன், நக்கீரன் என வழங்கலாகாதா வெனின், அவர்கள் இயற்கையறிவும் கடவுட்டன்மையும் உடையராய் விளங்கினவராவர்.

கம்பனோ நல்லாசிரியர்பால் நன்கு கல்விகற்று இயற்கையறிவும் அதனோடு செயற்கையறிவும் உற்று விளங்கினான். எவ்வெவ்விடங்களில் எப்படிச்செய்யுளைச் சித்திரிக்கவேண்டுமோ அங்ஙனஞ் சித்திரிக்குமாற்றல் படைத்தவன். நாட்டுச்சிறப்புக் கூறவந்த கம்பர் கல்விபயில்வார் சிறப்பைக் கூறுமிடமுங் கவனிக்கற் பாற்றும்.

"பந்தினை யிளையவர் பயில்இடம் மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம்" எனக் கூறுஞ்

செய்யுளை நோக்குழி, கந்தனையொத்த வலியுடையராயிருத்தல் வேண்டும் நல்லாசிரியர், நல்லனபயக்கு நூல்களையே கற்றுணரல் வேண்டும் என்றும் ஊகித்தறிய விடனுகின்றது. கம்பர் திருவுருவமும் இதனைப்புலப்படுத்தும். "கல்லாப்புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே" என்பதால் பயின்றமை புலப்படவில்லையா. தொல்காப்பிய முதலிய பெரியனூல்களையும் திருக்குறள் சிந்தாமணி முதலிய பாரநூல்களையும் பயின்றே கம்பர் இராமாயணம் பாடத்தொடங்கினுராவர்.

(தொடரும்.)

பாண்டியர் வரலாறு

(முற்ரொடர்ச்சி துணர் ௬, மலர் ௧௧, ௧௨, பக்கம் 420.)

திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

VII

கி. பி. 1190 முதல் கி. பி. 1310 முடிய ஆட்சிபுரிந்த பாண்டியர்கள்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தே பாண்டியரது ஆட்சி மீண்டும் உயர்நிலையை எய்தத் தொடங்கிற்று. ஆயினும், அந்நாட்களில் பெருவீரனாகிய மூன்றாங் குலோத்துங்கசோழன் சோழ மண்டலத்தில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தமையின், பாண்டிவேந்தன் அவனுக்கு அடங்கி நடத்தல் இன்றியமையாததாயிற்று. அன்றியும், வீரபாண்டியனைப் போரிற் புறங்காட்டி போடச்செய்து, தன் தந்தையாகிய விக்கிரம பாண்டியற்கு மூன்றாங் குலோத்துங்க சோழன் மதுரையில் முடிசூட்டிவைத்த பேருதவியைச் சடைவர்மன் குலசேகரன் அத்துணை அண்மையில் மறந்து போயிருத்தலும் இயலாது. எனவே, மூன்றாங் குலோத்துங்க சோழன் கி. பி. 1216-ஆம் ஆண்டில் இறந்த பின்னர், பாண்டியர் சோழர்க்குத் திறை செலுத்தாது பேரரசர் ஆயினர். இதற்கேற்ப, அக்காலத்தில் சோழமண்டலத்தில் ஆட்சிபுரிந்துவந்த மூன்றாம் இராசராசசோழனும் வலிகுன்றியவனாயிருந்தனன். இவனுக்குப் பின்னர் அரசாண்ட சோழ மன்னர்களும் அத்தகையினரே. ஆகவே, பாண்டியர் பேராண்மையும் பெருவீரமு முடையவர்களாய்ப் புறநாடுகளைவென்று தம்மடிப்படுத்தி மிகவும் உயர்நிலையை யடைந்து வாழ்ந்த காலம் இதுவே என்று சிறிதும் ஐயமின்றிக் கூறலாம். இனி, இதன் உண்மையை ஆராய்ந்து காண்போம்.

சடைய வர்மன் குலசேகர பாண்டியன் 1 :—இவன் கி. பி. 1190ல் முடிசூட்டப்பெற்று கி. பி. 1216 வரையில் அரசாண்டவன்; மூன்றாங் குலோத்துங்க சோழனுக்குப் பெருநட்பினனும் அவனால் ஆதரிக்கப் பெற்றவனுமாகிய விக்கிரம பாண்டியனது புதல்வன். "பூதலமடந்தை" எனவும் "பூவின் கிழத்தி" எனவும் "பூதலவனிதை" எனவும் தொடங்கும் இவனது மெய்க்கீர்த்திகள் இவனைப் புகழ்ந்து கூறுகின்றனவே யன்றி இவனது வரலாற்றை நன்கு விளக்குவனவாயில்லை. இவனது கல்வெட்டுக்கள் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் 'ஜில்லா'க்களில் காணப்படுதலால் இவனது ஆளுகை இம் மூன்று ஜில்லாக்களிலும் நிலவியிருத்தல் வேண்டும். இவனது அரசியல் அதிகாரிகளுள் மிகச்சிறந்தவன் களவழி நாடாள்வான் ஆகிய சயங்கொண்ட சோழ சிவள்ளுவன் என்பான். இவன் தனது தலைநகராகிய மதுரையிலிருந்த சிங்காதனங்களை மழவராயன், முனையதரையன் என்ற பெயர்களால் வழங்கி வந்தனன் என்பது பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது. (Inscriptions 550 and 660 of 1916) திருநெல்வேலியிலும் மழவராயன் என்ற பெயருடைய சிங்காதனம் ஒன்று இருந்ததென்பது ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது. (Inscription No 507 of 1916) மலைநாட்டரசனாகிய சேரமான் கோதை ரவிவர்மன் என்பவன் இக்குலசேகர பாண்டியனுக்கு மைத்துனக்கேண்மையுடையவனாய் விளங்கினான் என்று திருநெல்வேலிஜில்லா சேரமாதேவியிலுள்ள சில கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. (Ins. 664, 665 and 666 of 1916) இவனைப்பற்றிய பிறசெய்திகளை அறிவிக்கக்கூடிய கருவிகள் இதுபோது கிடைக்கவில்லை.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1 :—இவன் சடையவர்மன் குலசேகர பாண்டியனது தம்பி; விக்கிரம பாண்டியனது இரண்டாம் புதல்வன்; கி. பி. 1216 முதல் கி. பி. 1238 முடிய மதுரையில் முடிமன்னனாக வீற்றிருந்து ஆட்சிபுரிந்தவன்; பிற்காலத்தில் பாண்டிய இராச்சியத்தை நன்னிலைக்குக் கொண்டு வந்த பெருந்தகை. "பூமருவிய திருமடந்தை" என்று

1. Annual Report on Epigraphy for the years 1916-17. pp 109.

தொடங்கும் நீண்ட மெய்க்கீர்த்தி இவ்வேந்தற்கு உரியதாகும். இம்மெய்க் கீர்த்தியால் இம்மன்னன் காலத்திய நிகழ்ச்சிகள் பலவற்றை நன்கறியலாம். இவ்வரசன் பட்டம் எய்திய கி. பி. 1216 ஆம் ஆண்டில் சோழ மண்டலத்தில் மூன்றாம் இராசராச சோழன் அரியணையேறினன். இச்சோழ மன்னன் தன் நாட்டைக் காத்தற்கேற்ற ஆற்றலும் ஆண்மையும் அற்றவனாக விருந்தமையின் சோழ மண்டலத்தைவென்று தன்வெற்றிப் புகழையாண்டும் பரப்பவேண்டும் என்ற எண்ணம் சுந்தர பாண்டியனுக்கு உண்டாயிற்று. அன்றியும், தம் முன்னோர்கள் பாண்டி நாட்டை அரசாளும் உரிமையை இராசராசசோழனது முனனோர்களது பேருதவியினால் பெற்றனர் என்ற செய்தியையும் இப்பாண்டியன் முற்றிலும் மறந்தொழிந்தனன். ஆகவே, கி. பி. 1210 ஆம் ஆண்டில் இவன் சோழமண்டலத்தின் மீது படையெடுத்துச்சென்று அதனைக் கைப்பற்றிக் கொண்டான். இப்படையெழுச்சியில் தஞ்சையும் உறையூரும் பாண்டி நாட்டு வீரர்களால் கொளுத்தப்பட்டன; பலமாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் ஆடரங்குகளும் அழிக்கப்பெற்றன. மூன்றாம் இராசராச சோழனும் ஒடி ஒளிந்தனன். வெற்றியெய்திய சுந்தரபாண்டியன் ஆயிரத்தளிக்குச்* சென்று சோழரது அபிடேக மண்டபத்தில் வீராபிடேகஞ் செய்து கொண்டு தில்லையம்பதிக்குச் சென்று பொன்னம்பல வாணரைத் தரிசித்து மகிழ்கூர்ந்தான்.

பின்னர், இப்பாண்டி வேந்தன் † பொன்னமராவதியில் தங்கியிருக்கும் நாட்களில் மூன்றாம் இராசராசசோழன் தன் மனைவி மக்களோடு அங்குச்சென்று தன் நாட்டை அளிக்குமாறு குறையிரந்து நிற்ப, இவனும் அருள்கூர்ந்து அங்ஙனமே சோழ மண்டலத்தை இராசராசனுக்கு அளித்தனன். இதுபற்றியே

* ஆயிரத்தளி என்பது நித்தவிநோதவளநாட்டுக் கிழார்க்கூற்றத்துள்ள அமராவதி என்னும் ஊர் என்று ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. (Inscription No 549 of 1926) தஞ்சைக்கு மேற்கேயுள்ள நியமமும் ஆயிரத்தளி எனப்படுகின்றது. (S. I. I Vol II)

† பொன்னமராவதி என்பது புதுக்கோட்டை நாட்டிலுள்ளது.

இவ்வேந்தனும் 'சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டியன்' என்று கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளான். இது கி. பி. 1223 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்திருத்தல்வேண்டும். இச்செய்திகளை எல்லாம்

"பனிமலர்த் தாமரைத் திசைமுகன் படைத்த
மனுநெறி தழைப்ப மணிமுடி சூடிப்
பொன்னிசூழ் நாட்டிற் புலியாணை போயகலக்
கன்னிசூழ் நாட்டிற் கயலாணை கைவளர
வெஞ்சின விவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையும் உறந்தையுஞ் செந்தழல் கொளுத்திக்
காவியு நீலமும் நின்றுகவி னிழப்ப
வாவியு மாறு மணிநீர் நலனழித்துக்
கூடமு மாமதிலுங் கோபுரமு மாடரங்கும்
மாடமு மாளிகையும் மண்டபமும் பலவிடித்துத்
தொழுதுவந் தடையா நிருபர்தந் தோகையர்
அழுத கண்ணீ ராறு பரப்பிக்
கழுதைகொண் டுழுது கவடி வித்திச்
செம்பியனைச் சினமிரியப் பொருதுசுரம் புகவோட்டி
பைம்பொன் முடிபறித்துப் பாணருக்குக் கொடுத்தருளிப்
பாடருஞ் சிறப்பிற் பருதி வான்றோய்
ஆடகப் புரிசை ஆயிரத் தளியிற்
சோழ வளவன் அபிஷேக மண்டபத்து
வீராபி ஷேகஞ் செய்து புகழ்விரித்து
நாளும் பரராசர் நாமத் தலைபிடுங்கி
மீளுந் தறுகண் மதயானை மேற்கொண்டு
நீராழி வைய முழுதும் பொதுவொழித்துக்
கூராழியுஞ் செய்ய தோளுமே கொண்டுபோய்
ஐயப் படாத வருமறைதே ரந்தணர்வாழ்
தெய்வப் புலியூர்த் திருவெல்லை யுட்புக்குப்
பொன்னம் பலம்பொலிய ஆடுவார் பூவையுடன்
மன்னுந் திருமேனி கண்டு மனங்களித்துக்
கோல மலர்மே லயனுங் குளிர்துழாய்

மாலு மறியா மலர்ச்சே வடிவணங்கி
வாங்குசிலை யன்னந் துயிலொழிய வண்டெழுப்பும்
பூங்கமல வாவிசூழ் பொன்னம ராவதியில்
ஒத்துலகந் தாங்கு முயர்மேரு வைக்கொணர்ந்து
வைத்தனைய சோதி மணிமண்ட பத்திருந்து
சோலை மலிபழனச் சோணாடுந் தானிழந்த
மாலை முடியுந் தரவருக வென்றழைப்ப
மானநிலை குலைய வாழ்நகரிக் கீப்புறத்துப்
போன வளவ னுரிமையொடும் புகுந்து
பெற்ற புதல்வனைநின் பேரென்று முன்காட்டி
வெற்றி யரியணைக்கீழ் வீழ்ந்து தொழுதிரப்ப
தானோடி முன்னிகழ்ந்த தன்மையெலாங் கையகலத்
தானே தகம்பண்ணித் தண்டார் முடியுடனே
விட்ட புகலிடந்தன் மாளிகைக் குத்திரிய
விட்டபடிக் கென்று மிதுபிடிபா டாகவெனப்
பொங்குதிரை ஞாலத்துப் பூபாலர் தோள்விளங்குஞ்
செங்கயல்கொண் டேன்றுந் திருமுகமும் பண்டிழந்த
சோளபதி யென்னு நாமமுந் தொன்னகரும்
மீள வழங்கி விடைகொடுத்து விட்டருளி"

என்னும் இவனது மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதியினால் நன்கு உணரலாம்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் மூன்றும் இராசராசசோழன் சுந்தர பாண்டியனுக்குத் திறைகொடுக்க மறுத்தனன். எனவே, கி. பி. 1235-ஆம் ஆண்டில் நம் பாண்டிவேந்தன் சோழ மண்டலத்தின்மீது மீண்டும் படையெடுத்துச் சென்று இராசராசனோடு போர்புரிந்து வெற்றியெய்தினான். இங்ஙனம் வெற்றி பெற்றவன் சோழர்களுக்குரிய முடிகொண்டசோழபுரம்* எனும்

* முடிகொண்ட சோழபுரம் என்பது தாராசுரம் ஸ்டேஷனுக்குத் தெற்கேயுள்ள பழையாறையையும் அதனை சூழ்ந்துள்ள முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்திமுற்றம், சோழமாளிகை, ஆரியப்படையூர், பம்பைப் படையூர், புதுப்படையூர், திருமேற்றளி, சுந்தரப்பெருமாள்கோயில் ஆகிய

[இதன் தொடர்ச்சி அடுத்த பக்கத்தில் உளது.]

சிறந்த நகரத்திற்குச் சென்று அங்கு வீராபிடேகஞ் செய்து கொண்டான். இவனது ஆட்சியின் இருபதாம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் "ஸ்ரீ கோமாறவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடுகொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிடேகம் பண்ணியருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்" என்று இவனைப் புகழ்ந்து கூறுகின்றன. இவனது கல்வெட்டுக்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலான ஜில்லாக்களிலும் புதுக்கோட்டை இராச்சியத்திலுங் காணப்படுதலால் இவை இவனது ஆட்சிக்குட்பட்டிருத்தல்வேண்டும் என்பது வெளியாகின்றது.

வடகொங்கு தென்கொங்கு இவ்விரு நாட்டு வேந்தர்களும் தமக்குள் உண்டாகிய முரண்பாட்டைத் தீர்த்துவைக்குமாறு சுந்தரபாண்டியனை வேண்ட, இவனும் அவர்களது வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தனன். இம்முரண்பாட்டைப் பற்றிய வரலாறு தெரியவில்லை. (The Pandyan kingdom pp. 146).

இனி, இவ்வரசனது பட்டத்தரசி உலக முழுதுடையாள் என்று வழங்கப்பெற்றனள் என்பதும், சோழன் உய்ய நின்றருவானை குருகுலதரையன் இவனுக்கு அமைச்சனாக விருந்தனன் என்பதும், கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன், திருக்கானப்பேருடையான் மழவச்சக்கரவர்த்தி ஆகியோர் இவனது அரசியல் அதிகாரிகளாக இருந்தனர் என்பதும் பலகல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன. (Ins No. 554 of 1922 ; Ins No. 75 of 1924 ; Ins No. 47 of 1924).

இவனது அவைக்களப் புலவராக விளங்கியவர் காராளை விழுப்பரையர் என்பார். இஃது இராமநாதபுரம் ஜில்லா

ஊர்களையும் தன்னகத்து அடக்கிக்கொண்டு முற்காலத்தில் பெருநகரமாக விளங்கியது. இங்குச் சோழ மன்னர்களது அரண்மனை நிலைபெற்றிருந்த இடம் இப்போது சோழ மாளிகை என்று தனியூராக இருக்கின்றது. இம்முடிகொண்ட சோழ புரத்தைப்பற்றிய ஆராய்ச்சியொன்று நம் 'தமிழ்ப் பொழி'லில் விரைவில் வெளியிடப்பெறும். [Inscription No 271 of 1927].

திருப்புத்தூர் தாலூகாவிலுள்ள பெருச்சிக்கோயிலில் வெட்டப் பெற்றுள்ள ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது. (Ins No. 75 of 1924).

இம்மன்னன் கி. பி. 1238ல் இறந்த பிறகு பட்டம் எய்திய வன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் என்பான்; இவன் சிலதிங்களே அரசாண்டிருத்தல் வேண்டும். இவன் மாறவர்மன் சுந்தரபாண்டியற்கு என்ன முறையினன் என்பதையும் இவனைப் பற்றிய பிறசெய்திகளையும் இதுபோது அறிய இயலவில்லை.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் II :—இவன் கி. பி. 1238ஆம் ஆண்டில் பட்டம் பெற்றவன்; இவனது ஆட்சிக்காலத்தில் போசள மன்னனாகிய வீரசோமேச்சுரன் நெருங்கிய உறவினால் பிணிக்கப்பெற்று இவனுக்கு நட்பினனாக இருந்தனன் என்பது பல கல்வெட்டுக்களால் தெரிகின்றது. இவனது மெய்க்கீர்த்தி 'பூமலர்த்திருவும் பொருசய மடந்தையும்' என்று தொடங்கு கின்றது. இஃது இவனது வரலாற்றை உணர்த்தக் கூடிய நிலையில் இல்லை. இவன் கி. பி. 1253 வரையில் அரசாண்டான். இவன் காலத்திய நிகழ்ச்சிகளை அறிவிக்கக்கூடிய கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் I :—இவ்வேந்தன் கி. பி. 1251 ஆம் ஆண்டில் முடிசூடியவன்; எடுப்பும் இணையுமற்ற பெருவீரன். இவனது ஆளுகையில் பாண்டிய இராச்சியம் மிகச் சிறிய நிலையை எய்திற்று. இவனது கல்வெட்டுக்கள் வடக்கேயுள்ள கிருஷ்ணை என்ற பேராறுவரையி லுள்ள பல பலநாடுகளிலும் காணப்படுகின்றன. எனவே, இவனது ஆட்சி நமது தமிழகத்திலும் அதற்கப்பாலுள்ள பிற நாடுகளிலும் பரவியிருந்திருத்தல்வேண்டும். இவனது மெய்க் கீர்த்தி 'பூமலர் வளர்திகழ் திருமகள்' என்று தொடங்கு கின்றது. இது நம் சுந்தரபாண்டியனது அரிய வீரச்செயல் களையும், இவன்வென்ற நாடுகளையும், செய்த திருப்பணிகளையும் நன்கு விளக்குகின்றது. இதன் துணைகொண்டு அவற்றை ஆராய்வாம்.

முதலில் நம்சடையவர்மன் சேர நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான்; சேரமன்னன் இவனை எதிர்த்துப்போர் புரியும் ஆற்றலின்றிப் புறங்காட்டியோடவே, மலைநாட்டைக் கைப்பற்றித் தன் ஆட்சிக்குள்ளாக்கினான்; பிறகு சோழமன்னனைவென்று தனக்கு ஆண்டுதோறும் திறைசெலுத்தி வருமாறு செய்தான்; இவன் காலத்தில் சோழமண்டலத்தில் அரசாண்டவன் மூன்றாம் இராசேந்திரசோழன் என்பான்; இவன் வலி குன்றியவனாயிருந்தமையின் பாண்டியர்க்குத் திறை செலுத்தும் நிலையையடைந்து சிறுமையுற்றான். இவ்விராசேந்திர சோழன் கால முதல் சோழர்கள் மிகத் தாழ்வுற்றுக் குறுநில மன்னர் ஆயினர்.

பின்னர், போசளர் இவ்வரசனால் தாக்கப் பெற்றனர்; சோழநாட்டில் போசளர்க்குரிய நகரமாயிருந்த * கண்ணனூர்க் கொப்பம் முற்றுகையிடப்பெற்றது; பல போசள வீரர்கள் போரிற் கொல்லப்பட்டனர்; போசளத்தண்ட நாயகனாகிய சிங்கணன் முதலானோரும் கொல்லப்பட்டனர். போசளரும் மூன்றாம் இராசராசசோழன் காலமுதல் தமக்குரியதாக வைத்திருந்த கண்ணனூர்க் கொப்பத்தை இழந்தார்கள். இந்நாட்களில் ஆட்சிபுரிந்த போசளமன்னன் வீரசோமேச்சுரன் என்பான். போசளரோடு நிகழ்த்திய இப்போரில் எண்ணிறந்த யானைகளையும் குதிரைகளையும் நிதிக்குவியல்களையும் நம்பாண்டி மன்னன் கைப்பற்றிக் கொண்டான்; பிறகு இலங்கையரசனை வென்று அவன்பால் யானைகளையும் பல்வகை மணிகளையும் கப்பமாகப் பெற்றான்.

அதன் பின்னர், இவ்வேந்தன் பல்லவமன்னனாகிய கோப்பெருஞ்சிங்கன் அனுப்பிய கப்பத்தை ஏற்றுக் கொள்ளாமல் அவனது தலைநகராகிய சேந்தமங்கலஞ் † சென்று அதனை முற்றுகையிட்டுக் கைப்பற்றியதோடு அவனது யானை குதிரை

* கண்ணனூர்க்கொப்பம் என்பது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ளது. † சேந்தமங்கலம் என்பது தென்ஆற்காடுஜில்லாவில் திருவதிகைக்கு மேற்கில் திருநாவலூர்க்கருகில் உள்ளது.

களையும் பிற செல்வங்களையுங் கவர்ந்து கொண்டான்; பின்னர், அவற்றை எல்லாம் அவனுக்கேயளித்து அவனைத் தன் ஆணைக் கடங்கி நடக்குங் குறுநில மன்னனாக்கித் திரும்பினான்.

பிறகு, இம்மன்னன் தில்லையம்பலத்துக்குச் சென்று முக்கட்பெருமானை வணங்கிக் கோயிலைப் பொன்வேய்ந்து அங்குத் துலாபாரதானஞ் செய்தனன்; பின்னர், திருவரங்கஞ் சென்று திருமாலை வணங்கிக் கோயிலையும் பொன்வேய்ந்து அங்கு முடிசூடிக்கொண்டு துலாபாரதானமும் செய்தான். திருவரங்கத்தில் இவனால் செய்யப்பட்ட திருப்பணிகளும் விடப்பட்ட நிபந்தங்களும் பலவாகும். கோயிலொழுகு என்ற வைணவ நூலிலும் அச்செய்திகளைக் காணலாம்.

இங்ஙனம் தில்லையிலும் திருவரங்கத்திலுமுள்ள திருக்கோயில்களைப் பொன் வேய்ந்தமைபற்றி, இவன் 'கோயில் பொன்வேய்ந்த பெருமாள்' என்று வழங்கப் பெற்றனன். 'கோயில் பொன்வேய்ந்த பெருமாள்' என்னும் பெயருடன் படிமங்கள் அமைப்பித்து அவற்றிற்குத் திங்கள்தோறும் தான் பிறந்த நாளாகிய மூலத்தன்று விழாக்கொண்டாடுமாறு எற்பாடுகள் செய்தான்.

இனி, இவ்வேந்தன் வாணர்களது மகத நாட்டையும் கொங்கர்களது கொங்கு நாட்டையும் தன்னடிப்படுத்தியமையும், தெலுங்குச் சோழனாகிய கண்ட கோபாலனைப் போரிற்கொன்று அவனது ஆட்சிக்குள்ளிருந்த காஞ்சிமா நகரையும் நெல்லூரையும் கைப்பற்றி நெல்லூரில் வீராபிடேகஞ்செய்து கொண்டமையும், பின்னர் அவனது தம்பியர் வந்து வணங்க அவர்கட்கு இராச்சியத்தை அளித்தமையும் இங்குக் குறித்தற்குரியனவாகும்.

இங்ஙனம் பல நாடுகளைவென்று தன்னடிப் படுத்தித் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி முடிமன்னனாக விளங்கிய நம் சுந்தரபாண்டியன் 'எம் மண்டலமுங் கொண்டருளிய சுந்தரபாண்டியதேவர்' என்று வழங்கப்பெற்றனன் என்பது பல கல்வெட்டுக்களால் புலப்படுகின்றது.

இவனது வீரச்செயல்களையும் திருப்பணிகளையும் விளக்கும் பல செந்தமிழ்ப்பாக்களும் வடமொழிச் சுலோகங்களும் சிதம்பரம், திருவரங்கம், திருப்புட்குழி முதலான இடங்களிலுள்ள திருக்கோயில்களில் வரையப்பட்டுள்ளன. (செந்தமிழ்தொகுதி 4 பக்கங்கள் 491, 492, 514, 516; Epigraphia Indica Vol 3 No 2)

இவ்வேந்தன் காலத்தில் நிலவிய பிறபாண்டி மன்னர்கள் சடையவர்மன் சுந்தரபாண்டியன் II, சடையவர்மன் குலசேகரபாண்டியன் II, விக்கிரமபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன் என்போர்; இவர்கள் நம் சுந்தரபாண்டியற்கு என்னமுறையினர் என்பதும் நாட்டில் எப்பகுதியை எவ்விடத்திலிருந்து ஆட்சிபுரிந்தனர் என்பதும் புலப்படவில்லை. இவர்களுள் வீரபாண்டியன் கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிலும் புதுக்கோட்டை இராச்சியத்திலும் கோயம்புத்தூர் காஞ்சி முதலான இடங்களிலும் உள்ளன. இவன் ஈழம், கொங்கு முதலியவற்றை வென்றதையும் தில்லையம்பதியில் பல்லவனை கோப்பெருஞ் சிங்கனிடத்தில், திறைபெற்றதையும் சோழமன்னனோடு போர்புரிந்ததையும் இவனது கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இப்போர்ச் செயல்கள் நம் சடையவர்மன் சுந்தரபாண்டியனது கல்வெட்டுக்களிலும் குறிக்கப்பட்டுள்ளன. எனவே, முடிமன்னனாகிய சுந்தரபாண்டியனது ஆணையின்படி வீரபாண்டியன் படைத்தலைமை பூண்டு இப்போர்களை நிகழ்த்தியிருத்தல்வேண்டும் என்று கொள்வதே பொருத்தமுடையது.

இனி, நம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1268 வரை ஆட்சிபுரிந்தனன் என்று ஒரு சாராரும், கி. பி. 1270க்கு மேலும் ஆண்டிருத்தல்வேண்டும் என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். இதுகாறும் அரசாங்கத்தாரால் எடுக்கப்பெற்றுள்ள கல்வெட்டுக்கள் எல்லாம் அச்சிட்டு வெளியிடப் பெற்றாலன்றி இதுபோன்ற ஐயங்களை நீக்குதல் எளிதன்று.

மாறவர்மன் குலசேகரபாண்டியன் I :—இவன் கி. பி. 1268 முதல் கி. பி. 1311 வரையில் அரசாண்டவன். இவனைக் 'கோனேரின்மை கொண்டான்' எனவும் 'புவனேக வீரன்' எனவும்

வழங்குவர். 'தேர்போல்' என்று தொடங்கும் இவனது மெய்க் கீர்த்தி இவனது வரலாற்றை. யறிதற்குச் சிறிதும் பயன் படாததாக இருக்கின்றது.

இவன் காலத்தில் பாண்டிய இராச்சியம் செழிப்புற்று உயர்நிலையில் இருந்தது. இவன் அரசாளும் நாட்களில் "இத்தாலியா" நாட்டு 'வெனீசு' நகரத்தானாகிய 'மார்க்கப் போலோ' என்பவன் பாண்டி நாட்டிற்கு வந்து பல நகரங் களையும் சுற்றிப் பார்த்து இவனது ஆளுகையைப் பெரிதும் புகழ்ந்து தன்நூலில் எழுதியுள்ளான். அவன், பாண்டி நாட்டிற்குத் தான்சென்றபோது அங்குப் பாண்டியர் ஐவர் ஆண்டுவந்தனரென்றும், அவர்களுள் குலசேகர பாண்டியனே மூத்தவன் என்றும், அவன் தன் தலைநகராகிய மதுரையில் பெரும்பொருள் சேர்த்துவைத்திருந்தான் என்றும், அவனது உரிமைச் சுற்றத்தினர் சிறந்த அணிகலன்களைப் பூண்டு கொள்வது வழக்கம் என்றும், அவன் தன் இராச்சி யத்தில் நடுவு நிலைமையுடன் செங்கோல் செலுத்திவந்தான் என்றும், வாணிபஞ் செய்வோராகிய பிறநாட்டு மக்களிடத்து அவன் பேரன்புடன் நடந்து வந்தமையின் அன்னோர் அவனது பாண்டி நாட்டிற்குப் போதற்கு பெரிதும் விரும்பினர் என்றும் தன் குறிப்பில் வரைந்திருக்கின்றான்.

அந்நாட்களில், பாண்டி நாட்டிற்கு வந்த மகமதியனாகிய 'வாசம்' என்பவனும் இவ்வேந்தனது ஆட்சியை அங்ஙனமே புகழ்ந்துரைப்பதோடு இவன் தன் தலைநகரில் ஆயிரத்திருநூறு கோடிப்பொன்னும் முத்துக்களும் வைத்திருந்தான் என்றும் குறித்துள்ளான்.

இவன் காலத்துப்போர் நிகழ்ச்சிகள் ஈழ நாட்டின் மீது படையெடுத்தும் சேரநாட்டிலுள்ள கொல்லத்தைக் கைப் பற்றியதுமே யாம்.

குலசேகர பாண்டியனும் இவனது தம்பிமார்களும் தம் படைத்தலைவர்களுள் மிகச்சிறந்தவனாகிய ஆரியச் சக்கரவர்த்தி யின் தலைமையின் கீழ் ஒருபெரும் படையை ஈழ நாட்டிற்கு

அனுப்பினர். அப்படை அந்நாட்டில் பல நகரங்களையும் கோட்டைகளையும் அழித்துப் பொருள்களைக் கொள்ளையிட்டுப் புத்ததேவரது மாண்பு வாய்ந்த பல்லையும் கைப்பற்றிக்கொண்டு வெற்றியுடன் பாண்டி நாட்டிற்குத் திரும்பிற்று. பாண்டியரோடு போர் புரிந்து அப்பல்லைப் பெறுதற்கு இயலாத நிலையிலிருந்த ஈழ நாட்டு மன்னனாகிய மூன்றாம் பராக்கிரம பாகு என்பான் நமது குலசேகர பாண்டியனைப் பணிந்து நட்புரிமை கொண்டு அதனைத் திரும்பப்பெற்றுச் சென்றனன்.*

இது கி. பி. 1284-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாகும். இச் செய்தி இலங்கைச் சரிதமாகிய மகாவம்சத்திலும் சொல்லப்பட்டுளது. நம் குலசேகர பாண்டியன் மலை நாட்டிலுள்ள கொல்லத்தைவென்று கைப்பற்றிக்கொண்டமையால், கொல்லங் கொண்டான் என்ற பட்டம் எய்தினன்.

சோழ நாட்டில் பல இடங்களில் இவனது கல்வெட்டுக்கள் காணப்படுதலால் இந்நாடு முழுவதும் இவனது ஆட்சிக்குட்பட்டிருத்தல் வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. அன்றியும் இவனுக்கு முன்னர் அரசாண்ட சடையவர்மன் சுந்தர பாண்டியனது ஆளுகையின் கீழிருந்த எல்லா நாடுகளும் இவனது ஆட்சிக்கும் உட்பட்டிருந்தன என்பது அவ்விடங்களில் காணப்படும் இவனது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.

மாறவர்மன் விக்கிரம பாண்டியனும், சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்ற பெயருடைய இருவரும், வீரபாண்டியனும் இவன் காலத்திருந்தனர் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். (The Pandyan Kingdom pp. 180) அவர்கள் எவ்வெப்பகுதிகளை ஆண்டனர் என்பது தெரியவில்லை.

இவ்வேந்தன் காலத்தில் மாவலிவாணராயன் என்ற பட்டமுடைய பல அரசியல் தலைவர்கள் பாண்டி நாட்டில் இருந்தனர் என்பது தெரிகிறது.

---

* நான்காம் பராக்கிரமபாகுவினால் புத்ததேவரது பல்லிற்கு ஒரு பெருங்கோயில் பின்னர் அமைக்கப்பெற்றது. (Ancient Dekhan page 171)

நம் குலசேகர பாண்டியற்குச் சுந்தரபாண்டியன் வீர பாண்டியன் என்ற இருபுதல்வர் இருந்தனர். இவர்களுள், சுந்தர பாண்டியன் பட்டத்தரசியின் புதல்வன்; வீரபாண்டியன் அரச னதுகாதற்கிழத்தியின் மகன். இவ்விருவருள் வீரபாண்டியனே ஆண்மையும் வீரமுமுடையவனுக விளங்கினுன். இதனை யுணர்ந்த குலசேகர பாண்டியன் தனக்குப் பின் தன் இராச்சி யத்தை நன்கு பாதுகாத்து ஆட்சிபுரியவல்ல அரசிளஞ்சிங்கம் வீரபாண்டியனே என்று கருதி அவனுக்கு கி. பி. 1296-ல் இளவரசு பட்டங்கட்டினுன். இராச மாதேவியின் மகனுகிய சுந்தரபாண்டியன் தன் தந்தையின் செயலைப் பெரிதும் வெறுத் தனன். இறுதியில் கி. பி. 1310ஆம் ஆண்டில் தன் தந்தையைக் கொன்று சில போர் வீரர்களின் துணைகொண்டு மதுரைமா நகரில் அரியணை ஏறினுன். இளவரசு பட்டங் கட்டப்பெற்ற வீரபாண்டியன் தலை நகரைவிட்டு ஓடிவிட்டான். நாற்பத்து நான்கு ஆண்டுகள் பாண்டி நாட்டைச் சிறப்புடன் அரசாண்ட குலசேகர பாண்டியனது வாழ்நாள் இங்ஙனம் முடிவுற்றது.

(தொடரும்.)

கோளறு திருப்பதிகம்.

பண்டிதர், திரு. அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

நிலத்துக்கு மேலாறு நீடுலகத் துச்சித்
தலத்துக்கு மேலேதா னென்பர்—சொலத்தக்க
சுத்தர்கள்சேர் காழிச் சுரன்ஞான சம்பந்தன்
பத்தர்கள்போய் வாழும் பதி.

(நம்பியாண்டார் நம்பிகள்.)

சண்பைநாடுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசருடன் திருமறைக்காட்டில் தங்கிக் கண்பயில் நெற்றியார்தம் கழலிணைபணிந்து போற்றிப் பூண்பயில் பதிகம் பாடிப் பரவியிருந்தபொழுது, மதுரையினின்றும் வந்த ஒற்றர்களால் அங்குற்ற நிகழ்ச்சிகளை யறிந்து, மற்று அவர் கட்குஅருள்புரிந்து வாகீசமுனிவருடன் கூடச்சென்று, பெற்றம் உயர்த்தவர் பாதம்பணிந்து போந்து, பெரிய திருக்கோபுரத்தில் எழுந்தருளியிருந்து பாண்டிமா தேவியாரும் அமைச்சரும் உரைத்துவிடுத்த வார்த்தையை அவருக்குச்சொல்லி மதுரைக்கு எழுந்தருளுதற்குத் துணிந்தனராக, அதனையுடன்படாத திருநாவுக்கரசர் "பிள்ளாய்! அந்த அமணர்புரிவஞ்சனைக்கு ஓர் அவதியில்லை; அன்றியும் இஞ்ஞான்று நமக்குறுகோளும் தீயன; ஆதலின் செல்லவொண்ணாது" என விலக்கினபொழுது, "சிவனடியார்களுக்கு எவ்வெத்தீயனவும் மிகமிக நல்லவாம்" என அவர்பாடிய பதிகமே **கோளறு திருப்பதிகம்** எனப்படும். இப்பதிகத்தின் இரண்டாம் பாடல்:—

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பிலங்க எருதேறி
[யேழையுடனே
பொன்பொதி மத்தமாலைபுனல்சூடி வந்தென்உளமேபுகுந்த
[அதனால்
ஒன்பதோ டொன்றேடேழ பதினெட்டொடாறும்
[உடனாயநாள்களவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்லநல்ல அடியாரவர்க்கு
[மிகவே.

என்பது.

இப்பாடலின் மூன்றும்அடியிற் குறித்த பொருள்பற்றிச் சிலகூறி, இதில் எழூஉம் ஐயத்தை விளக்குக என நமது தமிழ்ப்பொழில், ஏழாந்துணர் மூன்றும்மலரில், **திரு. பூரணலிங்கம் பிள்ளையவர்கள்** வினவி யுள்ளார்கள். இப்பொருள் பற்றியே, சென்னைச் சைவ மாசமாசத் திங்கள் வெளியீடாகிய **சித்தாந்தம்** பத்திரிகையிலும் சென்னை **ஈ. த. சோக்கம்மாள்** பி. ஏ., எல். டி., என்னும் அம்மையாரும், யாழ்ப்பாணம் **இந்து**

சாதனம் உதவிப்புத்திராசிரியர் வண்ணை, இராமநாதனேன்பாரும், இலக்கண விளக்கச் சோமசுந்தரனாரும் விடுத்த கட்டுரைகள் வந்துள்ளன. இவர்தம் கொள்கைகளுள் முரண்பாடுறுவன காட்டி முரணில் பொருள்காணவே இக்கட்டுரையினை யெழுதலுறுகின்றேன்.

இக் கோளறு திருப்பதிகத்துள், முதற்பாடலில், ஒன்பான் கோள்களையும், இரண்டாம் பாடலில், தீயநாள்களையும், பிறபாடல்களில், பற்றி வருத்தும் பிறவற்றையும் கூறிவந்து, திருக்கடைக்காப்பில்,

> தேனமர்பொழில் கொளாலை விளைசெந்நெல்துன்னிவளர் [செம்பொனெங்கு நிகழ
> நான்முகனாதியாய பிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன்
> தானுறுகோளும், நாளும்அடியாரை வந்துநலியா வண்ணம் [முரைசெய்
> ஆனசொன்மாலை யோதும்அடியார்கள் வானில் [அரசாள்வராணைநமதே

என, அவற்றைத் தொடுத்துக் கூறியருளினர். இங்குக்கோளென்பது, நவக்கிரகங்களையும், பிற பற்றிவருத்தும் பொருள்களையும் குறிப்பதாம். நாள்என்பது ஆகாத நட்சத்திரங்களைக் குறிப்பதாம். இங்குக் குறித்த நாள்கள் தாம், முன், இரண்டாம் பாடலில் இன்னவென விளக்கப்பட்டவை. அவை:—

> "ஒன்பதொ டொன்றோடேழு பதினெட்டோடாறும் [உடனாயநாள்கள்" என்பன.

இவை, நாயனார் மதுரைக்குப் புறப்படுகையில் கூறியனவாகலின், வழிப்பயணத்துக்கு ஆகாத நாள்களையே குறிப்பன என்று தோன்று தொட்டுவரும் கொள்கையும் உண்டு. வழிநடைக்கேயாக, பிற நல்வினைத் தொடக்கத்துக்கேயாக, 'ஆகாதநாள்களும் நல்லனவாம்' என்று இவ்வடிக்குப் பொருள்கோடலே அமைவுடைத்து. அவையாவன:—

> ஆதிரை, பரணி, ஆரல், ஆயில்யம், முப்பூரம், கேட்டை,
> தீதுறுவிசாகம், சோதி, சித்திரை, மகம் ஈராறும்

மாதனம் கொண்டார் தாரார், வழிநடைப்பட்டார் மீளார்;
பாய்தனிற் படுத்தார்தேறார் பாம்பின்வாய்த்தேரைதானே

என்னும் சோதிட நூற்பாடலாற் குறிக்கும் பூன்னிரண்டுமாம்.

ஒன்பான் கோள்களுள், நற்கோள், தீக்கோள்களும் உளவெனினும், சேர்க்கை, பார்வை, இடம்மாறி வருதல் என்னும் இவ்வேறுபாட்டால், நற்கோள்களும் தீமை புரிவனவாம்; ஆதலின், ஒன்பான் கோள்களும் தீயன என்று கொண்டு "ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி பாம்பிரண்டுமுடனே ஆசறும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல அடியாரவர்க்குமிகவே" என்று முதற்பாடலிற் கூறியருளின நாயனார், நாட்களுள், அங்ஙனமின்றி, ஆகாதவற்றைப் பிரித்து அவற்றைமட்டும் "ஒன்பதோ டொன்றோடேழு பதினெட்டோடாறும் உடனாய நாள்கள் அவைதாம், அன்பொடு நல்லநல்ல அவை நல்ல நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே என்று இரண்டாம் பாடலிற் கூறியருளினர். அந்நாள்கள் இவையெனப் பெயர் குறியாது, எண்ணாற் குறிக்கப்பட்டிருத்தலால், இதற்குப்பலரும் பலவாறு பொருள்கூற முன்வருவாராயினர். அவர்களைக் கொள்கை வேறுபாடுபற்றி இருபிரிவினராகப் பிரிக்கலாம்.

1 அப்பாடலிற் கூறியவை எல்லா நாள்களும் என்பவர்.

2 அந்நாள்களை எந்த நாள் முதலாகக்கொண்டு எண்ண வேண்டும்? என்பவர்.

இவருள், திரு. பூரணலிங்கம் பிள்ளையவர்களும், வண்ணை இராமநாதனும் முதற்பிரிவினிற் சேர்பவராவர். இவ்விருவருள்ளும் திரு. பூரணலிங்கம்பிள்ளையவர்கள் கூறுவது:-

முதற்பாடலில் அனைத்துக்கோள்களும் நல்லவெனக் கூறிய நாயனார், இரண்டாம் பாடலிலும் அனைத்து நாள்களும் நல்லவெனக் கூறினராதல் வேண்டும். ஆதலின் அவ்வடிக்கு (ஒன்பதொடொன்றோடேழு பதினெட்டோடாறும் உடனாய நாள்கள்) 9, 1, 7 ஆக (எப்படியாயினும்) மூன்று நாள்கள், 18+6=

24 ஆக இருபத்தேழு நாள்களும் நல்ல எனல் சாலுடைத்து* என்பது. இருபத்தேழு நாள்களும் என்று கூறவேண்டியதற்கு, அருண்ஞானப்பாலுண்ட சம்பந்தர் இவ்வாறு கூறினர் என்பது பொருளில் கூற்றாம்.†

வண்ணை இராமநாதனாரோ, அவ்வடி (ஒன்பது....நாள்கள்) இருபத்தேழு நட்சத்திரங்களையும், பதினைந்து திதிகளையும் குறித்ததென்பர் $27+15=42$; அவ்வடியில், குறிப்பன $9+1+7+18+6=41$; 42 எண் வரவேண்டியதற்கு 41 எண்ணைக் கணக்குக்காட்டி மற்றொன்றை உத்திவகையினுதல் இலேசினுதல் பெற வைத்தாரென்பர். இதுவும் வேடிக்கையாகவேயிருக்கிறது. பதினைந்து திதிகளைக் கூறவேண்டிய சம்பந்தர் பதினான்கு திதிகளைக் கூறியொன்றைமட்டும் பிறவாற்றாற்பெற வைப்பானேன்? இவர் கருத்துப்படி கொள்வதற்கும் 14 என்னும் எண் எங்கும் குறிக்கப்படவில்லையே. நாயனார்க்கு அது கருத்தாயின் பதினெட்டோடேழும் என்றன்றே எளிதிற் கூறியிருப்பர். நண்பர், தம்கொள்கையை யமைப்பான் வேண்டிச் சித்திரக்கவிகள் இவ்வாறு மயங்கவைப்பதும், வளைவாகக் கூறுவதும் வழக்கந்தானே யென்கின்றனர்.‡ எத்தகைய சித்திரக் கவியேனும் இயன்றவரை பொருள் புலப்படப் பாடுவதே உத்தமக் கவிகளினியல்பு; அன்றியும் இவ்விரண்டாம் பாடல் ஒரு சித்திரக்கவியுமன்றே; நாயனாரது சித்திரக்கவித் திறத்தை யளவிடற்குரிய இடமும் இஃதன்றே. ஆதலால், அனைத்து நாள்களையும் இப்பாடல் குறிக்கவில்லையென்பதற்கு இப்பாடலே சான்றாகின்றது.

இனி, இரண்டாம்பிரினராவார், முற்குறித்த அம்மையாரும், இலக்கண விளக்கச் சோமசுந்தரனார் குறிப்பிடும்

---

* இவ்வாறுதமக்கு ஒரு சோதிடர் கூறியதாகத் தெரிவித்தனர். இச்சோதிடர் கூற்றைப் படிக்கும்பொழுது அடங்காத சிரிப்புண்டாகிறது.

† இங்கு அவர்கள் ஒரு உரையைக் காட்டுகின்றனர். அதில் ஆறு என்பதற்கு நான்கு என்று அர்த்தம் எழுதியிருக்குமானால் அது ஒரு உரையென்று எவ்வாறு கொள்ளலாம்?

‡ சித்தாந்தம் மலர் 4 இதழ் 10 பக்கம் 250.

யாழ்ப்பாணம் சபாரத்தின முதலியார், கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் என்னும் மூவரும். (இவர்களுக்கு இப்பாடல் அனைத்து நாள்களையும் குறித்ததென்பது உடன்பாடன்று; ஆகாத நாள்களைக் குறித்ததென்பதே உடன்பாடு).

இவருள் சபாரத்தின முதலியார், கார்த்திகையை முதலாக எண்ணி "ஒன்பதொடொன்று....நாள்கள்" ஆகாத நாள்களைக் குறிப்பதை யறிக என்பர். கார்த்திகையை முதலாகக்கொண்டு எண்ணியதும் சிலப்பதிகாரம், மணிமேகலை யிவற்றின் காலமாகிய கி. பி. 2-ஆம் நூற்றாண்டாகலானும், சம்பந்தர் காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டென்று கல்வெட்டுத் துணைகொண்டும், பிறசான்று கொண்டும் சரித ஆசிரியர் நன்கு நாட்டுவர் * ஆகலானும் முதலியார் கூற்று முரண்பாடுடையதாகின்றது. இனி, அம்மையாரோ, 'கோளறு திருப்பதிகத்தில் இரண்டாம் செய்யுள் பரணியைத் துருவனாகக் காட்டிக் கணக்கெடுக்கப் படுவது...." † எனக்கூறி, அவ்வாறு கொள்வதால் அச்செய்யுள், ஆகாதநாள்களிற் பலவற்றைக் குறிப்பதாகும் என்றும், அதனால் சம்பந்தர்காலம், பரணியை முதலாக்கொண்டு எண்ணிவந்த காலமாகுமென்றும் தெரிவிக்கின்றனர். ‡

"பரணியை முதலாகக்கொண்டு ஒரு காலத்தும் எண்ணப் படவில்லை; அம்முறையில் எண்ணிவந்தனரெனற்கும் சான்று பிறிதில்லை" என்பர். § "பரணி முதலாக ஒருகாலத்து நாள் களையெண்ணியிருப்பர்" என வைத்துக்கொள்ளினும் அதுவும் இங்குப் பொருந்தாது. அசுவனி முதலாக நாள்களை யெண்ணிவர ஏற்படுத்தியவர் வராகமிகிரர் என்பவர்; அவரதுகாலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு எனச்சரித்திர அறிஞர் கூறுவர். சம்பந்தர்

---

* தமிழ்ப்பொழில், துணர் 7, மலர் 2 பக்கம் 70.

† சித்தாந்தம் மலர் 4, இதழ் 6, பக்கம் 157.

‡ ஷை ,, 4, ,, 9, ,, 238.

§ இது, வானநூல் சோதிட நூற்புலவரும், கோயமுத்தூர் அரசினர் கல்லூரி வடமொழியாசிரியரும் ஆகிய திரு, A. குப்புசாமி ஐயரவர்கள் கூற்று.

காலமோ முற்கூறியவாறு 7-ஆம். நூற்றுண்டு ஆகும். அதனல் பரணியை முதலாகக் கொள்வது யாங்ஙனம்? இனிக், கார்த்திகை முதலாக எண்ணப்படற்குமுன், ஒருகாலத்தில் மிருகசீரிடமும் முதலாக எண்ணப்பட்டு வந்ததென்பர்; அவர் கொள்கையின்படி பொருள்பண்ணவும் இப்பாடல் (ஒன்பது... நாள்கள்) இடந்தருமாதலான் அதுபற்றிச் சம்பந்தர் கி. மு. பல நூற்றுண்டிற்கப்பாற் பட்டகாலத்தினரெனக் கூறலாகுமா? ஆதலின் அம்மையார் கூற்றும் முரண்பாடுடையதாகின்றது.

இனிக் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியாரவர்கள் (அகத்தியர் தேவாரத்திரட்டுரை) அசுவனி முதலாக எண்ணி இப்பாடலுக்குப் பொருள் கூறுவதே கால ஆராய்ச்சிக்கு ஒத்ததாயும் பிறமுரண்பாடில்லதாயும் இருக்கிறது. நட்சத்திரங்களையொருகாலத்தில் கார்த்திகை முதலாக எண்ணி வந்தமைக்கும், இப்போது அசுவனி முதலாக எண்ணி வருவதற்கும் மணிமேகலையுரையிற் காரணம் பின்வருமாறு கூறப்படுகின்றது:— 'பகலையும் இரவையும் சமனக முப்பது முப்பது நாழிகையாகவேபெற்ற இரண்டு விஷுவதினங்களுள் ஒன்றாகிய மேஷாயனத்திற் சூரியனுக்கு எந்த நட்சத்திரத்திற் பிரவேச முண்டாகிறதோ, அதை நட்சத்திரங்களில் முதலாகக் கூறுவது சோதிடநூற்றுணிபாதலாலும், முன்னொருகாலத்தில் சூரியனுக்குக் கிருத்திகாப்பிரவேசமிருந்தபொழுது மேஷாயனம் நேரிட்டிருந்ததென்றும், அதுபற்றிக் கார்த்திகையை முதலாகக் கொண்டு எண்ணிவந்தார்களென்றும் சோதிட நூல்களாற் றெரிகின்றது. (பாத்திரம்பெற்ற காதை அடி 42-ன் உரை). 'முன்னொருகாலத்தில் நட்சத்திரங்களைக் கார்த்திகை முதலாக எண்ணி வந்தார்களென்பது.......தெரிகிறதென்பர். உச்சயினி நகரத்தில் விக்கிரமார்க்கனுடைய அவைக் களத்திலிருந்த நவரத்தினங்களுள் ஒருவரென்று சொல்லப்படுகின்ற வராகமிகிரர்என்னும் பிரசித்தசோதிடர் தமதுகாலத்தில் சூரியனுக்கு மேஷாயனத்தில் அசுவினி நட்சத்திரப் பிரவேசமுண்டாயிருத்தலையறிந்து பழைய வழக்கத்திற்குமாறாக அசுவனி முதலாக எண்ணும் வழக்கத்தை ஏற்புறுத்தினமையின் இக்காலத்தில்

நட்சத்திரங்கள் இங்ஙனம் எண்ணப்பட்டுவருகின்றனவென்பர்.'* இவ்வராகமிகிரர் 6ஆம் நூற்றாண்டினரும் † நம் சம்பந்தர் 7ஆம் நூற்றாண்டினரும் ஆயின் தேவாரப்பதிகப்பாடலுக்குக் கயப் பாக்கம் சதாசிவச்செட்டியாரவர்கள் கூறும் உரையே கொள்ளத் தக்கதென்பதில் யாதுதடை? "ஒன்பதொடொன்றோடேழு பதினெட்டோடாறும் உடனாய நாள்கள்" என்னும் இவ்வடிக்கு அவருரைப்பது,—'ஒன்பது—ஆயிலியம்; (ஒன்பதோடொன்று) பத்து—மகம்; (ஒன்பதோடேழு) பதினாறு—விசாகம்; பதி னெட்டு—கேட்டை; ஆறு—திருவாதிரை; உடனாய நாள்கள்— ஏனையவை; அவை—பரணி; கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி, என்பவை என்பதாம். (நாள்கள் என்றதனால் ஆகாததிதி கிழமைகள் அடங்கினமையும் காண்க.)

இவற்றால், சம்பந்தர் தேவாரம், கோளறுபதிகத் திரண் டாம்பாடலில் வரும் "ஒன்பதோ டொன்றோடேழு பதி னெட்டோ டாறுமுடனாய நாள்கள்" என்பது நாள்கள் அனைத் தையும் குறிக்கவில்லை; அவற்றுள் ஆகாதனவற்றையே குறித்த தென்பதூஉம், அவைகளும் கார்த்திகை முதலாக— பரணி முதலாக எண்ணப்பட்டவைகளல்ல; அசுவனி முதலாக எண் ணப்பட்டவைகளே என்பதூஉம், அதுவே கால ஆராய்ச்சிக்கும் ஒத்ததென்பதூஉம் பெற்றாம்.

என்றும் அடியவ ருள்ளத் திருப்பன; இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன; நல்லசங்கத்
தோன்றும் புலவர்கள் யாப்புக் குரியன; ஒண்கவியைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே.

(நம்பியாண்டார் நம்பிகள்.)

---

* பாத்திரம்பெற்ற காதை.

† Haye's History of Indian Mathamatics.

கம்பர் உவமக்கவின்.

பண்டிதர், திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள்,
போர்டு உயர்தரப்பள்ளிக்கூடம், நன்னிலம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரி ஆண்டு நிறைவு விழாவில் என்னால் நிகழ்த்தப்பெற்ற இச்சொற்பொழிவு, தமிழ்ப்பொழில் வாயிலாக வெளிவருமாயின், மிக்க பயன்படுவதொன்றாகுமாகலின், இதனை அவ்வாறு வெளிப்படுத்தல்வேண்டுமென, அன்பர்கள் பலர் பணித்தமையே இக்கட்டுரை இப்பொழிலில் இடம் பெறுவதற்குக் காரணமாயிற்று.

இங்கு, கம்பர் உவமக் கவினைப்பற்றிக் கூறப்புகுமுன் உவமம், என்பதுபற்றிச் சிறிது கூறவேண்டுவது இன்றியமையாததாகின்றது.

உவமம் என்பது ஒருபொருளோடு ஒருபொருளை ஒப்புமை கூறுவது. அவ்விரண்டனுள் உவமப்பொருளை உவமம் அல்லது உவமையென்றும், உவமிக்கப்படும் பொருளைப் பொருளென்றும் கூறுப. உவமையை, உபமானமென்றும், பொருளை உபமேயமென்றும் கூறுதலுமுண்டு. இவ்வுவமத்தை உள்ளுறையுவமம், வெளிப்படையுவமம் என இரண்டாகப் பகுத்தோதுவர். இவ்வுவமத்தின் வேறுபாடுகள், வினை (தொழில்) பயன், மெய் (வடிவு) உரு (நிறம்) என நான்காகும். 'புலியன்ன சாத்தான்' என்பது புலிபாய்வது போலப் பாய்கின்ற சாத்தனெனத் தொழில்பற்றி வந்தமையின், வினையுவமம். 'மாரியன்ன வண்கை' என்பது மாரியால் விளைக்கப்படும் பொருளும் வண்கையாற் பெறப்படும் பொருளும் ஒக்குமென்றலின் பயனுவமம். 'துடியிடை' என்பது வடிவுவமம், துடிக்கும் இடைக்கும் வடிவொத்திருத்தலின். 'பொன்மேனி' யென்பது உருவுவமம், பொன்னிடத்தும் மேனியிடத்துமுள்ள நிறமே ஒத்தலின். இந்நான்கு வேறுபாடுகளுள் ஒன்றும் பலவும் ஓர் உவமையில் விரவியும் வரும். "பிறையெயிறு" என்றவிடத்து

பிறைக்கும், எயிற்றுக்கும், வண்ணமும்வடிவும் ஒத்திருத்தல் காண்க. இனி இவ்வுவமவகை நான்கும்! சிறப்பு, நலன், காதல், வலி, கிழக்கிடுதல் ஆகியஐந்தும் நிலைக்களமாகத் தோன்றும்.

இனி உவமை கூறுமிடத்து உவமைப்பொருள் உவமிக்கப் படும் பொருளினும் சிறப்புடைத்தாதல் வேண்டும். உதாரண மாக, கூந்தலுக்கு உவமை கூறுமிடத்து மேகம்போன்றகூந்தல் கடல்கொழித்த கருமணல்போன்ற கூந்தல் என்பனபோலக் கூறுதலே சிறப்புடைத்து, நிற ஒப்புமையேபற்றி காக்கைச் சிறகன்ன கருங்கூந்தல் எனக்கூறுதல் சிறப்புடைத்தன்று. உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமையாக்கியும் கூறுதலுமுண்டு. உவமம் பலவகைப்படுதலின் இவ்வுவம மொன்றனையே, பிற்காலத்தார் வடநூன் முறையைத் தழுவிப் பலஅணிகளாகப் பகுத்தோதுவாராயினர். இனி இவ்வுவமங் களைக் கவின்பெறக்கூறும் திறம்வாய்ந்த சிறந்த தமிழ்ப்புலவர் களின் வரிசையில் வைத்தெண்ணத் தகுந்தவர்களுள் நமது கம்பரும் ஒருவர். இவர் கூறும் உவமைநயம் அறிஞர்களால் பலபடப்பாராட்டிப் புகழத்தகுவதொன்றாகும். இவர் உவமம் கூறுமிடத்து, ஒருவமையை எடுத்துக்கொண்டு அதனையே பொருளுக்கேற்பப் பலவிடத்தும் கூறுதலை இவர்பாடியருளிய இராமாயணத்தில் பலவிடங்களிற் பரக்கக் காணலாம். உதாரணமாக,

தலையு மாகமுந் தாளுந் தழீஇயதன்
நிலைநி லாதிறை நிற்பது போலவே
மலையி னுள்ளவெ லாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்ததவ் வெள்ளமே. (1)

என்ற இச்செய்யுளில், மலையின் சிகரத்தையும், நடுவிடத் தையும், அடிப்புறத்தையும் சார்ந்து, அதில் நிற்பதுபோலக் காட்டி, உண்மையில் நில்லாமலே, அம்மலையினுள்ள பொருள் களெல்லாவற்றையும் வரன்றிக் கொண்டோடுகின்ற வெள்ளத் திற்கு, தம்மிடத்துவரும் ஆடவரை உயிரும் உடலும் ஒன்றெனத் தழுவி, உண்மையில் அன்பில்லாமல், அவர்களிடத் தன்புவைத் திருப்பதுபோல் நடித்துக்காட்டி, அவர்களிடத்துள்ள பொருள்

களையெல்லாம் கைப்பற்றிக் கொள்ளுகின்ற விலைமகளிரை ஒப்பிடுகின்ற நயம் போற்றத்தகுவ தொன்றாகும். இங்கு எடுத்துக்கொண்ட உவமமாகிய விலைமகளையே பல்வேறிடங்களிலும் உவமையாக்கிக் கூறுகின்றார். அவற்றுட் சிலவருமாறு,

அன்னமா மதிலுக் காழிமால் வரையை யலைகடல்
[சூழ்ந்தென வகழி
பொன்விலை மகளிர் மனமெனக் கீழ்போய்ப் புன்கவி
[யெனத்தெளி வின்றி
கன்னிய ரல்குற் றடமென யார்க்கும் படிவருங் காப்பின
[தாகி
நன்னெறி விலக்கும் பொறியென வெறியுங் கராத்தது
[நவிலுற் றதுநாம் (2)

அகழியின் சிறப்புக்கூற எடுத்துக்கொண்ட இச்செய்யுளில், அதன் ஆழத்திற்கு விலைமகளிரின் உள்ளத்தை உவமையாக்கி, "பொன்விலைமகளிர் மனமெனக்கீழ்போய்' எனக்கூறுகின்றார். அகழி ஒன்றற்கே பலஉவமைகள் கூறுவதும் ஈண்டு நோக்கத் தக்கது.

மெய்வரு போக மொக்க வுடனுண்டு விலையுங் கொள்ளும்
பையரவ் வல்கு லார்தம் உள்ளமும் பளிங்கும் போல
மையரி நெடுங்க ணோக்கம் சிதறலும் கருகி வந்து
கைபுகிற் சிவந்து காட்டும் கந்துகம் பலவும் கண்டார். (3)

தங்கள்பால் வருகின்ற ஆடவர்களுக்குத் தாங்கள் எந்த போகத்தைக் கொடுக்கின்றார்களோ அதேபோகத்தைத் தாங்களும் அவ்வாடவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, தாங்கள் கொடுக்கும்போகத்திற்கு மாத்திரம் விலையும் பெற்றுக்கொள்ளுகின்ற, விலைமகளிரின் உள்ளத்தையும் பளிங்கையும் போன்று, கண்ணோக்கம் படுதலும் கருகி வந்து கைபுகிற் சிவந்துகாட்டுகின்ற கந்துகங்கள் பலவற்றைக் கண்டனர்— எனக்கூறும் இச்செய்யுளில் சார்ந்ததன் வண்ணமாகின்ற கந்துகத்திற்கு அவ்வியற்கையுடைய விலைமகளிரின் உள்ளத்தை உவமையாக்கிக் கூறும் அழகும், அவர்களின் தன்மையைக் கூறுகின்ற நயமும் கருதி யின்புறத் தகுவனவாகும்.

"சுந்தர வான மாதர் துவரிதழ்ப் பவள வாயும்
அந்தமில் சுரும்புந் தேனும் ஞிமிறு முண் டல்குல் விற்கும்
பைந்தொடி மகளிர் கைத்தோர் பசையில்லை யென்ன விட்ட
மைந்தரி னீத்த தீந்தேன் வள்ளங்கள் பலவும் கண்டார் (4)

இச்செய்யுளில், கைப்பொருள் முழுவதையும் கவர்ந்துகொண்டு இனிப் பொருளில்லை யென்றறிந்து, விலைமகளிரால் நீக்கப் பெற்ற மைந்தர்களை, தேவமாதர்களும் வண்டினங்களும் உண்டு விடச்சிறிதும் பசையின்மையான் விரும்புவாரற்றுக் கிடக்கின்ற தேன் கிண்ணங்களுக்கு உவமையாக்கிக் கூறுகின்றார்.

"கலைமான் முதலா யினகண் டவெலாம்
அலைமா னுறுமா சையின்வந் தனவால்
நிலையா மனவஞ் சனைநே யமிலா
விலைமாதர்கண்யாரும்விழுந்தெனவே. (5)

இச்செய்யுளில், மாரீசன் மானுருக்கொண்டு வந்தபொழுது, அதைக்கண்ட கலைமான் முதலாயின பின்தொடர்வதற்கு, விலைமாதரின் உடலின்செயற்கை வனப்பைக்கண்டு, அவர்களின் வஞ்சம்நிறைந்த, நிலைபெறாத, அன்பற்ற, உள்ளத்தன்மையை உணராது, விரும்பித் தொடர்கின்றவர்களை உவமையாக்கிக் கூறுகின்றார்.

குன்றிடை யிவரு மேகக் குழுவிடைக் குதிக்குங் கூடச்
சென்றிடி னகலுந் தாழிற் றீண்டலாந் தகைமைத் தாகும்
நின்றது போல நீங்கும் நிதிவழி நேய நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனமெனப் போயிற் றம்மா. (6)

இக்கவியில், இராமருடைய கைக்ககப்படாது, அகப்படுவது போலக் காட்டியீர்த்துச் செல்லுகின்ற மாயமானுக்கு அத்தன்மையுடைய விலைமகளிரின் உள்ளத்தை உவமையாகக் கூறுகின்றார்.

தலைமையும் கீழ்மையும் தவிர்த லின்றியே
மலையினு மரத்தினு மற்று முற்றினும்
விலைநினைந் துளவழி விலங்கும் வேசையர்
உலைவுறு மனமென வுலாய தாதையே. (7)

இச்செய்யுளில், மேடு, பள்ளம், முதலிய எல்லாவிடங்களினும் வீசுகின்ற காற்றிற்கு, பொருளொன்றனையே கருதி, உயர்ந்தோர், தாழ்ந்தோர், மூத்தோர் இளையோர் எனக்கருதாது, தன்மனம் போனபடியெல்லாம் செல்லுகின்ற விலைமகளிரை ஒப்பிடுகின்றார்.

மூசு வண்டின மும்மத யானையின்
ஆசை கொண்டன போற்றொடர்ந் தாடின
ஓசை யொண்கடல் குன்றொ டவைபுக
வேசை மங்கைய ராமென மீண்டவே. (8)

வானரங்கள் அணைகட்டும் பொருட்டு, மலைகளைக் கொண்டு வந்து கடலில் போடும்பொழுது அவற்றில் தங்கியிருந்த யானைகளும் அம்மலைகளோடு கடலிற்புகுகின்றன. இதற்கு முன்னெல்லாம் அவ்யானைகளிடத் தன்புடையனபோல, அவற்றின் மதநீரை உண்பதற்காகச் சுற்றிக்கொண்டிருந்து அவை கடலிற் புகவே, திரும்பிவிடுகின்ற வண்டுக் கூட்டங்களுக்கு, இங்கு, விலைமகளிரை உவமையாக்கிக் கூறுகின்றார்.

ஏமத்தடு கவசத்தன ஒருவோரென இருவோர்
வாமப்பெருந் தோண்மேலன வதனத்தன உயிர்த்த
தாமத்தன மார்பத்தன சரணத்தன தங்கா
காமக்குல மடமங்கையர் கடைக்கண்ணெனக் கணைகள் (9)

இச்செய்யுளில் காமுகர்களின் மனதைப் புண்படுத்துகின்ற பார்வையையுடைய விலைமகளிரின் கடைக்கண்களை, இலக்குமணன், இந்திரசித்து ஆகிய இருவர்மீதும் தைத்த அம்புகளுக்கு ஒப்பிடுகின்றார்.

உய்வினை யொருவன் றூண்டா னுலத்தலிற் றவத்தை நண்ணி
அய்வினை நலிய நைவா னறிவிற்கு முவமையாகி
மெய்வினை யமைந்த காமம் விற்கின்ற விரகிற் றேலாப்
பொய்வினை மகளிர் கற்புப் போன்றதப் பொலம்பொற்
[றிண்டேர். (10)

இச்செய்யுளில் சாரதி தலையற்றதனால் நிலைகுலைந்ததேரிற்கு, விலைமகளிரின் நிலையற்ற கற்பை ஒப்பிடுகின்றார்.

இனி, இவ்வாறு விலைமகளிரைப் பலவிடத்தும் உவமையாக்கிக் கூறியதுபோலவே, இவர்கட்கு நேர்மாறாகவுள்ள குலமகளிரையும் பலவிடங்களில் உவமையாக்கியுள்ளார். அவற்றுட்சில வருமாறு.

தங்கணா யகரிற் றெய்வம் தவம்பிறி திலவென் றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்
எங்கணா யகர்க்குந் தேவ ரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா லிருந்து மேனாள் செய்தவம் செய்த தென்றான்.

இக்கவியில் விசுவாமித்திரர், தன்பின் வந்த இராமருக்கு ஓர் சோலையின் பெருமையை விளக்கிக் கூறுமுகமாக, தங்கள் நாயகர்களுக்குப் பணிவிடை செய்தலையே தவமாகவும், தங்கள் நாயகர்களையே தெய்வமாகவும் எண்ணி யொழுகுகின்ற குலமகளிரின் உள்ளம்போல் தூயது இவ்விடம் எனக் கூறுகின்றார்.

பந்த ருட்புரை பாசறைப் பொருள்வயிற் பருவம்
தந்த கேள்வரை யுயிருறத் தழுவினர் பிரிந்த
கந்த வோதியர் சிந்தையிற் கொதிப்பதக் கழலோர்
வந்த போதவர் மனமெனக் குளிர்ந்ததவ் வனமே. (12)

இச்செய்யுளில், இராமர், இலக்குவன், சீதை மூவரும் வனத்திற்குச் சென்றபொழுது, கங்கையாற்றைக்கடந்து, பாத்துவாசருடைய ஆச்சிரமத்தை நீங்கி அப்பாற் செல்லுங்கால், ஆங்கிருந்த வெப்பம் மிகுந்ததொரு பாலைவனம் இவர்கள் வந்தவுடன் குளிர்ந்த சோலையாகமாறிய தன்மையை உவமைமுகத்தால் விளக்கிக் காட்டவந்த கம்பர், தங்கள் நாயகரைப் பிரிந்ததனால் கொதித்துக் கொண்டிருக்கிற குலமகளிரின் மனதைப் பாலைக்கு உவமமாக்கியும், அந்நாயகர் திரும்பிவரக் கண்டு, அக்கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சியடைந்த அம்மங்கையர்களின் மனத்தை இராமர் முதலியோர் வந்தபோது மாறிய குளிர்ந்த சோலைக்கும் ஒப்பிட்டுக் கூறுகின்ற நயம் மிக்க இன்பந் தருவதொன்றாகும்.

விரிந்துறை துறைதொறும் விளக்கம் யாவையும்
எரிந்திழு தலைகல வொளி யிழந்தன
அருந்துறை நிரம்பிய உயிரி னன்பரைப்
பிரிந்துறை தருங்குலப் பேதை மாரினே. (13)

இச்செய்யுளில், ஓரிரவில் சீதா.பிராட்டியை நினைந்து நினைந்து வருந்துகின்ற இராவணன், அவ்வருத்தம் இவ்விரவு நீங்கினல் தணியுமோவென்று எண்ணி, ஒற்றர்களைக் கூவி, சூரியனைக் கொண்டுவருமாறு கட்டளையிட, அவ்வாறே நடு இரவில் சூரியன் உதையமாய்விட்டதால், இயற்கையாகப் போதுபுலர்வதற்கு முன்னரே, அன்று போது புலர்ந்துவிட்டமையின், இரவுமுழுதும் எரிவதற்குவேண்டிய நெய்யூற்றிவைக்கப் பெற்றிருந்த விளக்குகளில் நெய்முற்றிலும் எரிந்துபோகாமையால், சூரியோதயமாகியும் அவ்விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றனவாயினும், பகல் விளக்காகலின் பிரகாசமின்மையின், இவ்வாறு இரவைப் பிரிந்ததனுல் ஒளியிழந்த அவ்விளக்குகட்கு, அகப்பொருட்டுறைகளின் பாகுபாடுகளை முற்றவுணர்ந்த உயிர் போன்ற காதலர்களைப் பிரிந்ததனுல், ஒளிகுன்றித் தனித்திருக்கும் குலமங்கையர்களை உவமையாக்கிக் கூறுகின்ற நயம் கருதி இன்புறத் தக்க தொன்ருகும்.

ஈண்டுக் கூறியபொருளையே உவமையாக்கிப் பிறிதோரிடத்தில், "வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலாமெய்யாள்" எனக் கூறுதலும் இங்கு நோக்கத் தக்கதாகும்.

எள்ளிட இடனு மின்றி எழுந்தன இலங்கு கோபம்
தள்ளுறத் தலைவர் தம்மைப் பிரிந்தவர் தழீஇய தூமக்
கள்ளுடை ஓதி யார்தம் கலவியிற் பல்காற் கான்ற
வெள்ளடைத் தம்பற் குப்பைச் சிதர்ந்தென விரிந்த மாதோ

இச்செய்யுளில், மாரிக்காலத்தில் மிக்குத்தோன்றி விளக்குகின்ற இந்திரகோபங்களுக்கு, பிரிந்துசென்றிருந்த நாயகரைப் பள்ளியிடத்துத் தலைக்கூடப்பெற்ற குலமகளிர், பல்காலும் மென்றுமிழ்ந்த தம்பலக்குப்பை சிதறுண்டு கிடப்பதை உவமையாக்கிக்கூறும் நயம், மிக்க இன்பந்தருவதொன்ருகும்.

பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையிற் பொருள்வயினிற் [பரிந்துபோன
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய கொழுநர்வர மணித் [தேரோடும்

கண்டுமனங் களிசிறப்ப ஒளிசிறந்து மெலிவகலும் கற்பி
[னர்போல்
புண்டரிக முகமலர அகமலர்ந்து பொலிந்தனபூம் பொய்கை
[யெல்லாம். (15)

இக்கவியில், சூரியோதயமானவுடன், மலரப்பெற்ற தாமரைகளோடு கூடிப் பொலிவுற்று விளங்குகின்ற தடாகங்கட்கு, பிரிந்துசென்றிருந்தகாதலர் வரக்கண்டு முகமலர்ந்து பொலிவுற்று, மனமகிழ்வடைகின்ற குலமகளிரை உவமையாக்குகின்றார்.

இனி, ஒருபொருளுக்கு ஒருவமையை எடுத்துக்கொண்டு அப்பொருள் வருமிடந்தோறும், அவ்வுவமையினையே கூறுகின்ற அழகை இராமாயணத்திற் பலவிடங்களிற்காணலாம். உதாரணமாக,

பெரியநா ளொளிகொள்நாண விதமணிப் பித்திப் பத்தி
சொரியுமா நிழல்களாங்கு சுற்றலாற் கரிய சோதி
கரியனாய் வெளியனாகிச் செய்யனாய்க் காட்டுங் காண்டற்
கரியனா யெளியனாய்த்தன் னகத்துறை யழகனைப்போல் 16.

மணிகொள் வாயிலுட் சாளரத் தாள்களின் மலரிற்
கணிகொள் நாளத்திற் காலினும் புகையினுங் கலக்கும்
நுணுகும் வீங்குமற் றவன்நிலை யாவரே நுவல்வார்
அணுவின் மேருவின் ஆழியா னெனச்செலு மனுமன் (17)

எள்ளுறையு மொழியாமல் யாண்டையுநு முளனாய்த்தன்
உள்ளுறையு மழகனைப்போ லெம்மருங்கு முலாவினான்
புள்ளுறையுய் யானத்தை யுறநோக்கி யபற்போவான்
கள்ளுறையு மலர்ச்சோலை யபலொன்று கண்ணுற்றான் (18)

இம்மூன்று செய்யுட்களிலும் அநுமானுக்கு இராமனையே உவமை கூறியிருத்தல் காண்க.

இவ்வாறே இராமனையும் சீதையையும் பற்றிக் கூறும்போதெல்லாம், உயிரையும் உடலையுமே உவமையாக்குகின்றார். உதாரணமாக.

முனிவர் வந்து முறைமுறை மொய்ப்புற
இனிய சிந்தை யிராகவ னெய்தினன்
அனிக வெஞ்சமத் தாருயி ரேகத்தான்
தனியி ருந்த வுடலன்ன தையல்பால். (19)

இச்செய்யுளில், இராமர், கரதூடணர்களோடு யுத்தத்திற்குச் சென்றிருந்தபொழுது தனித்திருந்த சீதைக்கு உயிரைப் பிரிந்திருந்த உடலை உவமையாக்கிக் கூறுகின்றார்.

ஓடி வந்தனன் சாலையில் சோலையி னுதவும்
தோடி வர்ந்தபூஞ் சுரிகுழ லாள்தனைக் காணான்
கூடு தன்னுடை யதுபிரிந் தாருயிர் குறியா
நேடி வந்தது கண்டில தாமென நின்றான். (20)

இக்கவியில், மாயமானைப் பின் தொடர்ந்து நெடுந்தூரஞ்சென்று, அதனைக் கொன்றுவிட்டுத் திரும்பிவந்த இராமர் பன்னசாலையில் சீதையைக் காணாது திகைத்து நின்ற நிலைக்கு, தனது உடலை ஓரிடத்து வைத்துவிட்டுச் சென்றிருந்த உயிர், மீள அவ்வுடலை நாடிவந்து காணாது திகைத்து நிற்கும் நிலையை உவமையாக்குகின்றார்.

இங்குக்கூறிய இதனைப் பல்லாயிரம் செய்யுட்களுக்குப்பின் இராவணனைக் கொன்றுவிட்டு, சீதையை அசோகவனத்தினின்று அழைத்து வருமாறு இராமர் சொல்லியபொழுது, அவ்வாறே வந்த சீதை இராமரை மறுபடியும் கண்டாளெனக் கூறுமிடத்து நினைந்து,

மானமீ தரம்பையர் சூழ வந்துளாள்
போனதோ ருயிரினைக் கண்ட பொய்யுடல்
தானது கவர்வுறும் தன்மைத் தாமென
ஆனனங் காட்டற அவனி யெய்தினாள். (21)

எனக்கூறும் அழகு கழிபேரின்பம் பயப்பதொன்றாகும்.

இதைப்போலவே,

அன்ன தம்பியும் தானும் ஐயனும்
மன்ன னின்னுயிர் வழிக்கொண் டாலென
சொன்ன மாதவற் றொடர்ந்து சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினான் எனும் (22)

இச்செய்யுளில், தசரதனைப் பிரிந்து செல்கின்ற இராமனுக்கு அவனது உயிரை ஒப்பிடுகின்றார். இதனை,

காவியும் குவளையும் கடிகொள் காயாவுமொத்
தோவியஞ் சவிகெடப் பொலிவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினன். (23)

என்ற செய்யுளில், முன்பிரிந்துசென்ற உயிர் வந்ததுபோல் இராமன் தசரதன் மாட்டுச் சென்றான் என நினைவுற்றுக் கூறும் நயம் கருதி மகிழத் தகுவ தொன்றாகும்.

இனி ஒரேபொருளுக்கு இரண்டும், பலவுமான உவமைகளை நயம்பெறக்கூறும் அழகை இராமாயணத்திற் பலவிடங்களிற் காணலாம். உதாரணமாக,

சொல்லு மத்தனை யளவையில் மணிமுடி துறந்தான்
எல்லிமத் தெழுந்த மதியமும் ஞாயிறு மிழந்த
அல்லு மொத்தனன் பகலுமொத் தனன்அம ரென்னில்
வெல்லு மத்தனை யல்லது தோற்றிலா விறலோன். (24)

இச்செய்யுளில், இராமரால் மகுடபங்கம் பண்ணப்பெற்ற இராவணன் தோற்றத்திற்கு, சந்திரனை இழந்த இரவையும், சூரியனையிழந்த பகலையும், உவமையாக்குகின்றார். இவ்விரண்டு உவமைகளாலும் பெறப்படுவன யாவையெனின், மக்களுக்கு, பூதவுடம்பொன்றும், புகழுடம் பொன்றுமாக இரண்டுடம்பு களுளவென்பது, அறிஞரனைவர்க்கும் ஒப்ப முடிந்ததொன்றாகலின், இங்கு மகுடபங்கம் பண்ணப்பெற்ற இராவணனது பூதவுடம்பிற்குச் சந்திரனையிழந்த இரவையும், புகழுடம்பிற்கு, சூரியனையிழந்த பகலையும், உவமைகளாக்கிக் கூறுகின்றார். இவற்றுள் சந்திரனையிழந்த இரவு பொலிவை யிழத்தல்போல் இராவணனுடைய பூதவுடம்பு பொலிவற்றிருப்பதும், சூரியனை இழந்த பகல் என்பது பொருளற்ற சொல்லாவதுபோல், புகழுடம்பே பொருளற்றதாகி விட்டதென்பதும், இவ்வுவமைகளாற் பெறப்படுகின்றன.

பொன்னோக் கியர்தம் புலனோக்கிய புன்கணோரும்
இன்னோக் கியரில்வழி யெய்திய நல்விருந்தும்
தன்னோக்கிய நோக்குடை யோகியர் தம்மைச்சார்ந்த
மென்னோக் கியர்நோக்கமும் போன்று மீண்டதவ்வேல் 25

இச்செய்யுளில், இராவணனால் சடாயுவின்மீது பிரயோகிக்கப் பெற்று, அச்சடாயுவை ஒன்றும் செய்வதற்கின்றி வறிதே திரும்பிவந்த வேலாயுதத்திற்கு, விலைமகளிரின் மேனியழகை விரும்பிப்பார்த்த அற்பர்களையும், இல்லிலிருந்து, வந்த விருந்தினரை வரவேற்று, உபசரிப்பாரில்லாவிடத்துச் சென்ற நல்ல விருந்தினரையும், இந்திரியங்களின்வழி மனதைச்செலுத்தாத யோகியர்களை நோக்கிய பரத்தையர் நோக்கத்தையும், உவமைகளாகக் கூறுகின்றார். எனவே இங்கு ஒரேபொருளுக்கு மூன்றுவமைகள் கூறப்பெற்றுள்ளன. இவற்றுள், புன்கணோர், வேல் சென்றதற்கும், விருந்து, சென்றவிடத்தொன்றும் செய்யவியலாமைக்கும், மென்னோக்கியர் நோக்கம், அவ்வேல் பயனின்றித் திரும்பியதற்கும் உவமையாதல், ஓர்ந்துணர்க.

நஞ்சினில் நளிர்நெடுங் கடலில் நங்கையர்
அஞ்சன நயனத்தில் அவிழ்த்த கூந்தலில்
வஞ்சனை யரக்கர்தம் வடிவில் செய்கையில்
நெஞ்சினி னிருண்டது நீண்ட மேகமே.

இச்செய்யுளில் மேகத்திற்குப் பலஉவமைகள் கூறப் பெற்றிருத்தல் காண்க.

(தொடரும்.)

மிருச்சகடி

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி

வெண்மையான முத்துக்களும் செம்மையான பவளங்களும் விளைகின்றகடலால் சூழப்பட்ட இந்தப் பெரிய நிலவுலகத்திலே, நாம் குடிகொண்டு உறையும் கண்டத்திற்குப் பழமையாக வழங்கிவந்த பெயர் 'நாவலந்தீவு' என்பது. இந்தக் கண்டத்தின் நடுப்பாகத்திலே, 'மகதம்' என்று பேர்கொண்ட நாடொன்று உளது. அது பைம்பொன்னும், செம்மணியும் வெண்மணியும் விளையும் நல்ல மலையின் வளமும், பல ஆறுகளும் வாய்க்கால்களும் பரந்து பாயப்பெற்றதனுல், வேலி ஒன்றுக்கு ஆயிரக் கலமாக விளைகின்ற நீர்வளமும், நிலவளப்பத்தினுல் வானுற வளர்ந்துயர்ந்த தென்னைமரங்களின் முதிய காய்கள், ஏறிப் பறிப்பார் இல்லாமையால் தாமாகவே உதிர்ந்து, அத்தென்னை மரங்களின் கழுத்தளவில் வளர்ந்தோங்கிய பலாமரங்களிலே பழுத்துத் தொங்கும் பெரிய கனிகளை உருட்டிவிட்டு, அதன்கீழ் வளர்ந்த பாக்கு மரங்களிற் பழுத்த பவளம்போன்ற பாக்குக் குலைகளை உதிர்த்து, வாழைப்பழத் தாறுகளை வீழச்செய்து இனிய தேனமுதை அளிக்கும் அழகிய தோட்டங்களின் வளமும் நிறைந்தது. அந்த நாட்டிற்கு முகம்போல விளங்குவது உச்சயினிபுரம் என்னும் புகழ்வாய்ந்த நகரம். அந்த நகரத்தின் வீதிகளெல்லாம் ஆறுகளைப்போல அகன்றனவாயிருக்கும். ஒருவீதியின் ஒருகோடியிலிருந்து மற்றொருகோடி போய்ச்சேருவது ஒருதேயம்விட்டு மற்றொரு தேயம் போவதுபோல நடந்து வழிதொலையாது. வீதிகளின் இருபுறங்களிலும் அடுக்கடுக்காக அமைக்கப்பட்ட மாளிகைகளின் உச்சியை நோக்குவார்களுடைய தலைச்சூட்டுக்கள் கீழே வீழ்ந்துவிடும். ஆவண வீதிகளிலே கொடி உயர்த்தப்பட்ட கடைகளிலே

குவியல் குவியலாக நிறைக்கப்பட்ட பலவகை மணிகளும் மணிக் கலன்களும், தோயாப் பூந்துகில்களும் பார்ப்பவர்களுடைய கண்களைப் பறிக்கும். சதுக்கங்களிலும் சந்திகளிலும், பலவகையான கொய்யுளைப்பரி வண்டிகளும், அழகிய திமிலையுடைய எருதுகள் பூட்டப்பட்ட வண்டிகளும் வழிநடை மாக்களும் ஒன்றோடொன்று மோதித் தேக்கம் அடையாதபடி, வட்டுடை தரித்த குதிரைவீரர் 'போமின்' 'போமின்' என்று பூண் தரித்த பிரம்பை ஓங்கிய கையினராய் நின்று பாதுகாப்பர். சிற்றுண்டிச்சாலைகளிலே, பாகும் நெய்யும்கலந்து செய்யப்பட்ட பலவகை இனிய மாப்பண்டங்களும் பாலமுதும் கண்டோர் நாவில் நீர்வரச்செய்யும். ஆவண வீதிகளிலே கூடிய, ஒருவர் மொழி ஒருவர்க்குத் தெரியாத பலதேயத்தார் பேசும் மொழியொலியானது, ஒன்றோடொன்று ஒவ்வாத பல பறவைகளின் ஒலி காலையிலும் மாலையிலும் எழுவதைப் போலிருக்கும். இரவிலே ஆலயங்களின் விழவொலியும், இசைப்பாட்டொலியும் நாடக அரங்கங்களின் ஒலியும் பாரியொலியும் ஒழிவில்லாமல் கேட்கும்.

இத்தகை நகரத்தின் நடுவிலே, அழகிய அரண்மனை ஒன்று, எழுநிலை மாடம் உள்ளது, பலபொறிகள் அமைக்கப்பட்ட உயர்ந்தமதிலாலும், அதனை அடுத்து முதலைகள் நிறைந்த அகழியாலும் சூழப்பட்டது. அந்நகரத்திலே பல்லாயிரவாண்டுகளுக்கு முன்னே, பாலகன் ஓர் அரசன் அரியணை வீற்றிருந்து அரசாட்சி புரிந்தான்.

அக்காலத்திலே, அந்நகரத்திலே, அந்தணர் குலத்தோன், கல்வி அறிவு ஒழுக்கத்தால் சிறந்தவன், சாருதத்தன் என்பவன் இருந்தான். அரசர்கள் மதிக்கப்பெற்ற பொருளுடையவன், எல்லாரிடத்தும் அன்புடையவன், அவன் உண்மைநெறி சிறிதும் தவராதவன். அவனுக்கு வாய்த்த இல்லறக் கிழத்தி, 'தூதாதேவி' என்பவள், கணவனைத் தெய்வமாகக் கருதினவள்; கணவனுக்குப் பணிவிடை செய்வதைத் தவிர வேறே விரதம் இல்லையென்கின்ற கொள்கையை உடையவள்; கணவனுடைய முகமும் விருந்தினருடைய முகமும் அனிச்சப்பூவென்று

உணர்ந்து, எப்போதும் இன்முகமும் இனியசொல்லும் உடையவள்; ஓவியத்திலும் பிறன் உருவத்தைப் பாராதவள்; கற்புக்கரசி. நாயகன் நாயகி இருவரும் இல்லறத்தைவழுவாது நடத்திக் கொண்டு வருகையில், அவர்களுக்குக் கடவுள் திருவருளால் ஒரு மைந்தன் பிறந்தான். அவனுக்கு உரோகசேனன் என்று பெயரிட்டார்கள். அப்பிள்ளை பிறைமதியைப்போல வளரத் தாயும் தந்தையும், குழலோசையினும் யாழ் ஓசையினும் இனிதாகிய மழலைச் சொற்களின் இசையைக் கேட்டுத் தேவர்களுக்கும் கிடைக்காத இன்பத்தை நுகர்ந்து வாழ்ந்து வந்தனர்.

சாருதத்தன் நற்குணங்களெல்லாம் பொருந்தியிருந்ததனால், அவனை அந்த நாட்டாரும் பிறநாட்டாரும் நன்குமதித்தார்கள். வாணிபத் தொழிலில் மனஞ்செலுத்திப், பொன்னும், மணியும், தூசும், நானா முதிரைகளும் தொலை நாடுகளுக்கு அனுப்பிவிட்டு, நிதியை ஈட்டினன். அந்த நிதியானது ஐப்பசி கார்த்திகைத் திங்களிலே கழைநிலைபெருத காவிரியாறுனது கரைபுரண்டு பெருகுவதுபோலப் பெருகி, வாணன்வைத்த நிதியினும் விழுமிதாய், அளந்து கடையறியாதாயிற்று. செல்வம் பெருகப் பெருகச் சிலர், தம்பழைய நிலையை மறந்து, எளிமையடைந்த சுற்றத்தாரையும் நண்பரையும் யாரோவென்று பேசுவார். அவருடைய செல்வத்தை ஏதிலார் எல்லாம் ஆரத் தமர் ஆயினர் எல்லாரும் பசிப்பர். சிலருடைய செல்வம் நடுவூருள் பழுத்த எட்டிமரமாக இருக்கும். சாருதத்தனுடைய செல்வமோ அம்பலத்திலே வளர்ந்த மருந்துப்பட்டை மரம் போல நாடோறும் வறியவர்களால் கவர்ந்து கொள்ளப்பட்டன. பலவிடங்களிலும் அறக்கூழ்ச் சாலைகளையும் பாடசாலைகளையும் சாருதத்தன் அமைத்தான். கோயில்களைப் புதுக்கினன். இப்படியாகத் தான் ஈட்டிய பொருளை அறத்துறையிலே செலவிட்டான்.

ஆயினும், அவன்,

"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி." என்று திருவள்ளுவர்

ஓதிய அருமறைப்பொருளைக் கடைப்பிடிக்கவில்லை. ஒருவன்

ஈட்டியபொருளை நான்கு கூறுஆக்கி, ஒருகூற்றைத் தனக்கு இடர்வருமாகில் அப்போது வேண்டுமென்று வைப்பாக வைத்து இரண்டு கூற்றைத் தன்செலவுக்கென்று வைத்து, நாலாவது பங்கைத் தருமத்துக்கு வைத்துச் செலவிடவேண்டும். அப்படி யன்றிச் செலவின் கணக்கு இன்னதென்று தெரிந்துகொள்ளாமலே பொருளைச் செலவிட்டான். அதனால் அவனுடைய செல்வமெல்லாம் மெள்ளமெள்ளச் செல்வம் என்றன.

" அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்." என்பது

உண்மையன்றோ. செல்வமெல்லாம் வரவரக்குறைந்து, உணவுப் பொருளுக்கே முட்டுப்படும் காலம்வந்தது. அவன் குடியிருந்த வீடும் பழுதாகி, கூரையின்மேல் பெய்த மழையெல்லாம் உள்ளே ஒழுகினது.

அவ்வாறாகச் சாருதத்தன் மிடியினால் வருந்துகின்ற காலத்திலே, ஒருநாள் இரவில், நடுயாமத்தில் அயல் நாட்டான் ஒருவன், இரந்துண்பவன், நோயாளி, பசியால் வருந்திவந்து சாருதத்தன் வீட்டுக் கதவைத் தட்டினான். சாருதத்தன் சொல்லாமலே, அவனுடைய மனையாள் தூதாதேவி அம்மை உடனே தீமூட்டி, நொய்ச்சோறுஆக்கி மிக அன்புடன் இட்டாள். அதை வயிறார உண்டவன்,

" நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்பொழுதும்
மேலாறு மேலுறை சோரினும்—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழும் மாண்கற்பின்
இல்லாள் அமைந்ததே இல்." என்று சொல்லி

அவர்களை வாழ்த்திப் போனான்.

ஒருவனுக்கு உண்மையான நண்பர்கள் இன்னார் என்பது, அவனுக்கு வறுமைவந்த காலத்திலேதான் தெரியும்.

" கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்." என்பது திருக்குறள்.

சாருதத்தன் செல்வமுற்ற காலத்திலே, ஒருவரையும் கேளாமலே வந்தடைந்து அவனுடைய உணவை உண்டவர்களில்

பலர், அவன் வறுமையடைந்தவுடன் ஒருவருக்கும் சொல்லாமலே நழுவிவிட்டார்கள். பூக்களை வண்டுகள் மொய்ப்பது தேன் உள்ளவரையிலேதான். தேன் அற்றவுடன் வண்டுகள் அங்குத் தங்குவதுண்டோ. ஆயினும் 'மைத்திரேயன்' என்னும் நண்பன் ஒருவனும், 'வர்த்தமானகன்' என்னும் வேலைக்காரனும் 'இராதானிக்கா' என்னும் வேலைக்காரியும் சாருதத்தன் வீட்டிலேயேயிருந்து எல்லா உதவியும் செய்துகொண்டிருந்தார்கள்.

சிலகாலஞ் செல்ல, ஒருநாள் இரவில் 'சாருதத்தன்' மைத்திரேயனை அழைத்து, நகருக்கு புறம்பே உள்ள கோவிலுக்குப் போய் பார்வதிதேவிக்குப் பூசை செய்துவரும்படி வேண்டினன். மைத்திரேயன் அதற்குமுன் ஒருநாளும் வெறுத்துப் பேசாதவன் அன்று 'உங்களுக்கு தெய்வப் பைத்தியம் இன்னும் விடவில்லையே' என்றான். சாருதத்தன் அதைப்பற்றிக் கவலைப்படலுற்றது கண்டு, மைத்திரேயன், 'அந்தப் பார்வதி அம்மை தன் கணவன் கையில் ஓடெடுத்து இரந்துதிரிய விட்டனளே! ஒரு பிள்ளை முருகனுக்குப் பால் கொடுக்க மறுத்தனள்! மற்றொரு பிள்ளை கணபதியை மோதகத்துக்காக வீடுதோறும் போகவிட்டனள்! அண்ணன் கரியவனை உரியில் வெண்ணெய் திருடி புண்ணாவிட்டனள்! அந்த அம்மையைப் பூசை பண்ணிப்பண்ணி நாம் பெற்ற பேறு வறுமையே' என்றனன்.

ஆனால், இராதானிக்கா என்ற வேலைக்காரி 'இருட்டாக இருக்கிறது, நான் துணைக்கு வருகிறேன்' என்று சொல்லிப் பூசைக்கு வேண்டியவைகளை எடுத்துக்கொண்டும், ஒரு விளக்கைக் கையில் ஏந்திக்கொண்டும் கோயிலுக்குப் போகக்கதவைத் திறந்துகொண்டு புறப்பட்டாள். மைத்திரேயனும் பின்னே புறப்பட்டான். அப்பொழுது, 'வசந்தசேனை' என்னும் கன்னி, கொடியவன் ஒருவனுக்கு அஞ்சி அந்த வீட்டின் வாயிலில் புகுந்தவள், இராதானிக்காவின் கையில் இருந்த விளக்கைக் கைத்துணியால் நிறுத்திவிட்டு வீட்டுக்குள் புகுந்து ஒரு பக்கத்தில் மறைந்து நின்றாள்.

இந்த 'வசந்தசேனை' என்பவள் அந்த நகரத்தில் அரசனுடைய அவையில் இசைப்பாட்டுப் பாடும் பெண்கள்மரபில் தோன்றியவள். பெண்பாலார்க்குரிய அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்னும் குணங்கள் வாய்ந்தவள். தன்னுடைய இசைப்பாட்டைப் பார்க்கிலும், குணத்தாலும் நிறையினாலும் மேம்பாடுற்றவள் என்று அந்த நகரத்தார் எல்லாராலும் கொண்டாடப்பட்டவள். அவளுடைய குணங்களைத் தெரியாமல், அந்நகரத்து அரசனுடைய மைத்துனன் 'சமத்தானகன்' என்பவன் அவளை மணந்துகொள்ள முயற்சி செய்தான். அம்முயற்சி பலனற்றதனால் அன்றிரவு அவள் தன் வீட்டுக்கு நடந்துபோகும் வழியில் அவளை மறித்துக் கொண்டுபோகச் சூழ்ச்சிசெய்ய வந்தான். அவன் கையில் சிக்கிக் கொள்ளாதபடியே அவள் ஓடிவந்து சாருதத்தன் வீட்டுக்குள் புகுந்தாள்.

சமத்தானகன் சாருதத்தன் வீட்டு வாசலுக்கு வந்த இராதானிக்காவை வசந்தசேனை போலும் என்று உற்றுப் பார்த்தான். இராதானிக்காவும் மைத்திரேயனும் மிகச் சினந்து சமத்தானகனை வைதுவிட்டுக் கோயிலுக்குச் சென்றார்கள். வசந்தசேனை சாருதத்தன் வீட்டுக்குள் நுழைந்து விட்டாள் என்று நினைத்துச் சமத்தானகன் சாருதத்தனிடத்துப் பகைகொண்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பினான்.

இது இப்படியாக, வசந்தசேனை வீட்டுக்குள் நுழைந்த போது உள்ளே விளக்கு இல்லை. இருட்டாயிருந்ததனால் சாருதத்தன் இராதானிக்கா என்ற வேலைக்காரிதான் உள்ளே வந்தாளென்று நினைத்து, அவள் கையில் ஒரு போர்வையைக் கொடுத்து அருகில் படுத்திருந்த உரோகசேனன் என்ற பிள்ளை மேல் பனியின் வாடை படாதபடி போர்த்தச் சொன்னான். வசந்தசேனை பேசாமல் நாணமுற்று நின்றாள். செல்வம் ஒடுங்கினால் தொழுத்தையும் பொருட்படுத்தாள் என்னும் முதுரையை நினைத்துச் சாருதத்தன் வருந்தினான்.

அப்பொழுது, இராதானிக்காவும் மைத்திரேயனும் கோயிற்பூசையை முடித்துவிட்டு வீட்டுக்கு விளக்குடன் வந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடன் சாருதத்தன் 'முன்னே

உட்புகுந்த பெண் யாரோ தெரிந்திலதே! போர்வையைக் கையில் கொடுத்துப் போர்த்தச் சொன்னது 'தவறாயிற்றே' என்று சொன்னான். அந்தப்பெண் வசந்தசேனையென்றும் சமத்தானகனுக்கு அஞ்சிவந்து அடைக்கலம் புகுந்தாள் என்றும் மைத்திரேயன் சொன்னான். அதன்மேல் வசந்தசேனை சமத்தானகனுடைய கெட்ட எண்ணங்களைப்பற்றிச் சொல்லி, தன்னைப் பாதுகாக்கும்படி சாருதத்தனை வேண்டினாள். சாருதத்தனும் 'அஞ்சல்' என்ற சொல்லை வசந்தசேனைக்கு அளித்தான். சாருதத்தனுடைய மனைவியாகிய தூதாதேவியும் மைத்திரேயனும் இராதானிக்காவும், வசந்தசேனையின் குணங்களை முன்னமே நன்றாய்த் தெரிந்தவர்கள் ஆகையால், அவளுக்கு உற்ற துயரைப்பற்றி மிகவும் இரங்கி அன்பு பாராட்டினார்கள்.

வசந்தசேனை சமத்தானகனுக்கு அஞ்சித் தான் அணிந்திருந்த விலையுயர்ந்த முத்தாரத்தையும் பொற்பூண்களையும் செம்மணி வெண்மணி நீலமணி பதித்த அணிகலன்களையும் கழற்றிச், சாருதத்தன் கையில் கொடுத்து, அவற்றைப் பாதுகாப்பில் வைக்கச்சொல்லித் தன் வீட்டுக்குப்போக விடை தரும்படி வேண்டினாள். சாருதத்தனும் அந்த அணிகலன்களையெல்லாம் ஒருபெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, வசந்தசேனையை அழைத்துக் கொண்டுபோய் அவளுடைய வீட்டில் விட்டு வந்தான்.

அற்றைக்கு அடுத்த நாளிலே, 'சமவாக்கன்' என்பவன் சாருதத்தன் திருப்பெருகி வாழ்ந்த காலத்தே அவனிடத்து ஏவற்றொழில் செய்து பின்னர் விலகிப்போனவன், அவன் ஒருவீட்டில் சூதாடித் தோற்றுத் தான் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுக்காமல் ஒரு பாழுங்கோயிலுக்குள் ஒளிந்து கொண்டிருந்தான். அவனைச் சூதாடும் வீட்டுக்காரன் ஆகிய 'மதுரன்' என்பவனும் மற்றொருவனும் பிடித்துக்கொண்டு சென்றார்கள். வழியில் 'சமவாக்கனு'க்கு நண்பனாகிய 'தார்த்துரகன்' என்பவன் தடுத்துப் பேசினான். அற்றம் பார்த்துச் சமவாக்கன் ஓட்டம் எடுத்து வசந்தசேனையின் வீட்டுக்குள் புகுந்தான். மதுரன் முதலியவர்களும் அவனைப் பின்றொடர்ந்து

வசந்தசேனை வீட்டுக்குள் புகுந்தார்கள். வசந்தசேனை அவர்களுடைய வழக்கைக் கேட்டு, சமவாக்கன் முன்னமே சாருதத்தனிடத்தில் ஏவலாளனாயிருந்தான் என்ற பற்றுதலைக்கொண்டு அவன் சூதாடிகளுக்குக் கொடுக்கவேண்டிய பத்துப் பொற்காசுகளையும் கொடுத்துச் சமவாக்கனை விடுவித்தாள்.

வசந்தசேனையின் தோழி, வசந்தசேனையை நோக்கி,

" காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல்மறுத்தல் இவைகண்டாய்—போதில்
சினைபாமை வைகும் திருநாடா செம்மை
தினையாமை பூண்டார் நெறி.' என்று சான்றோர்

கூறியுள்ளாரே. கவறாடல் ஒருபெரிய பாவம் ஆயிற்றே. அந்தப் பாவத் தொழிலையுடைய இவனுக்கு உதவிசெய்வது முறையாகுமோ,

" ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றின்கண் உய்ப்பதோர் ஆறு." என்றாள்.

அதுகேட்டு வசந்தசேனை, தோழியைநோக்கி, நீ சொல்வது ஒக்கும். கவறாடல் பெரிய குற்றம் என்பது மெய்யே. ஆயினும் நீ அதற்கு அடுத்தபடியாக எடுத்துக்காட்டிய 'ஈதல்மறுத்தல்' என்பதும் பெரிய குற்றம் என்பதை நீ மறந்தாய்போலும்.

" கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்." என்பது பொய்யா

மொழியன்றோ. அதுவன்றியும், நேற்று என்னைப் பாதுகாத்தவர் சாருதத்தர் அல்லரோ? அவருடைய பழைய ஏவலாளன் இவனென்றால் இவனுக்கு உதவிசெய்தல் நமது கடமையன்றோ? அங்கண் வானத்தில் திங்களைத் தொழுகின்றவர்கள் அதனுள் இருக்கும் முயலை விலக்கித்தொழுகின்றாரோ? என்றாள். அவ்வாறு அவள் கூறியமொழிகள் சம்மாக்கனுக்கு ஞானத்தை உண்டாக்க, அவன் உடனே புத்தமதத்தை மேற்கொண்டு துறவியாகிவிட்டான்.

அடுத்த நாள் மாலையில் சாருதத்தன் ஒரு நண்பன் இல்லத்தில் யாழிசைப் பாடல் கேட்கச்சென்று நள்ளிரவில்

இல்லத்துக்கு வந்தான். வசந்தசேனையின் அணிகலப்பெட்டி ஓர் அறையில் பாதுகாப்பில் இருப்பதைப் பார்த்துவிட்டு தான் படுத்து நன்றாய் உறங்கிவிட்டான்.

விடியற்காலம் தொழில் செய்வோள் ஆகிய இராதானிக்கா எழுந்தவள் பின்பக்கத்துச் சுவரில் கன்னம் இடப்பட்டிருத்தலைக் கண்டாள். உள்ளே வைக்கப்பெற்ற அணிகலப்பெட்டியைக்கண்டிலள். அவள் அதைப்பற்றித் தூதாதேவியை எழுப்பிச் சொன்னாள். சொன்னவள், திருடன் ஐயரையும் மைத்திரேயனையும் துன்பம் செய்யாமல் பெட்டியோடுபோனது நல்லகாலம் என்று சொன்னாள். அதுகேட்டுத் தூதாதேவி சினந்து, ஏ அறிவிலி! நம் ஐயர் திருடனால் ஊறுசெய்யப் பட்டிருந்தால் நன்றாக இருக்கும். பெட்டி திருடப்பட்டதை உலகமும் கொள்ளாது. ஒருவருக்கும் ஊறில்லையென்றால் பெட்டி களவாடப்பட்டதை இவ்வூரில் இப்போது யார் நம்புவர்? நம்பினோரை வஞ்சித்துப் பொருளை நாமே எடுத்து மறைத்து வைத்துக் கன்னமும் நாமே இட்டு வைத்தோமென்று எல்லாரும் நம்மை இகழ்வாரே.

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.' என்றாள்.

சாருதத்தனும் மைத்திரேயனும் எழுந்து பார்த்துத் திகைத்து நின்றார்கள். தூதாதேவி தன் நாயகனுக்குப் பழிச்சொல் வரலாகாதென்று எண்ணி "என் ஆருயிர் நாயக! சென்றது பற்றிக் கவலுதல் ஒழிக. இனி ஆவதைக் கருதுக." என்று சொல்லித் தன்னுடைய முத்துமாலை ஒன்று, விலைபோகாமல் மிஞ்சியிருந்தது, அதையெடுத்து அவன் கையில் கொடுத்து, "வசந்தசேனையின் அணிகலங்களுக்கு ஈடாக இதனைக்கொடுத்துவிடுக" என்றாள். சாருதததன் தன் மனைவியின் அரியகுணம் பற்றி வியந்து, பெறுதற்கரிய இவளை இல்லறத்துணையாகப் பெற்ற என்போல நல்வினைப் பயனுடையவர் யாவர்? இனி இவ்வுலகில் யான் பெறுதற்கரிய வேறுபொருளும் உண்டோ?

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்." என்பது

உண்மையன்றோ? என்று சொல்லி, அந்த முத்து மாலையை மைத்திரேயன் கையில் கொடுத்து, 'நீ இத்துடன் வசந்த மாலைபால் சென்று, இதை அவளது அணிகலங்களுக்கு ஈடாக ஏற்றுக்கொள்ளும்படி செய்து வருவாயாக என்றான். மைத்திரேகன் மீளவும் தடுத்து, "இந்த விலை மதிக்கப்படாத சிறந்த முத்தாரத்தைச் சிறியவிலைபெறும் வசந்தசேனையின் அணிகலங்களுக்கு ஈடாகக் கொடுத்து விடுவது அறிவுடைமையன்று' என்று சொன்னான். சாருதத்தன் அதைக் கேட்டலும், "வசந்தசேனையின் சிறந்த அணிகலன் ஆகிய குணம் இம் முத்தாரத்தினும் நன்குமதிப்பையுடையது. அந்த மதிப்பை அறியாமலோ அன்பிற்சிறந்த தூதாதேவி அந்த ஆரத்தை அளித்தனள். அதனை வசந்தசேனைக்குக் கொடுத்துவருதலே உன்னுடைய கடமை" என்றான். மைத்திரேயனும் வேறு சொல்வதின்றி அந்த ஆரத்தை எடுத்துக்கொண்டு வசந்தசேனை வீட்டுக்குச் சென்றான்.

இது இப்படியாக, அந்த அணிகலப்பெட்டியைத் திருடினவன் "சார்விலாகன்" வன்பவன்; மறையோர் குலத்தான்; ஆயினும், நல்லோர் தொடர்பு இல்லாதவன்; பொல்லார் தொடர்பே உடையவன்;

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்." என்னும்

அருமறை மொழியையும் மறந்தான். நிலத்தின் இயல்பால் நீரின் இயல்பு மாறுபட்டாற்போல, இவனுடைய அறிவும் மாறுபட்டது. வறுமையும் வந்தது. இவனுக்கு ஒருதொழிலும் தெரியாது. ஒருதொழிலும் செய்யலாற்றார்க்கு ஒரு சாண் வயிறு வளர்க்கவேண்டின், ஒன்று இரத்தல் தொழிலை மேற்கொள்ளவேண்டும். மற்றொன்று திருட்டுத்தொழிலை மேற்கொள்ளவேண்டும். சார்விலாகன் இரத்தற்றொழிலினும் திருட்டுத்தொழிலே நல்லதென்று கருதினான். திருடர்களோடு பழகி அத்தொழிலில் தேர்ச்சிபெற்றான். புலிபானது களிற்றை அதனை வலப்பக்கமாக வீழும்படி தாக்கி, அதன் தசையைப் பறித்து உண்ணும்; இடப்பக்கமாக வீழ்ந்ததானல் அதனைத்

தொடாது அப்பாற் செல்லும். ஆயினும் கடும்பசியுற்றால், ஒரு சிறுதேரையைப் பற்றியேனும் தின்னும் அன்றோ? இந்த நிலையில், சார்விலாகன் வசந்தசேனையின் தோழியாகிய 'மதானிக்கா' என்பவளை மணந்துகொள்ள விரும்பினான். 'மதானிக்கா'வும் நற்குணங்களால் "வசந்தசேனை"க்கு ஒப்பானவளே. ஆயினும் சார்விலாகன் திருட்டுத் தொழில் உள்ளவனென்பது அவளுக்குத் தெரியாது. அவள் "இல்லறத்துக்கு வேண்டுவது பொருள். அப்பொருளில்லாமல் இல்லறத்தை வேண்டலாகாது" என்று சார்விலாகனுக்குச் சொல்லிவிட்டாள். அவன் எப்படியாகிலும் பொருளைத்தேடி அவளை மணந்துகொள்ளவேண்டுமென்னும் கவலையுற்றான். அதற்கு வேண்டிய பொருளைத் திருடிக்கொண்டு வந்து விடலாமென்று எண்ணினான். திருடர்களுக்குப்பகை, நிலாவெளிச்சம், ஊர் காவலாளர், நாய், வீட்டில் நோயாளி, இவைகள். அவர்களுக்கு நட்பு (உடந்தை) அமாவாசை, மழை, துப்பன், நாடகம், திருவிழா இவைகள்.

ஆகவே சாருதத்தன் வீட்டிலே வசந்தசேனை தன் அணிகலன்கள் ஒரு பெட்டியிலே வைக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தி, அந்தத் தெருவில் உள்ள துப்பன் ஒருவனால் சார்விலாகனுக்கு எட்டியது. அவன் தன் கருத்து நிறைவேறும் காலம் வாய்த்ததென்று களித்து, அன்று அமாவாசையென்பதும், சாருதத்தன் இசைப்பாட்டு கேட்கப் போயினான் என்பதும் துப்பனால் உணர்ந்துகொண்டு, அன்றிரவு பன்னிரண்டு நாழிகைக்குமேல், தன் வீட்டைவிட்டுப் புறப்பட்டான். ஆந்தை பின்புறத்தில் குழறிபது. நிமித்தம் நன்றெென உணர்ந்தான். அந்தணன் கோலத்தைக் குறையாமல் பூண்டான். ஒரு கையிலே கமண்டலம், அதற்குள் சிலதோசைகளை அடைத்திருந்தான். மற்றொருகையில் தண்டம் ஒன்று. அதற்குள் கன்னக்கோல் செருகப்பட்டிருந்தது. நல்ல நீர்க்காவியேறின மடிஉடுத்தியிருந்தான். வாயினால் இரண்டொரு மறைமொழிகளைச் சொல்லிக்கொண்டு வீதிவழியே நடந்துசென்றான். கொஞ்சதூரம் சென்றதும் நாற்சந்தியிலே நின்ற ஊர்

காவலாளர் 'யார் போகின்றவர்' என்று விளக்கைக்கொண்டு பார்த்தார்கள். அவர்களில் ஒருவன் 'இவர் வைதிகப்பிராமணன், கையிலே கமண்டலம் தண்டம் இருப்பது தெரியவில்லையா' என்றான். மற்றவனும் 'நல்லது' என்று போகச்சொல்லி விட்டான். மறையவனும் மறையப்போயினான். சாருதத்தன் வீட்டின் பின் உள்ள ஒருமரத்தடியில் சேர்ந்தான். துப்பனும் அவ்விடத்தே வந்து சேர்ந்தான். அவன் ஒரு கட்டைத் தடியும், அரிவாளும் உடும்புகட்டிய நூலேணியும் நீலம்தோய்த்த கச்சையும் கொணர்ந்தான். மரத்திலே பல்லி அடித்தது. சகுனம் நன்றென்று துப்பன் சொன்னான். உடனே சார்வி லாகன் தன் ஆடையைக் களைந்துவைத்து, நீலக்கச்சையை உடுத்துக் கன்னக்கோலை இடுப்பில் செருகி, தோசையை ஒரு நீலத்துணியில் மடக்கிக்கொண்டான். அதற்குள் துப்பன் நூலேணியை உடும்போடு சுற்றுச் சுவர்மேல் எறிய, அங்கு உட்புறமிருந்து சாய்ந்த மரத்தின் கிளையை உடும்புவிடாமல் பற்றிக்கொண்டது. சார்விலாகன் நூலேணியில் ஏறி உள்ளே இறங்கி, அந்த பெட்டிவைத்திருக்கிற அறையின் சுவரில் அகழ்கருவியைக் கொண்டு அகழ்ந்தான். அப்போது அவ்வீட்டு நாயொன்று குலைத்துக் கொண்டு வரவே, அதற்கு முன் தோசையை எறிந்தான். நாய் தோசையைக் கவ்வி நின்று விட்டது. உள்ளே படுத்திருந்த மைத்திரேயன் சுவரில் ஓசைப் படுவது கேட்டுச் சிறிது விழித்து 'இராதானிக்கா! ஓசை கேட்கிறது என்னவென்று பார், விளக்கைக் கொளுத்து' என்றான். உடனே சார்விலாகன் பூனையைப்போலவும் எலி யைப்போலவும் கத்தினான். 'ஒன்றும் இல்லை பூனை எலியை விரட்டுகிறது' என்று இராதானிக்கா சொன்னாள். சார்வி லாகன் நெடுநேரம் அசையாமல் இருந்து பின்னர் உள்ளே இருந்தோர் எல்லாம் நன்றாய்க் குறட்டைவிட்டு உறங்குவதை உணர்ந்து, பின்னர் சுவரை நன்றாக அகழ்ந்து வழியாக்கி உட்புகுந்து, அப்பெட்டியை எடுத்துக்கொண்டு அப்புழை வழியாகவே வந்து நூலேணியிலேறி வெளிவந்து, பெட்டியை உளியால் பேர்த்து, உள்ளிருந்த கலன்களைத் தன் கமண்டலத்

தினுள் பெய்துகொண்டு, உடைந்த பெட்டியை மாறுதிசையில் கொண்டுபோய் எறிந்துவிடும்படி துப்பனிடம் கொடுத்துவிட்டுத் தான் தன் பழைய கோலத்துடன் வீடு சேர்ந்தான்.

இப்பால், சாருதத்தன் கொடுத்த முத்தமாலையை மைத்திரேகன் கொண்டுபோய் வசந்தசேனை கையில் கொடுத்து, 'உன்னுடைய அணிகலன்களைச் சாருதத்தர் சூதாட்டத்தில் தோற்றுவிட்டார். அவற்றிற்கு ஈடாக விலைமதிக்கப்படாத இந்த முத்தமாலையைக் கொடுத்து வரச் சொன்னார்' என்று சொன்னான். அம்மொழி கேட்ட வசந்தசேனை வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்து, அந்தமாலை, சாருதத்தர் தன்னைமணந்து கொள்ள விடுத்த தூதுபோலும் என்று நினைத்தாள். மைத்திரேயனும் விடைபெற்று மீண்டான்.

சார்விலாகன், இரவு முழுதும் கண் விழித்திருந்தான் ஆதலால் மறுநாள் காலையில் படுத்து நண்பகலான பின் எழுந்து அறுசுவையோடு பொருந்திய உணவை உண்டுகளித்து, மாலையில் அவ்வணிகலங்கள் பெய்த கமண்டலத்தை எடுத்துக்கொண்டு வசந்தசேனை வீட்டிற்குச்சென்று, மதானிக்காவைக் கண்டு, அவளுக்கு அந்த அணிகலன்களைக் கொடுத்துத் தன்னை இனியாகிலும் மணந்துகொள்ளத் தடையுண்டோ என்று கேட்டான். மதானிக்கா அந்த அணிகலன்களை உற்றுப்பார்த்து, அவையெல்லாம் சாருதத்தரிடம் வசந்தசேனை கொடுத்துவைத்த கலன்களே யென்று அறிந்து, 'இக்கலன்களை நீ எப்படி யடைந்தாய்.' என்று கேட்டாள். 'சார்விலாகன்' தான் அவைகளைத் திருடிக் கொண்டுவந்த செய்தியை ஒளிக்காமல் சொன்னான். மதானிக்காவுக்கு உடனே வியப்பும் அச்சமும் பிறந்தது. அவள், சார்விலாகனை நோக்கி, 'நீ செய்த காரியம் நன்றன்று. இந்த அணிகலன்களை நீ எப்படியாகிலும் சாருதத்தன் வீட்டில் சேர்ப்பித்தல்வேண்டும். சேர்ப்பித்தால் என் அம்மை வசந்தசேனையிடத்து அவை வந்து விடும்' என்றாள். சார்விலாகன், அதுசெய்யமுடியாத காரியம். செய்யின் தீங்கு நேரிடினும் நேரிடும் என்றான். மதானிக்கா, அப்படியானால், இந்தக் கலன்களை நீயே வசந்தசேனையிடத்தில் கொடுத்து, அவைகளைச்

சாருதத்தன் கொடுத்து வரச்சொன்னதாகச் சொல்லிப்போ' என்றாள். இப்படி இவ்விருவரும் பேசிக்கொண்டிருத்தலை, வசந்தசேனை மறைவிலிருந்து கேட்டு, மதானிக்காவின் சிறிதும் அழுக்கற்ற மனத்தைப் பற்றியும் சார்விலாகன் உண்மையுரைத்தது பற்றியும் வியந்து, அவ்விருவரையும் அழைத்துப் பாராட்டி, தன்னுடைய அணிகலன்களைப் பெற்றுக்கொண்டு அப்போதே அவ்விருவருக்கும் வேண்டிய பொருளை அளித்துத் திருமணம் முடித்துக்கொள்ள விடைகொடுத்து விட்டாள்.

அப்பால் வசந்தசேனை, சாருதத்தனது அருமையை நினைத்து, அன்று மாலையில் புறப்பட்டு, அவனுடைய வீட்டிற்குச் சென்று, தன்னுடைய அணிகலன்கள் யாவும் தன் இடம் சேர்ந்த வரலாற்றை எடுத்துரைத்து, அக்கலன்களையும் காட்டி, எல்லாரையும் மகிழ்ச்சியென்னும் கடலில் அழுந்தச் செய்தாள். அதன் பின், மைத்திரேயன் தன்பாற் சேர்ப்பித்த முத்தமாலையை எடுத்து, தூதாதேவியை நோக்கி, அருமையுள்ள அம்ம! இது உன்மாலை, இதனைப் பெற்றுக்கொள் என்று அவள் கையில் நீட்டினாள். தூதாதேவி அதனை வாங்கிக் கொள்ளாமல், 'ஏ அன்பிற்சிறந்த வசந்தசேனாய்! எனக்கு என் கணவனையன்றி அணிகலன் இல்லை. இந்த முத்தமாலை அவருக்கு உரியதே. அவர் என்று அதை விருப்பத்துடன் உனக்கு அளித்தாரோ, அன்று முதல் அது உனக்குரியதே. நானே உனக்கென்று அதைக்கொடுத்துவிட்டேன். நீ தரித்துக் கொள்' என்றாள்.

வசந்தசேனைக்குத் தன் நாயகன்பால் விருப்பம் இருப்பது தெரிந்து, தூதாதேவி மிகவும் மகிழ்ச்சியுடன் அவள் இரண்டாவது மனைவியாகத் திருமணத்தை முடித்து வைத்தாள். உலகத்தாரெல்லாம் தூதாதேவியின் கற்பின் மேம்பாடு பற்றிக் கொண்டாடி,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை." என்று சொல்லி

வாழ்த்தினார்கள்.

அப்பால் ஒருநாள், உரோகசேனன் என்னும் பிள்ளை, அப்போது ஐந்தாட்டைப் பிராயத்தான், களிமண்ணால் செய்யப்பட்ட முக்காற் சிறுதேரைக் கயிற்றால் இழுத்துத் தெருவில் விளையாடுவதை வசந்தசேனை கண்டு, மனம்கசிந்து, 'இவ்வருமை மைந்தன், மாற்றுயர்ந்த பொன்னால் செய்த உருளைகளும், செம்மணிவெண்மணி பதித்த சிறுதேரும், குதிரைகளும், நல்ல பட்டினால் முறுக்கிய வடம்கொண்டு இழுக்கவேண்டியதிருக்க, களிமண் வண்டியோ இழுப்பது' என்று சொல்லிக் கண்கலுழ்ந்தாள். உரோகசேனன் அவளைப் பார்த்து 'நீயார் நீயேன் அழுகிறாய்' என்றான். அருகில் இருந்த இராதானிக்கா இவள் உன் அம்மாள்' என்றாள். உரோகசேனன், நீ பொய் சொல்லுகிறாய் என் அம்மாளுக்கு இந்த முத்துமாலை ஏது' என்று இராதானிக்காவைக் கேட்டான். வசந்தசேனை 'நான் உன் அம்மாளின் தங்கைதான். வேற்றுமையாக நினைக்கவேண்டாம்' என்று சொல்லி, அம்மைந்தனை அணைத்து முத்தமிட்டு, தான் தரித்திருந்த முத்தமாலையைக் கழற்றி, அந்தக் களிமண் வண்டியில் போட்டு, அவனுக்குத் தங்கத்தினால் வண்டிசெய்து கொடுக்கச் சொன்னாள். உரோகசேனனும் விளையாடிக்கொண்டு இருந்தான்.

சில நாள்களுக்குள் அந்த நகரத்தில், அரசாங்கப் பிறழ்ச்சி உண்டாயிற்று. பாலகன் என்னும் அரசன் கொடுங்கோல் செலுத்தினான். அந்நாட்டார் யாவரும் அரியணையில் வேறொருவனை இருத்தவேண்டுமென்று சூழ்ச்சி செய்தார்கள். 'ஆரியகன்' என்னும் பெயருடையவன், ஆயர்குலத்தில் தோன்றியவன். அவன் அரசனாவான் என்று ஓர் கோணூல் (சோதிடம்) வல்லான் சொல்ல, அரசன் அவ்வாரியகன் என்பவனைச் சிறையில் இடுவித்தான்.

இந்தச் செய்தி, ஆரியனுக்கு ஆருயிர்த் தோழன் ஆகிய 'சார்விலாகன்' என்பவன் கேள்வியுற்று, முன்னமே திருட்டுத் தொழிலை ஒழித்துவிட்டான் ஆயினும் இப்போது தன் நண்பனை வேண்டி, அன்றிரவில் சிறைச்சாலையில் கன்னமிட்டு, அவனை வெளிப்படுத்தி விட்டான்.

மறுநாள் விடியற்காலத்திலே சிறைச்சாலைக் காவலாளர் இதைக் கண்டு அரசனுக்குத் தெரிவிக்க, தெருத்தோறும் ஊர் காவலாளர் ஆரியகனைத் தேடலுற்றார்கள்.

அன்று மாலையில் சாருதத்தன் அரண்மனைத் தோட்டத்தின் காட்சியைக் காணப் போனவன், வசந்தசேனையை அங்கே அழைத்து வரும்படி தன் வண்டிக்காரனை அனுப்பினான்.

வண்டிக்காரன் வீட்டின் முன்புறத்தில் குதிரை வண்டியை நிறுத்திவிட்டு வசந்தசேனையைச் சாருதத்தர் வரச் சொன்னார் என்று அழைத்தான். வசந்தசேனை உடனே நல்ல உடை தரித்தற்கு அறைக்குள் சென்றாள். அவள் உடைதரித்து வருவதற்குள், வண்டி திரை கட்டப்படாமல் இருந்ததனால் வண்டிக்காரன் வண்டியை ஓட்டிக்கொண்டு திரையை எடுக்கத் தன் வீட்டுக்குப் போனான்.

அவன் திரும்பி வருவதற்குள், வேறொரு குதிரைவண்டி சாருதத்தன் வீட்டின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அது அந்த அரசனுடைய மைத்துனன் சமத்தானகனுடைய வண்டி. அந்த அரண்மனைத் தோட்டத்தில் மற்றொரு பக்கத்தில் இருந்த சமத்தானகனை ஏற்றிவர அந்த வண்டியை ஓட்டிவந்தவன், அந்த இடத்திற்கு வந்ததும் எதிரில் ஒரு வண்டி சேற்றில் காலழுந்திக் கிடந்ததினால், அதைத் தூக்கிவிடப் போயிருந்தான். அப்போது வசந்தசேனை, உடைமாற்றிக்கொண்டு வெளியே வந்தவள், அது தன்னை ஏற்றிப்போகத் தன் நாயகனால் அனுப்பப்பட்ட வண்டியென்று நினைத்து அதற்குள் ஏறித் திரையை இட்டுக்கொண்டாள். அந்த வண்டிக்காரனும் வந்து, வண்டியை ஓட்டிக்கொண்டுபோய்ச் சமத்தானகன் முன்பு விட்டான். வசந்தசேனை சமத்தானகனைக் காண்டலும் புலியைக் கண்ட மான்போலப் பதைபதைத்தாள்.

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.' என்பது

பொய்யாமொழியன்றோ. அதுநிற்க,

சாருதத்தனுடைய வண்டிக்காரன் வண்டியில் திரையை மாட்டி, அந்த வீட்டோரத்தில் நிறுத்திவிட்டு, வசந்தசேனை உள்ளிருந்து வருவாளென்று காத்திருந்தான். அப்போது மாலை இருட்டுங் காலம். சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப் பட்ட ஆரியகன், சாருதத்தன் வீட்டுத் திண்ணையில் மறைந் திருந்தவன், அந்த வண்டிக்குள் ஏறித் திரையை மூடிக் கொண்டான். வசந்தசேனைதான் வண்டிக்குள் ஏறினாள் போலும் என்று நினைத்து, அந்த வண்டிக்காரன் வண்டியை ஓட்டிக்கொண்டு போய், அரண்மனைத் தோட்டத்தில் காத்திருந்த சாருதத்தன் முன் கொண்டுபோய் விட்டான். ஆர்யகன் தன் வரலாற்றைச் சொல்லச் சாருதத்தன் அவன் கையிலிருந்த விலங்கைத் தறித்துவிட்டு, வேறு உடையைக் கொடுத்து, உருமாறிப் போகும்படி செய்துவிட்டு தன் வண்டியி லேறி வீட்டுக்கு வந்தான். வீட்டில் வசந்தசேனையைக் காணுமல் கவலையுற்றிருந்தான்.

அங்கே சமத்தானகன் முன் கொண்டுபோய் விடப்பட்ட வசந்தசேனை, தன் நாயகன் சாருதத்தன் பெயரையே சொல்லி விளித்தாள். சமத்தானகன் அவளை நோக்கி, ஏ அழகில் சிறந்தவளே, உன்னுடைய முகம் நிறைமதிபோல் ஒளிவிடு கின்றது. உன் கூந்தல் கருமணல்போல் நெறிந்திருக்கிறது. உன் வாயிற் பற்கள் பவளத்தினிடையே பதித்த முத்துக்களைப் போல் உள்ளன. உன் இனிய குரல் ஏழு பண்களை இசைக்கும் யாழையும் குழலையும் பழிக்கும். இவ்வளவு மேன்மையை உடைய நீ மிகவும் வறியன் ஆகிய சாருதத்தனை விரும்பலாமா? நான் அரசனுடைய மைத்துனன் என்பது உனக்குத் தெரியுமே. நீ அவனை விலக்கி என்னை மணந்து கொள்வாயானல் இந்த நகரமும் நாடும் உன்னுடையவேயாம். நான் முன்னே உனக்கு இழைத்த இன்னல்பற்றி மனங்கொள்ளாது, என் விருப்பத் துக்கு இணங்கவேண்டும் என்றான். வசந்தசேனை அவனை நோக்கி, 'நீ சொல்வது நன்றன்று; இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையல்ல. தருமமும் புகழும் உண்மையுமே நிலையானவை.

'நெருநல் உளஒருவன் இன்றில்லை யென்னும்,
பெருமை யுடைத்திவ் வுலகு.'
'விழித்திமைக்கு மாத்திரை யன்றோ ஒருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு' என்பது மறைமொழி.

இளமை அழகைப்பற்றி நீ பெரிதாய் நினைக்கின்றனை. என்னுடைய தாயின் தாய் இப்போது எனக்கு எவ்வளவு அழகு உள்ளதோ அவ்வளவு அழகையும் ஒரு காலத்தில் உடையவளா யிருந்தாள். இப்போது முதுகு வளைந்து கையில் கோலுடன் நடை தடுமாறி வீழ்கின்றாள். காலம் சென்றால் நம்முடைய நிலையும் அப்படியே. முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒருபிடி சாம்பராயினரேயன்றி நிலைத்தார் உண்டோ? இந்த நகரத்து அரசனும் எழுநிலை மாடமும் இன்றுள்ளபடி நாளையிருக்கும் என்னும் துணிபுளதோ?

இந்நகரத்து அரசன் பாலகன் நாளை இந்த அரியணையில் விற்றிருப்பான் என்ற துணிபுண்டோ. நீயும் இப்போதுள்ள பதவியில் நாளை இருப்பாயென்னும் துணிவுண்டோ. அது நிற்க, பெண்பாலார்க்குக் கற்பென்று சொல்லப்படுவதே சிறந்த அணியென்பர். நான் சாருதத்தரை மணந்து அவரையே தெய்வமாகக் கொண்டு தொழுகின்றேன். அவர் என் மனமாகிய கோயிலில் வீற்றிருக்கிறார். அக்கோயில் இன்னம் ஒருவருக்கு இடம் கொடுக்குமா? அன்றியும் ஒருவன் உண்டு எச்சிற்பட்ட அன்னத்தை மற்றொருவன் உண்ணலாகுமா? பெரியோர்க ளெல்லாம் இது சிற்றின்பம் என்று வெறுத்து நீக்கியதொன்றை நச்சுவது உன் அறிவிற்கு அழகாமா? உன்னுடைய மனைவியை வேறொருவன் விரும்பினால் அது உனக்கு இனிதாயிருக்குமா? ஆகையால் நீ என்னை விரும்பவேண்டா. உன் அழகிய மனைவி யோடுகூடி இல்லற வாழ்க்கையை இனிது நடத்திப் புகழ் பெறுவாயாக.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.' என்பது மறைமொழி

யென்றாள்.

இங்ஙனம் சொல்லியதனால் என்ன பயன்? இந்த மறைமொழியெல்லாம் களர்நிலத்தில் விதைத்த விதையாயினவன்றி வேறில்லை. விடியுந்துணையும் மழை பெய்யினும் ஓட்டாங்கிளிஞ்சில் முளைக்குமோ? மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. ஆகையால் சமத்தானகன் வசந்தசேனையை நயமான பேச்சுக்களால் வயப்படுத்தல் முடியாதென்று நினைத்து, வசந்தசேனையை நோக்கி, 'நீ என்னைத் தப்பிப்போய் விடலாமென்பதை நினையாதே. இரும்பு உண்ட நீரானது மீளினும் மீளும். கரும்பு உண்ட சொல்லையுடைய நீ மீளல் முடியாது. நீ என்னை மணந்துகொள்ளாவிடின் உன்னை வாழவொட்டேன். நானும் உயிர் வாழேன்' என்று அச்சமுறும்படி சொன்னான்.

வசந்தசேனை, சமத்தகானகனை நோக்கி, 'என் நாயகன் காலில் தூசாகவும் உன்னை மதிக்கமாட்டேன்' என்று சொல்லி, தன் நாயகனையே சிந்தித்தவளாய், அவன் புகழ் இந்நிலவுலகத்தில் பெருக வேண்டுமென்று பார்வதிதேவியை வேண்டினாள்.

சமத்தானகன் தான் எண்ணிய காரியம் முடியாதென்று தோன்றவே, வசந்தசேனையைக் கொன்றுவிடவேண்டுமென்று தன்னுடைய வண்டிக்காரன் 'தாவரகன்' என்பவனுக்கும், நண்பன் 'மதியுடையான்' என்பவனுக்கும் சொன்னான். அவர்கள் இருவரும் அது தகாதென்று மறுத்துவிட்டார்கள். பின்பு இருவரையும் ஒரு காரியத்தைக் குறித்து வெளியே போகச் சொல்லிவிட்டு, தானே வசந்தசேனையைப் பிடித்துக் கழுத்தில் துணியைச் சுற்றி இறுக்கினான். வசந்தசேனை மூச்சொடுங்கிக் கீழே விழுந்தனள். அவள் இறந்து போய் விட்டாளென்று நினைத்து, சமத்தானகன் ஒருபள்ளத்தில் அவளைத் தள்ளி, இலைகளைப்போட்டு மூடிவிட்டு, அப்பால் வந்த வண்டிக்காரன் வண்டியோட்ட அதில் ஏறிக்கொண்டுபோனான். போகும்போதே அந்த வண்டிக்காரன் தன் பணத்தைத் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டி அவனைச் சிறைச்சாலையில் இட்டான். அப்பால் அவன் நீதிமன்றத்துக்குப்போய், சாருதத்தன் அரண்மனைத்தோட்டத்தில் வசந்தமாலையைக் கொன்று போட்டு, அவளுடைய முத்தமாலையைக் கொண்டுபோய் விட்டான் என்று வழக்கிட்டான்.

நீதிமன்றத்தார் அந்த வழக்கு ஆராய்ச்சியை மறுநாள் தாமதமின்றி நடத்தினார்கள். அன்று காலையில் வசந்தசேனையின் கொலைக் குற்றத்துக்காக நீதிமன்றத்தார் பிறப்பித்த கட்டளை சாருதத்தனுக்குக் கிடைத்தது. அவனும் உடனே நீதிமன்றம் சேர்ந்தான். அப்பொழுதே ஆராய்ச்சி தொடங்கியது. ஆயினும் அந்த மன்றத்தில் மனுநீதிச்சோழன் இல்லை; பொற்கைப் பாண்டியனும் இல்லை. வழக்குமொழிகளையெழுதும் பதுமை ஒன்று அந்த மன்றத்தில் இருந்தது. அது சமத்தானகன் ஆட்டினபடியெல்லாம் ஆடினது.

வசந்தசேனை சாருதத்தன் வீட்டில் அன்று இருந்ததைப் பார்த்தேன் என்று ஒருவன் சான்று பகர்ந்தான். இன்னொருவன் வசந்தசேனையைச் சாருதத்தன் அரண்மனைத் தோட்டத்தில் அடித்ததைப் பார்த்தேன் என்று சொன்னான். இப்படி இந்த வழக்கு ஆராய்ச்சி நடக்கையில், மைத்திரேகன், தன் நண்பன் சாருதத்தன் நீதிமன்றம் புக்கதைக் கேள்வியுற்று, முத்தமாலையை எடுத்துக்கொண்டு அம்மன்றத்தில் ஏறி, முத்த மாலையை வைத்து, அதை உரோகசேனனுக்கு வண்டிபண்ண வசந்தசேனை கொடுத்தாள் என்று சொன்னான். 'வண்டிபண்ணுவதற்கு முத்தமாலையைக் கொடுத்தாள் என்றதும், வாங்கினான் என்றதும் வியப்பே! கேழ்வரகில் நெய்வடிகிறதென்றால் கேட்பார்க்கு மதியில்லையா? திருடப்பட்ட முத்தமாலை வெளியாயிற்று' என்று சமத்தானகன் சொன்னான். நீதிமன்றத்தார் சாருதத்தன் வசந்தசேனையைக் கொன்றதாகத் தீர்ப்புச்செய்து வழக்குமுறையைப்பாலகன் என்னும் அரசனுக்கு அனுப்பினார். அரசன் கோவலனைத் திருடனென்று கொலைசெய்யக் கட்டளையிட்ட நெடுஞ்செழியனிலும் பேதை. அவன் சாருதத்தன் அக்குற்றத்துக்காகக் கொலைசெய்யப்படுக என்று கட்டளைபிறப்பித்தான். அவனை அன்றே கொலைக்களத்திற்குக் கொண்டு போனார்கள்.

இது இவ்வாறாகச், சமத்தானகனால் அடிபட்டு ஓர் குழியில் மூடப்பட்டுக் கிடந்த வசந்தசேனை, சிறிது நேரம் கழிந்தபின் மூர்ச்சை தெளிந்து புரண்டனள். அதனருகில் உள்ள ஒரு

சிறு குளத்தில் நீர் முகத்தற்குவந்த புத்தமதத் துறவியாகிய சமவாக்கன் அவளையெடுத்து, நீர் குடிக்கச்செய்து, தன்னுடைய பள்ளியிற் சேர்த்தனன். மறுநாள் சாருதத்தனைக் கொலைக் களத்துக்குக் கொண்டுபோனார்களென்று வசந்தசேனை கேள்வியுற்ற அளவிலே, கடிது நடந்து சாருதத்தன் ஏற்றப் பட்டிருந்த கொலைக்கள மேடையில் தானும் ஏறி, சாருதத்தன் கொன்றதாகச் சொல்வது பொய். வசந்தசேனையாகிய யான் உயிரோடு இருக்கின்றேன்! என்னுடைய முத்தமாலை திருடப் படவில்லையென்று கூவி தன் நாயகனைத் தழுவிக்கொண்டாள்.

சிறைச்சாலையில் அடைபட்டிருந்த தாரகனும் காவலைக் கடந்து ஓடிவந்து வசந்தசேனையைச் சமத்தானகன் கொலை செய்யும்படி சூழ்ச்சி செய்ததைத் தெரிவித்தான்.

ஊராரெல்லாம் உடனேதிரண்டு, பாலகனை அரியணையி லிருந்து நீக்கி, ஆரியகனை ஏற்றினார்கள். ஆரியகன், அன்று அரண்மனைத்தோட்டத்தில் சாருதத்தன் தனக்குச் செய்த உதவியை மதித்து, அவனுக்குத் தன் நாட்டில் ஒரு பங்கை அளித்து இன்புறவாழும்படி செய்தான். தன்னைச் சிறைச் சாலையிலிருந்து விடுவித்த சார்விலாகனை அமைச்சருள் ஒருவனாக ஆக்கினான். தாரகனைச் சேனாதிபதியாக ஆக்கினான்.

சமத்தானகன் தான் இழைத்த தீங்குகளையெல்லாம் பொறுக்கவேண்டுமென்று இரக்க, அவனைத் தண்டிக்காமல் விட்டு விட்டான்.

தூதாதேவியும் வசந்தசேனையும் தெய்வக் கற்புடையவர்களென்று நாடுமுழுதும் கொண்டாடப்பட்டார்கள்.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு." (குறள்.)

பிழைத்திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
398	5	மகதம்	அவந்தி.

௳

பண்டைக்காலப் பாவலரும் காவலரும்

ஆசிரியர், திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்,
தோரமங்கலம்.

(முற்றொடர்ச்சி துணர் எ. மலர் ௬, பக்கம் 252)

IV.

நமது தமிழ்த்தாயின் பெருந்தவத்தாலுதித்த அருங்கலைவாணர்களின் வியக்கத்தக்க நட்பின்மேன்மையை நினைக்குந்தோறும், அது அடங்காத ஆர்வம்பெருகிய நட்புடையார் ஒருவர்க்கொருவர் நடந்துகொள்ளும் சீரிய முறைகளை மனமுருக விளக்கி, உலகத்திற்கே சிறந்த எடுத்துக்காட்டாக விருக்கின்றதெனக் காண்கின்றோம். நெஞ்சுறக் கலந்து நட்புற்ற அரசர்களின் துன்பங்களில் முதற் பங்குகொள்ள முந்திய நம் பாவலர்களின் மனவுறுதியும் மாறாதபேரன்பும் எத்துணை பாராட்டினும் அமையா. கோச்சோழன் என்னும் அரசனும் பிசிராந்தையார் என்னும் புலவர் பெருமானும் கேள்வியாலன்றி ஒருவரையொருவர் நேரிற்பார்த்துப் பழகியவரல்லர். அங்ஙனமிருப்பவும் அவ்வரசன் தன் மக்களோடு பகைத்து, *வடக்கிருந்து உயிர் துறக்கப்புக்ககாலை, தன்னொடும் சூழ்ந்திருந்த சில புலவரை நோக்கி "என் ஆருயிர்க்காவலன் பாண்டிநாட்டின்கண் பிசிர் என்னும் ஓர் ஊரிலுள்ளான். இச்செய்தி அவன் கேட்டிருப்பான். அவன் தன்பெயரைப் பிறர்க்குச் சொல்லும் போது அதற்குப்பதிலாக என்பெயரையே கூறும் அத்துணை அரிய நட்புரிமை யுடையோன். அவன் எனது செல்வக் காலத்து வாரானாயினும் யான் பலவந்தத்தால் உயிர்விடும் இத்துன்பக் காலத்தில் நில்லாது வந்தேதீருவான். அவற்கும் ஈண்டு இடம் ஒழித்துவைக்க எனச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே நம் புலவர் கோமான் பிசிராந்தையாரும் தோன்றித், தன்மனத்து நெடுநாட் பொங்கி வளர்ந்த பேரன்புக்கு இலக்காகிய மன்னனைக்

* வடக்கிருத்தல்—பட்டினிகிடந்து சாதல்.

கண்டு மகிழ்ந்து தாமும் அவனோடு வடக்கிருந்துயிர் நீத்தார் என்றால் அத்தகைய நட்பின் மாட்சியை என்னென்று புகழ்ந்து வியப்பேம்.

இவ்வரசன், தன்கேண்மை யாளராகிய பொத்தியார் என்னும் புலவரும் தன்னோடு உயிர்துறக்க உடன்பட்டிருப்ப வரை மறுத்து, 'நுமக்கு மகவு பிறந்த பின்வருக' எனப்போக்கினனாக, அதுகுறித்து அப்புலவர் இரக்கமிகக் கூறுஞ்செய்யுட்கள் கன்மனத்தையும் கரைக்குந் தரத்தனவாயுள்ளன காண்மின்! அவர்,

"களிற்றை இழந்த பாகன் அது கட்டியிருந்த கணையமரத்தைக் கண்டு வருந்துவதுபோல, எமது கோமானிருந்த மன்றங்கண்டு கலங்குவேனாயினேன்" எனக் கண்ணீர்சொரிந்து, "பாடுநர்க்கும் ஆடுநர்க்கும் வரையாது கொடுக்கும்பேரன்புடைய வள்ளலன்றோ அவன், அறநெறிச்செல்வன், யாவர்க்கும் தாழ்மைசெய்யும் செங்கோன் மன்னன், சான்றோர் புகழும் விழுமிய பண்பினன், வலியார்க்கெல்லாம் வலியன், இத்தகையான் நடுகல்லாயினனே" என நைந்துநைந் துருகிச் சென்று, சின்னாள்கழிய மகவு பிறந்த பின்னர், தமது ஆருயிரோடு வேற்றுமை யறக்கலந்த நட்பாளன் இறந்தவிடத்து நட்டநடுகல்லை அணுகி "நின்னோடு அஞ்ஞான்றே உயிர்துறக்க மறுத்து என்னைக் கலக்கமுறப் போக்கிய அன்பில்லாதவனே! நீ என்னை நினையாதிருப்பாய் கொல்லோ! போனதுபோக, இப்போது நட்புக்கடன் செலுத்தவந்தேற்கு நீ வகுத்த இடம் யாண்டையது?" எனப்பரிவுடன் கேட்க, அந்நடுகல்சாய்ந்து இடம் சுட்டிற்று என்றும் அவ்விடத்தே நமது பொத்தியார் உயிர் துறந்தனரென்றும் படிக்கும்போது நம்முள்ளத்தில் துன்பமும் வியப்பும் மருட்கையும் எழுகின்றனவன்றோ?

கடையெழு வள்ளல்களிற் சிறந்த பாரி என்னும் கோமகன் இறந்தபின் அவனது மகளிரைத் தக்கார்க்கு மணம்புரிவிக்கும் கடப்பாட்டை மேற்கொண்ட கபிலர் என்னும் பெருந்தகைப் பாவலர், ஆற்றாத்துன்பமுற்று "இப்பெண்கள், தமது தந்தை

யோடு போர்புரிந்து தோற்ஞேடும் பகையரசர்களின் குதிரை களைப் பறம்புமலையின் மேலிருந்து ஒன்று, இரண்டு என எண்ணிக் கணக்கிட்டு விளையாடுவதைக் கண்ட இந்த என் கண்களால், இன்று, ஈத்திலைக் குப்பைமேட்டில் ஏறி, உமணரின் உப்பு வண்டியை எண்ணுவதையும் காண்கின்றேனே! அந்தோ! யான் இத்துன்பமுறக் கடவேனே? என் வாழ்நாள் தேய்வதாக எனவெறுத்தும், அப்பறம்பு மலையைநோக்கி, மதுச்சாடி வாய் திறப்பவும், ஊனொடு சோற்றை விரும்பியவாறு உண்ணவும் முன்னெல்லாம் வளஞ்சுரந்த பறம்புமலையே! நீ இதுகாறும் எம்மோடு நட்புற்றிருந்தனை, இனிப் பாரி உலகை நீத்தனனுக, நீர்வடிந்த கண்ணேமாகிய யாம் உன்னை வணங்கிப் புகழ்ந்து கொண்டு செல்ல விடை தருதியோ என்று அழுங்கிக்கூறியும், "இவ்வரசனை உயிர்கொண்ட கூற்றுவன், உள் வைரங் கொண்டே, நேர் நின்று பொருதே கைநீண்டியே அத்தொழி லைச்செய்திரான். இவன் அக்கூற்றையும் வெல்லும் பேராண் மையினன். ஆகவே, அக்கூற்றுவன், பாடும் ஓர்பரிசிலனைப் போல்த்தோன்றிக் கையேந்தி யிரந்து இவன்தர அவ்வுயிரைப் பெற்றுக்கொண்டு போயிருத்தல் வேண்டும்" என அப்பாரியின் வள்ளற்றன்மையையும் ஆற்றலையும் வியந்து ஒப்பாரி வைத்தழு தும், "கூற்றமே நீ மிகவும் மடைமையுடையை! உயிருண்ணும் ஆசை நினக்குளதாயின், இவனைப்பேணி நின்று, இவனுற் பல பகைவர்களுயிர்களும் வௌவித்தரப்பெற்று நாடோறும் விலாப் புடைக்க நீ நிரம்பவுண்டு வாழலாமே! ஆராய்ச்சியில்லாது விதைப்பண்டத்தைத் அட்டுண்டோர் போன்ருய்! என்செய்தாய் எனக் கூற்றேடு புலந்தும் பாடிய செய்யுட்கள், மிகவும் பரிவு கூர்விப்பனவாம். இங்ஙனம் கவலைமிக்கு அப்பாரியின்மகளிரை அழைத்துக்கொண்டு, விச்சிக்கோன் இருங்கோவேள் என்னும் சிற்றரசர்களிடம் போய் இப்பெண்மணிகளை மணந்துகொண்மி னென்று அவர்கள் குடிப்பிறப்பையும் குணமேம்பாடுகளையும் எடுத்துக் கூறியும், அம்மன்னர்கள் இசையாராக, அக்கன்னி யரைப் பார்ப்பாரிடத்தில் ஒப்புவித்துவிட்டுத் தமது ஆருயிர் நண்பனும் தமிழருமை தெரிந்துதவும் பேராண்மை வள்ளலும்

தம்மை நெடுநாட்புரந்த புரவலனுமான அந்தப் பாரியின் பிரிவைப்பொறுது அவன் உயிர்நீத்த இடத்தை அடைந்து "மலை கெழு நாட்டையுடைய எம்வள்ளால்! ஏ! பாரி! நீயும் யானும் கலந்த கேண்மைக்குப் பொருந்தாயாகி என்னை வெறுத்தாயாகக் கடவை; உன்னுடனே யானும் அன்றே உயிர்விடத் துணிந்ததை மறுத்து விட்டனை ஆதலான், நின்பிரிவாற்றும் அத்துணை வன்னெஞ்சுடையேனல்லேன்! இவ்வுலகத்தில் நாம் கலந்து மகிழ்ந்து எவ்வண்ணம் நட்புடையராய் ஒழுகினேமோ, அவ்வண்ணமே நீ புக்கிருக்கும் அவ்வானாட்டினும் என்னை நின்னோடுறையச் செய்க நமது நல்லூழ்" எனக்கூறி உயிர்துறந்தமை எத்தனை அருமையுடையது! நோக்குமின்! பெரியீர்!

தமக்கோரிடையூறும் துன்பமும் நேராதிருப்பவும் தம்மோடு நட்புடையார் உயிர்துறப்பக் காணிற்றுழாது தம் ஆவியையும் வலிந்துபோக்க ஒருப்பட்டுத் துணிந்த நம் நல்லிசைப் புலவர்களின் நட்பின் திட்பத்தை—ஆரா அன்பின் சீரிய செய்கையை—யாதென்று புகழ்வேம்! இவ்விருவரும் ஒருகுலத்தினரோ! அல்லரே; பாரியோ—வேளிர்குலத்தினன், கபிலர்—அந்தணர் குடியினர். இங்ஙனம் குலம் வேறுபட்டிருப்பவும் பாரியைக்கருதித் தமது உயிரைப் போக்கிக்கொண்ட பாவலர் பெருமானை அங்ஙனம் செய்வித்தது அவன்பால் அவர்கொண்ட பேரன்புடைமையென்னு மஃதொன்றே யன்றோ? இந்நாட்டில் சாதிகளும் குலங்களும் பலவாய்ப்பெருகி நம் ஒற்றுமையை அறத்தொலைத்தனவாகலின் அவற்றை வேரோடு கல்லி எறிய வேண்டுமெனக்கூறும் சில குழுவினரின் கூற்றுப் பொருத்தமுடையதோ? நன்கு ஊன்றி நோக்குமின்! நமது தமிழ்க் கலைச்செல்வர்கள் பண்டைக்காலத்தில் தமக்குப் பல்லாற்றானும் உதவிப்பரிசில் தந்து புரந்த வள்ளல்கள் மாண்டகாலத்தே மனம் நெக்குருகி வாய்திறந்தரற்றிப் புலம்பிய கையறுநிலைச் செய்யுட்கள் பலப்பலவே. அவற்றைக் கற்கும்போது நம் விழிகளும் கண்ணீர்பெருக்குவன, நெஞ்சும் நெகிழ்ந்துருகுவதாம். பின்வரும் சில மேற்கோள்களைக் காண்மின்! அதியமானஞ்சி போர்முகத்துப்பட்டனனாக, அஃதறிந்த ஔவைப்

பெருமாட்டியார் "எமது வள்ளலையின்றிக் கழியும் காலையும் மாலையும் எனக்கில்லையாகுக! என் வாழ்நாளும் இனிப்பயன் படாதாகலிற்றேய்ந்தொழிக. அன்னே! பகையரசர் நாடு முற்றும் வென்று கொண்டாலும் அமையாது பின்னும் பிறர் நாடு பெறவுகக்கும் அப்பேராண்மைப் பெருவிருப்புடையான், நடு கல்லிற்கு மயிற்பீலி சூட்டிச் சிறிய கலத்தில் உகுக்கும் தேறலை யாங்ஙனம் ஏற்று அமைவான்?" எனவும்

"சிறிது மதுக்கிடைக்கப்பெற்றால் எமக்கே முற்றும் நல்கி விடுவானே! மிகக்கிடைத்தால் யாம் முன்னதாக உண்டு பாடக் கேட்டுக்கொண்டே பின்னருண்பவனுயிற்றே! சோறு சிறி தேனும் பலகலத்தோடும் உண்பவனன்றோ? அவன் அம்பும் வேலும் நுழையும் இடமெல்லாம் தானே முன்னிற்பானே! நரந்தப் பூப்போல் மணக்கும் தன் அழகிய கைகளால் புலால் நாறும் என் தலையைப் பல்காற் றடவி நேயம் பாராட்டும் கேண்மையுடையனுவனே! அந்தோ! அவன் மார்பிற்றைத்த அம்பு, அதனேடும் போயிற்றில்லையே? அஃது பாணர்கள் பலியேற்கும் மண்டையைத் (பாத்திரம்) துளைத்துக்கொண்டு இரப்போர் கையினுள்ளும் பாய்ந்து கிழித்து, தான் புரக்கும் சுற்றத்தினரின் கண்ணுட் பாவையையும் ஊடுருவிச்சென்று, அழகிய சொற்களை நட்பமாக ஆராயும் புலவர் நாவினுமன்றோ வீழ்ந்து சிதைத்தது! ஆ! அம்மன்னவன் இப்போது யாண்டு உள்ளான் கொல்லோ? ஏதேது இனிப்பாடுநரும் இல்லா தொழியப் பாடுநர்க்கு ஈவோருமிலராவார்! மணமிக்க மலர், சூடப்பெறுது செப்பினுட்பொதிந்துவைக்க வாளா கழிந்தழிதல் போலப் பொருளைப் பயன்கொள்ள அறியாது புதைத்துவைத்து வீணே இறக்கும் பேதைமை மிக்க உயிர்களே இவ்வுலகத்து நிரம்பவுள்ளன. அவை வாழ்ந்தாவதென்?" எனவும் புடைபடக் கவல்கின்றனர்.

நம்பி நெடுஞ்செழியன் என்னும் கோமான் இறந்தமை குறித்துப் பேரெயின் முறுவலார் என்னும் மேதகைப்புலவர், "இளைய மகளிரின் நலம் துய்த்தனன். பொழிலிற் பூச்சூடி அவர்களோடுண்டாடினன்; பகைக்குலத்தை வேரொடும்தொலைத்

தனன்; கேண்மையாளர்க்கு மேன்மை செய்தான்; தன்னினும் வலியாரென ஒருவரைப்பணிந்து மொழியான்; மெலியாரென்று ஒருவரை இழிவுகூறுன்; பிறரைத்தான் இரந்தறியான்; தன் பாலிரந்தோர்க்கு மறுத்து மறியான். இங்ஙனம் தன் வாழ் நாட்களை முற்றும் பயன்படுத்தும் நற்கடமைகளைத் திறம்பட நிறைவேற்றினுகலின் இனி இவன் தலையை மண்ணில் இடுக. அன்றித் தீயிற்சுடுக. இவ்வுடல்பட்டவழிப்படுக. அதுபற்றி யாதும் பழிப்பில்லை" என அவனது பெருமைகளைப் பாராட்டி இரங்குகின்றனர்.

சாத்தன் என்னும் காவலன் மாண்டதறிந்த ஓர் புலவர், அங்குப் பூத்திருந்த முல்லைக்கொடியை நோக்கி "இளையவர்களும் இனி உன்னைச் சூடார். வளையணிந்த மகளிரும் கொய்ய மாட்டார். பாணனும் சூடமாட்டான் பாடினியும் கூந்தலில் அணியாள் நம் வல்வேற் சாத்தன் இறந்த பின்னர் எற்றுக்காக முல்லைக்கொடியே நீ பூத்தனை?" எனத் துன்பமொழி கூறித் துயருறுகின்றனர்.

"உலகத்தோர் அனைவரும் ஒரு சேரப்புகுந்துண்ணும்படித் திறக்கப்படும் பெரிய வாயிலையுடையோனுகி எப்போதும் விருந்தினர் பலரோடும் விரும்பியுண்டு பழகிய இவ்வள்ளல், இன்று இறந்தபின், தனது மனையாட்டி சிறிய இடத்தை மெழுகிப் புல்லின்மேல் வைக்கும் சிறிய சோற்றுக் கவளத்தைத் தான் மட்டும் தனித்துண்ண மனங்கொள்வானே? அந்தோ! யான் இப்பெரிய துன்பத்தை ஆற்றமாட்டேன் என்வாழ்நாள் இன்னே தொலைந்தொழிக" என்று ஓர் புலவர் தம் கேண்மையாளர்க் கிரங்கி நைந்து துயர் கூர்கின்றுர். இவ்வாறு தமது கண்ணும் உயிரும் போலக் காதலித்துக் கலந்தொழுகிய கேண்மையாளர்களாகிய புரவலர்கள் மாய்ந்த காலையில், பிரிவாற்றுது அவர்களுடைய வீரம், ஈகை, அன்பு, கண்ணேட்டம் முதலிய நற்குணங்களை எடுத்தெடுத்தோதிப் பண்டைக்காலப் பாவலர்கள் கல்லுமுருகக் கசிந்துவருந்திய செய்தியை நோக்கின் கள்ளமற்ற தூய அவர்கள் உள்ளப்பான்மையும், தம்மை ஆதரிப்போர்பால் அவர்கள் கொண்ட கங்குகரையில்லாப் பேரன்பும் நன்கு

புலப்படும். அஃதோடு, கல்வித் திறனறிந்து மனமகிழ அரும் பெருநிதியத்தை வாரி வழங்கி மிகமதித்து மனங்கலந்து நட்புற்றொழுகிய அச்செல்வர்களின் நற்குணமும் நற்செய்கைகளுமே இவ்வண்ணம் பாவலர்களைப் பிரிவாற்றாத் துன்பத்தில் அழுத்தித் தொடக்குறுவித்ததென்பதூஉம் புலனாகும்.

V. நல்லிசைப்புலமை நங்கையர்.

அக்காலத்தே, அரிய சீரியபொருட்களை இலக்கண நெறி வழாது சுருங்கவிளங்க அமைத்துச்செய்யுள்யாக்கும் நல்லிசைப் புலமையாளர்க்குச் சிறிதும் தோலாத கல்வியறிவு நிரம்பிய நல்லிசைப்புலமை நங்கையரும் பற்பலர் இருந்தனர். பூத பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு என்னும் கற்பிற்சிறந்த காரிகையார், தமது கணவனிறந்ததும் தாமும் உடன்கட்டை யேறத் துணிந்ததை மறுப்போரைச் சினங்கொண்டு விலக்குவாராகி, "பொல்லாத சூழ்ச்சியையுடைய பல்சான்றீரே! யாம் நெய் தீண்டாமல் சோற்றை எள்ளரைத்த விழுதுடன் கூட்டியுண்டு, பருக்கைக்கற் படுக்கையில் கிடந்து வருந்திக் கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிருள் ஒருவர் அல்லேம். இவ் ஈமம் (பிணம் சுடும் விறகு*) நமக்கு அரிதாகுக. எமக்குத் தாமரை முகையற மலர்ந்த பொய்கையும் இத்தீயும் ஒரு தன்மைத்தேயாகும்" எனக் கூறியதும், ஓர் வீரப்பெண்மணியின் அருஞ் செயல்களை வியந்து பாராட்டி, "போர்க்குச்சென்ற தன்மகன் புறங்கொடுத்துப்பட்டான் எனக்கேட்டதும், கடுஞ்சினந்தலைக் கொண்டு, அஃதுண்மையாயின், அப்பேதை பாலுண்ட இக் கொங்கைகளை அறுத்திடுவேன் என வாளேந்திப் போர்க்களம் புகுந்து பிணக்குவைகளைப் புரட்டித் துழவுவோள், தன்சிறுவன் உடலுந்தலையும் வேறுபட்டுக் கிடப்பக்கண்டு, அவன் பகைவர்க் குத்தோல்வியுற்றுப் புறங்கொடுத்துப் பட்டோனல்லன் என்று அறிந்து, அவனைத் தன் வயிறு வாய்ப்பப்பெற்ற நாளினும் பார்க்க மிகவும் மனம் பூரித்தனளே. இஃதென்னே! வீரம்

* இங்கே அவ்விறகிற்மூன்றும் தீயைச் சுட்டிற்று.

இருந்தவாறு" எனக் காக்கைபாடினியார் நச்செள்ளையாருரைத்ததும், மற்றொரு வீரமகளைச் சுட்டி, "என்னே இவள் கருதியது! இக்கொடிய துணிவு அழிவதாக! முதுக் குடிப்பிறந்த மகளிராதல் தக்கதே! முன்னைநாட்போரில் இவள் தந்தை யானைப் படையைக் கொன்று பொன்றினன்; நேற்றோ இவள் கணவனும் நிரை மீட்டு உயிர் நீத்தான்; இன்றும்போர்க்கு அழைக்கும் முரசொலி கேட்டு விருப்பம் மிகுந்து, மிகவும் இளையனகவுள்ள அரும்பெறல் ஒரே மகவை யுடையளாதலையும் நினையாளாகி, அம்மகன் படைதொட்டறியாப் பாலனாதலின் வேலைக்கையிற் பிடிக்கக் கற்பித்துக் கொடுத்து, வெண்டுகிலை அவன் உடுத்தலறியானாதலிற்றானே உடுத்து, சிதறிக்கிடந்த குடுமிக்கு எண்ணெயிட்டுச் சீவிப் போர்க்குச் செல்க எனச் செலுத்துகின்றனளே!" என ஒக்கூர் மாசாத்தியார் கூறியதும், நோக்குவோர்க்கு வியப்பும் மருட்கையும் வீரப்பெருக்கும் ஒருங்கு தோற்றுவிப்பனவாம். பெண் கல்வி பிழைதருமென்பார் கூற்றுப் பொய்ப்பட்டொழிய முற்காலப் பெண்மணிகள் வரலாறு காட்டும் உண்மையைக் காண்மின்! அன்பர்கள்! இத்தகைய வீரம் வாய்த்த மெல்லியலாரும் கல்விவல்ல காரிகையாரும் நம் தமிழகத்திற் பல்கிப் பெருமையுறும் நாள் என்று வருமோ? அறியகில்லேம். இனிப்பாவலரை விடுத்து அவரைப் புரந்த காவலர்பாற் செல்வோம்.

VI. காவலரின் மனப்பாங்கு.

ஒருவருடைய எண்ணங்களே சொல்லாக வெளிப்படுதலானும், எண்ணமும் சொற்களும் தோன்றிய பின்னரே செய்கை நிகழக் காண்டலானும், அக்காலத்து அரசர்கள் கூற்றினின்றும் அவர்கள் மனப்பாங்கை நன்கு துணிதற்கிடனுண்டு. ஆகவே, பின்வரும் பண்டைத் தமிழரசர்களின் சொற்களினின்று அவர்களுட்கோளை நீங்களே எளிதில் ஊகித்துக் கொள்வீர்களாக.

சோழன் நலங்கிள்ளி என்னும் மன்னன் கூறுவது:—
"தமது குடியின் முதியோரெல்லோரையும் கூற்றங்கொண்ட

தாக, அம்மரபில் நாம் அரசுரிமையெய்தினேம் என்று செருக்குற்றுக் குடியிறை மிகுத்தலைக்கும் கீழோருக்கு அச்செல்வம் சுமக்க முடியாத பெருஞ்சுமையாக முடியும். அஃதே, சீரியோனொருவன் கைப்படின், ஓர் கிடேச்சியின் உலர்ந்த சுள்ளிபோல மிகவும் நொய்தாகும்.''

சோழன் நல்லுருத்திரன் உரைப்பது :—'' புலங்களில் விளையும் சிறுகதிர்களைத் தமது குறுகிய முழைகளிற்கொண்டு உய்த்துவாழும் எலிகளைப்போலும் சிறு முயற்சியையும், தமது செல்வத்தை நுகர்தலும் வழங்குதலுமின்றி இறுகப்பற்றும் உள்ளத்தையுமுடைய கீழ்மக்களோடு எமக்கு நட்பு ஒழிவதாகுக. ஓர் பன்றியை வீழ்க்க, அது இடப்புறமாக வீழ்தலாற்றீண்டாது இழிவெனவெறுத்து அன்று முற்றும் பட்டினி கிடந்து, பெரிய யானையை மறுநாள் வலப்புறம் வீழ்த்துண்ணும் புலிபோன்ற மேன்மக்கள் கேண்மை எமக்கு நாடோறும் வாய்ப்பதாக.'' மேற்போந்தவற்றினின்றும் இவ்வரசர்கள் குடிகளை வருத்தி வரி வாங்குதலிற் கொண்டிருந்த அச்சமும் நல்லோரோடு நட்புறுவதனை வேண்டி நின்ற அறிவுடைமையும் நன்கு துலங்குகின்றனவல்லவா? ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் என்னும் அரசன், தன் மீது பகையரசர் பலர் கூடிப் போர்புரிய வருதலறிந்து அவரைத் தோற்றோடப் பொருது வென்றி கொள்ளேனாயின் யான் இன்னேனாகுக என வஞ்சினங் கூறியபோது போந்தகவி ஒன்றின் கருத்தை உணர்மின்! "யான் இவ்வரசர்களைப் புறங்காணேனாயின், என் மனைவியின் தோட்களைத் துறந்தேனாகுக. என் அவையகத்து முறை திறம்பும் அறப்பாடில்லாதாரை அமர்த்திக் கொடுங்கோல் செய்தேனாகுக. மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன் முதலாய என் கண்போன்ற அறிஞர்களின் மகிழ்ச்சிக்குப் புறத்தேனாகுக. அன்றியும், இப்பாண்டிநாடு காவல் ஒழிந்து இக்குடிப் பிறப்பினும் நீங்கிப் பிறர் ஆளும் நாட்டில் ஓர் குடிமகனாகப் பிறப்பேனாகுக''. இவ்வாறே பாண்டியன் நெடுஞ்செழியனும் வஞ்சினம் கூறுமிடத்து, "என்னைச் சிறியோன் என இகழ்ந்து போர்க்குவரத் தலைப்பட்டோரைப்பற்றிச் சிறை

செய்யேனாயின், என் நிழற்கீழ் வாழுங்குடிகள், வேறு திக்கின்றி எம்மரசன் மிகவும் கொடியவனென்று கண்ணீர்பரப்பிப் பழி தூற்றத்தக்க அத்துணை கொடுங்கோலேனாகுக; மாங்குடி மருதனார் முதலாகவுள்ள நல்லிசைப் புலவர் பலரும் என் நாட்டினைச் சிறப்பித்துப் பாடாதொழிவாராக; என்னால் புரக்கப்படும் பரிசிலரைத் துன்புறச் செய்தேனாகி இரப்பவர்க்குக் கொடுக்க இயலாத பெருமிடியுடையேனுமாகுக'' என்கின்றான்.

இங்ஙனமே, சோழன் நலங்கிள்ளியும் 'என்பகைஞர் இரவலராகவந்திரப்பார்களாயின், என் அரசாட்சியையே, அஃதெளிது, என் உயிரையும் உவந்தீவேன். அன்றி என்னெதிர்த்துப் போர்க்கு வருவாரேல் தூங்கிக்கொண்டிருக்கும் புலியைக் காலால் இடறிய குருடனைப்போல் அவர் பிழைத்து உயிருடன் போதல் அரியதே. யான் இவர்களை, யானையின்காற் கீழகப்பட்ட மூங்கிலின் இளமுளைபோல வருந்தச்செய்யேனானால், மனம் வேறுபட்ட விலைமாதர்களின் பொய்ம்மை முயக்கத்தினால் எனது மார்பின் மாலை குழையும் இழிதகவை எய்துக'' எனப் புகல்கின்றான்.

இவைகளை நுனித்துணர்வோமானால், அக்காலத்து அரசர்களிற்பலர், குடிகள் கொடுங்கோன் மன்னனெனக் கூசாதுகூறும் பழிக்குமிக நாணி அஞ்சியும், கல்விவல்ல நல்லிசைப் புலவர்கள் தம்மையும் தமது நாட்டையும் பாடாது வரைதலை மிக இழிவென்றெண்ணியும், உலகிற்பலரும் தம்மைப் புகழ்ந்தேத்துவதனை நனி விரும்பியும், தாம் பிறந்த குடிக்குப் பெருமை தர வேண்டுமென்னும் பெருநோக்குடனும் தமது காதன் மனைவியரையன்றிப் பொருட்பெண்டிரை விழையாத நல்லொழுக்கமுடனும் இரப்போர்க்குதவும் ஈகைக் கடப்பாட்டை மேற்கொண்டும், நீதிவழுவா நெறியின்வல்ல அமைச்சர்களை அவையிற்கொண்டும், நல்லறிஞர் பலருடன் நட்புற்று அவர் தம் அறமொழி கேட்டும் உலகை இனிது புரந்த செங்கோற் செல்வர்களாக விளங்கினார்கள் எனல் தெரிகின்றது. மறந்தும் பொய்கூறாது இயற்கை வளத்தை ஆய்ந்துரைக்கும் நம்முந்தைக் கால மூதறிஞர்கள், அரசர்களைப் புகழத் தொடங்கும்போது

கூறும் செய்திகளையும் நோக்குமின்! "மன்ன! நின் கீழ்வாழுங் குடிகள், சோற்றையடும் தீயினையும், கதிரோன் வெயிலையும் வெப்பமுடையவேதென்றறிவதன்றிப் பிறிதொரு வெம்மையையு முணர்வாரல்லர். அவர்கள், வானிற்றோன்றும் இந்திரவில்லை யன்றி வேறு வில்லையும், தம் நிலத்தை யுழும் கலப்பையல்லாது வேறு படைகளையும் அறியார்; நீ காவல்செய்யும் மண்ணினைச் சூல்முதிர்ந்த மகளிர் விரும்பியுண்பதே யன்றிப் பிற அரசர்கள் வௌவியுண்ணக்கொடாய். இவ்வாறு நீ இவ்வுலகை இனிது ஓம்புகின்றனை" என்று புலவர்கள் பாராட்டுதலுக்கேற்ப, முற்கூறிய அரசர்களின் எண்ணங்களும் அமைந்திருத்தல் கருதத்தக்கது. இஞ்ஞான்று, கடவுள் நம்பிக்கையும் தீவினை யச்சமும் அற்ற போலியறிஞர் கைப்பட்டு நம் தமிழகம்படும் பாட்டை யாம் கூறல்வேண்டா.

VII. காவலரின் நன்கு மதிப்புப்பெற்ற பாவலர்கள்.

அக்காலச் சிற்றரசரும் முடிமன்னரும் பிறசெல்வரும் நமது பாவலர்களை எவ்வாறு நன்குமதித்துப் போற்றி வந்தனரென்பதைப்பற்றிச் சில கூறுவாம். தாமப்பல் கண்ணனார் என்னும் ஓர் பார்ப்பனப் புலவர், மாவளத்தான் என்னும் சோழர் குல மன்னனோடு வட்டாடிக் கொண்டிருக்கையில், கைகரப்ப, அஃது உணர்ந்த மன்னவன் வெகுண்டு வட்டுக் கொண்டெறிதலும், அப்புலவர், சினந்து "தன்பால் அடைக்கலம்புகுந்த ஓர் புறவின் துன்பம் நீக்கிக் காக்கும்பொருட்டுத் துலையேறித் தன் உடலையே ஈடு கொடுக்கத் துணிந்த சிபி என்னும் வள்ளற்பெருந்தகையின் மரபினையாகிய நீ, நின்முந்தையோர் செய்யாததொன்றைச் செய்தனையாகலின் சோழன் மகனல்லை" யெனக் கடுத்துரைப்ப, வேறு கூறவின்றி நாணி முகங்கவிழ்ந்து நிற்கும் அவ்வரசிளங் குமரனை உற்றுநோக்கித் தமது தவறுதலையுணர்ந்து இரக்க முற்ற புலவர்கோமான், "ஐய! முதற்கண் யானே வட்டுக் கரந்து நின்பாற் பிழைசெய்தேன். பின்னும் நின்னைவெறுத்துக் கூறி நாணுறுவித்தேன். அங்ஙனமிருப்பவும் நீயே பிழை செய்தாற்போல் மிகவும் நாணமுற்றனையே! செம்மால் இதனால் தமக்குக் குற்றம் செய்வோரையும் பொறுக்கும் பெருந்தகை

நுங்கள் குடிப்பிறந்தோர்க் கெளியதொன்று யிருக்குமென்று யாங்கள் உணரக்காட்டினை, காவிரியாற்று மணலினும் மிக்குப் பெருகுக நின் வாழ்நாட்கள்" என மனங்கனிந்து உவகை துளும்பக் கூறித் தேற்றினர்.

பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்தின் பாட்டுடைத் தலைவனும் அதுபாடிய அரிசில்கிழார் என்னும் புலவர்க்கு ஒன்பது நூறு யிரங்காணம் பொன் பரிசில் உதவிய அருங்கொடை வள்ளல் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையென்னும் அரசன், தன்போர் முரசைக் கடவுளாகப் போற்றி வழிபாடி யற்றுங்கட்டிலில், அம்முரசு நீராட்டக் கொண்டு போயிருந்த போது அங்கு வந்து மெத்தென்ற பாயலில் ஏறிப்படுத்துத் துயின்ற மோசிகீரனுரை நோக்கிச் சிறிதும் கோபமுறாது அவர் துயிலெழுந் துணையும் தன் கைக்கொண்டு கவரி வீசி நிற்ப, உறக்கம் நீங்கி விழித்தெழுந்த புலவர், அம்முரசுகட்டில் கால்வைத்தேறப்படாத கடவுட்டானம் என்றும், அதில் ஏறிப்படுத்தது மன்னித்தற்கரிய பெருந்தவறென்றும் உணர்ந்து தமக்குக் கவரி பணிமாறும் வேந்தர் பெருமானைநோக்கி உள்ளத் தடங்கா வியப்பும் உவகையும் அச்சமும் மருட்கையுங்கொண்டு "வெற்றிமேம்பட்ட மன்னர்மன்ன! இக்கட்டில், தேவகுலம் போலுமென்ப தறியாது ஏறிய என் தவறுபாட்டிற்கு எனது தலையைத் துமிக்காமல் நின்வாளின் கூர்மையை மழுக்கிய தற்குப் பொருட்டு, நீ, தமிழ் நன்கறிந்து அருமை பாராட்டிய தாக அமையும், மற்று நின் வண்மை மிகுந்த கை சிவப்பக் கவரிகொண்டு வீசியது எதற்கோ? அறியகில்லேன். இவ் வுலகத்துப் பெரும் புகழுடை யோர்க்கன்றி மறுமையுலக இன்ப வாழ்க்கை தலைப்படாதென விளங்க அறிந்தவாற்றனோ? கூறுதி" எனவுரைத்து இன்பக்கண்ணீருகுத்தனர்.

இவ்வாறு தமிழறியும் பாவலரைத் தெய்வம்போற் கருதி அவர்கட்குத் தொண்டு செய்யவும் முற்பட்டுப் பேரரசர்கள் நடந்து கொண்டதனுல், கல்வி கற்றற்கண் ஆர்வம்மிகுந்து பலரும் புலவர்களாகி அறத்துறை, பொருட்டுறை இன்பத் துறைகளில் நூல்பலசெய்து உலகத்திற்கு நன்னெறி காட்டி

உய்விக்கும் கடப்பாட்டில் வாழ்நாள் கழித்து வாழ்வாராயினர். அரசர்களும் தமிழ்ப்புலமை நிரம்பிய பேரறிஞர்களாயிருந் தமையாலும் தம்புகழ் செய்யுளுருவத்தில் பிறர் பாராட்டும் வண்ணம் வெளிப்பட வேண்டுமென விரும்பியதாலும் நம் கவிஞர்களின் மதிப்புப் பொன்னினும் மணியினும் சிறந்து விலை மதிப்பறியா வண்ணம் மிக்குயர்வதாயிற்று. சேரமான் மாந் தரஞ்சேரலிரும்பொறையென்னும் அரசன், தன்வெற்றியையும் வீரத்தையும் விளக்கிப்பாடுதற்குக் கபிலர் என்னும் புலவர் கோமான் இன்று இலரே என ஏக்கமுற, அது நோக்கிப் பொருந்திலிளங்கீரனர், "ஐய! நின்வென்றிப் புகழ்பாட அப்புலவர் திலகர் இலரேனும், அவர் தோன்றிய இந்நாட்டில் எம்மனோர் வாழோமென்று போதல் அரிதே. யாங்கள் பாடப் புகின், நின் பெரியபுகழ், எத்துணை விரிப்பினும் மிகமிகவிரியும், சுருங்கக்கூறின் மிகவும் எஞ்சும்; இங்ஙனமாதலின், எங்களால் முடித்தற்கு அடங்காதேனும் அறிந்தவாறு பாடுவேம்" எனக் கூறியதை நோக்குமிடத்துப் பலரும் தமதுவென்றிப் பாட்டை யறிந்து ' தம்மைப்பெருமைப்படுத்தற்கு வாயில், புலவர்கள் இயற்றும் செய்யுட்களே என அக்காலத்தரசர் கருதினமை புலனாகும். புலவர்களும், இல்லது கூறி ஏத்தும் பொய்க் கவிகள் அல்லராகி, விழுமிய புகழைத்தேடற்கு முயன்றும், பிறர்க்குப் பரிந்துதவும் செய்கைகளில் முனைந்து நின்றும், குடிகளை இனிதோம்பிப் பலபோர் முனைகளில் வீரத்தோடு சென்று வெற்றிகொண்டும், இன்பம் நிரம்ப நல்லிசைப் புலவர் வாய்ப்பாடல்களை எதிர்பார்க்குமாறு அரசர்களை ஏவுதற்குப் பொருட்டாயிருந்தனர்.

நமது நாவலர்கள், பரிசில் பெறுதற்கு அரசரைக்காணப் புகும்போது அவர்களைக் கைகொடு தழுவி அணைத்துக்கொள்ளும் வழக்கமும் உடையராயிருந்தனர் எனக் கீழ்ப்போதரும் செய்தி உணர்த்துகின்றது. இங்ஙனம் புலவர்கள் தழுவுதலை அரசர்கள் தமக்குப் பெருமையெனக் கொண்டிருந்தனர் போலும். பெருந் தலைச் சீத்தனர் இளங்கண்டீரக் கோவைப் புல்லிக்கொண்டு அவனருகிருந்த இளவச்சிரக்கோவைப் புல்லாதொழிதலும், இளவச்சிரக்கோ புலவரை நோக்கி "நீர் எம்மைப் புல்லாது

சிறுமை கூர்வித்தல் என்னை?'' என வினவ, அப்புலவர் "ஆடவர் இல்லாக்காலத்துப் பெண் யானைகட்குப் பூணணிந்து அவர்பெண்டிரும் பாடுநர்க்குப் பரிசில் வழங்கும் குடிப்பிறந்த கண்டீரக்கோவாகலின் இவரைப் புல்லினேன். நீயும், கொடை மிக்க நன்னன் மரபில் வந்தனையாதலின் எமது தழுவுதல் பெறற்குரியை யாயினும், பாடுநர்க்கு ஓர்கால் கதவடைத்த காரணத்தால் எம்மனோர் நுமது மலையைப் பாடாதுவரைந் தனர், யான் என் செய்கோ'' என்றுரைத்தமை காண்க.

மதுரைக்குமரனார் என்னும் நல்லிசை நாவலர், "அரசர்கள் நாளோலக்கத்து அமயம் தெரியவேண்டு மென்பதின்றி, எப் போதேனும் தலை நிமிர்ந்து செருக்கொடு சேறல் எம்மனோர்க் கெளிது. பிறமன்னர்கட்காயின், புலிதூங்கும் காட்டில் ஆடு களுடன் இடையன் புகுதல் எப்படி அரிதோ அப்படி அரிய தொன்றாகும்'' என்று கூறியவாற்றால், புலவர்கள் வேண்டும் போதெல்லாம் தடையறச்சென்று தம் கல்வித்திறங் காட்டி அரசர்பாற் பரிசில்பெறுமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தென்று கொள்ளக்கிடக்கின்றது. ஓர் புலவருடைய கைகளைப் பற்றிக்கொண்டு ஓர் அரசன், "என்னே நும்கை இத்துணை மென்மையதாயிருந்தது!'' எனவியந்து கேட்டதற்கு அப்புலவர் "வேந்தே! போர் முகத்தில் யானையை அங்குசம் கடாவி வேண்டுமளவில் நிறுத்தவும், தாவிப்பாயும் குதிரைகளின் கடி வாளம்பற்றி ஈர்க்கவும், வில்லில் அம்புகளைத் தொடுத்தெய்யவும் பரிசிலர்க்குப் பொற்குவை வாரிவழங்கவும் நின் முழங்கால் வரையில் நீண்ட கைகள் வன்மையவாகும். சோற்றைஉருட்டி எடுத்து வாரி வாய்க்கு வழங்கும் தொழிலால் வருந்துவதன்றி வேறுதொழிலறியாமையின் நின்னைப்பாடும் எம்கைகள் இங் ஙனம் மென்மையவாகின்றன'' என்று விடை கூறினர். இக் காலத்துச் செல்வர் சிலரைப்போல் தமிழ்ப்புலவர்களைக் காண வெறுப்புற்று விலக்காது, அவர்களோடு இனி தளவளாவித் தழுவியும் மெய்தொட்டுத் தடவியும் நன்கு மதித்து வந்த அக்காலச் செல்வர்களின் தமிழ்ப்பற்றினாலன்றோ அரும்பெரும் தமிழ்நூற்கள் வெளிவந்து தமிழகத்தைப்பெரிதும் அணியுறுத்து வனவாயின. (தொடரும்.)